# BIBLE SOLUTIONS TO HUMAN PROBLEMS

# மனித பிரச்சனைகளும் வேதாகம தீர்வுகளும்


ஆசிரியர்

J.C. சோட் (USA)



*Published By*

**J.C. CHOATE PUBLICATIONS**

Madurai, India.

BIBLE SOLUTIONS TO HUMAN PROBLEMS (Tamil)
Author : **J.C. Choate** (USA)

© Copyright Reserved

First Print : September 2006
Language : Tamil
Wrapper + Pages 88

Translation & Proof Reading : V. Kingsly Rajah
Layout and Design : P.R. Bevery Lydia

Printed and Published by
**P.C. Philemon Rajah** (M.A., M.Th.)
(Editor - Kirubaiyulla Varthai, T.V. Speaker)

**Order from :**
**Kirubaiyulla Varthai**
Immanuel Illam, G-11, Vairamalai,
Valar Nagar, Uthangudi, Madurai - 625 107.
India. E-Mail : graciousword@hotmail.com
Visit : www.graciousword.org
Cell : 92 4421 4421

Donation : Rs.40/-

# அறிமுகம்

இந்திய தேசத்தில் வெளிவரும் அநேக புத்தகங்கள் பிற கலாச்சாரத்தைச் சார்ந்தவையாகும். அவற்றில் சில உள்ளூர் நிலைமைகட்கு ஏற்ப இருந்தாலும், எல்லாம் அப்படிப்பட்டதல்ல. இந்த புதிய ஆராய்ச்சிப் புத்தகத்தில் உள்ளூர் கிறிஸ்தவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளைக் கையாள முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு பிரச்சனையையும் திருச்சபையில் உள்ள ஒவ்வொரு கிறிஸ்தவரும் எதிர்நோக்குகின்றனர் என்பதைச் சொல்லும்படி அல்ல; மாறாக ஒவ்வொரு திருச்சபையையும் சார்ந்த அநேக அங்கத்தினர்கள் இவற்றில் எல்லாவற்றிலும் இல்லாவிட்டாலும் சிலவற்றில் ஈடுபட்டுள்ளனர்.

சாதாரணமாக, ஒரே புத்தகத்தில் எல்லா பிரச்சனைகளின் சூழ்நிலைகளையும் ஆராய்ச்சி செய்வது இயலாத ஒன்று; ஆயினும் இங்கே உள்ளவைகள் முக்கியமான சில ஆகும். சிலர் இப்புத்தகத்தில் கூறப்பட்டுள்ள பிரச்சனைகளில் சிக்கியுள்ளதால், அதை அவர்கள் தவறு என்று உணராததால் அதை அவர்கள் தவறு என்று நினைப்பதும் கிடையாது; மேலும் அவர்கள் அதை நியாயப்படுத்தவும் முயற்சி செய்வர். ஆனால் என்னை நம்புங்கள். இப்புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு தலைப்புகளும் பொதுவான மக்களைப் பற்றிப் பேசுவதால், தனிப்பட்ட கிறிஸ்தவர் மற்றும் திருச்சபை சந்திக்கும் பிரச்சனைகளைக் குறிக்கிறது.

ஏதோ குற்றம் கண்டுபிடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் எந்த ஒரு முயற்சியும் நாங்கள் செய்யவில்லை. மாறாக, வசனத்திலிருந்து வேதாகமத் தீர்வைக் கண்டுபிடிக்கும்படியாக, முதன்முறையாக பிரச்சனைகளை நேருக்கு நேர் ஆய்வு செய்கிறோம். நாம் திறந்த மனதுடன் தேர்ச்சியடையும்படி கற்றுக் கொள்ளும்படி படித்தால், இந்த பாடங்களில் இருந்து நாம் அதிகமாக பயனடைய முடியும்.

இங்கே பிரச்சனைகள் சுருக்கமாக விளக்கப்பட்டு, ஒருவர் சரியான தீர்வை பெறும்படி, வாசித்து ஆராய்ச்சி செய்ய வசனங்களும் கொடுக்கப் பட்டுள்ளன. மேலும், தொடர்ந்து நீங்கள் விவாதித்து, படிப்பதற்கென ஒவ்வொரு தலைப்பிலும் கேள்விகளும் கேட்கப்பட்டுள்ளன.

ஒரு தனிநபர் இப்புத்தகத்தினால் நல்ல பயன்பெற முடியும். என்றாலும், இப்புத்தகம் குழுவாக அமர்ந்து படிப்பதற்கென வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள அனைத்து திருச்சபைகளும் வேதத்தை ஆராய்ச்சி செய்ய முற்படுவதையும், அதற்கென ஒரு முழுவருடப் பாடப் புத்தகமாக இப்புத்தகத்தை பயன்படுத்துவதையும் நாங்கள் காண விரும்புகிறோம். இப்புத்தகம் அப்படியே பயன்படுத்தப்பட்டு நிறைய பயன்தர வேண்டும் என்பதே ஆசிரியரின் விருப்பமாகும்.

**- J.C. Choate,** U.S.A.

# புத்தகத்தைப் பற்றி...

அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தில் வாழ்த்துக்கள். இன்று கிறிஸ்தவர்களுக்குள்ளும் உலகத்தின் சாயல் படிந்த அநேகப் பிரச்சனைகள் அல்லது பாவங்கள் புரையோடிப்போய் உள்ளது. மேலோட்டமாகப் பார்த்தால், அவைகள் மனிதனுக்கு பாவத்தைப் போலவே தெரிவது இல்லை. ஆனால் இவை, மனிதனின் பரலோகக் கனவை, பரிசுத்த வாழ்வை பாழ்படுத்தக் கூடியதாகும்.

இந்த மனிதப் பிரச்சனைகட்கு, வேதாகமத்தின் துணைகொண்டு நாமே தீர்வு காணும்படி இப்புத்தகத்தை ஆசிரியர் வடிவமைத்துள்ள விதம் மிகவும் அருமை! மீனைப் பிடித்து, சமைத்து, ஊட்டி விடும் விதமாய் எழுதப்படும் புத்தகங்களுக்கு இடையில் நாமே மீன்பிடிக்க கற்றுக் கொள்ளும்விதமாய் எழுதப் பட்டுள்ள இப்புத்தகம் ஒவ்வொரு கிறிஸ்தவர் கையிலும் இருக்க வேண்டியது அவசியம்.

தீர்மானங்களைத் திணிக்காமல் நாமே வேதாகமத்தின் அடிப்படையில் தீர்மானங்களை எடுக்க இப்புத்தகம் உதவி செய்கிறது. கற்றுக் கொள்ளும் எண்ணத்துடனும், நேர்மையான மனதுடனும் இப்புத்தகத்தைப் படிக்கும் ஒவ்வொருவருக்கும் நிச்சயமாக இப்புத்தகம் 100% பலன் தரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இப்புத்தகத்தை வாசிக்கும் உங்கள் ஒவ்வொருவர் வாழ்விலும், இதனால் உண்டான மாற்றங்களை மறவாமல் எங்களுக்கு எழுதுங்கள்.

உங்களுக்காக ஜெபிக்கிறோம்!

*உங்கள் அன்புள்ள,*



**P.C. பிலேமோன் ராஜா** M.A., M.Th

ஆசிரியர் & T.V. செய்தியாளர்

(கிருபையுள்ள வார்த்தை)

Principal - Petros Bible College.




**கிருபையுள்ள வார்த்தை**

**தமிழ் மாத இதழ்**

உலகப் புகழ்பெற்ற போதகர்களின் செய்திகளுடன், உங்கள் வாழ்வை வளப் படுத்தும் கருத்துக்கள், இன்றே உங்கள் "இலவச" பிரதியை எழுதிப் பெறுங்கள்.

**THE VOICE OF TRUTH INTERNATIONAL** MAGAZINE



Avail Free World Class English Magazine from the hands of ***Bro. J.C. Choate & Sis. Betty Choate.*** Wonderful Topics on Christian Living, Evidences, Bible Characters, Worship, Christian Home, Comfort and Reassurance, Church and Lot more...

# ஆசிரியர்களுக்கான அறிவுரைகள்

இந்த பயிற்சிப்பாடம் வெற்றி பெற ஆசிரியர்களின் பங்கே அதிகமானது. தயவுசெய்து பின்வருபவற்றை மனதில் கொள்ளவும்.

1. நீங்கள் மற்றவர்கட்கு கற்றுக் கொடுக்குமுன், முதலாவது நீங்கள் பாடங்களை நன்றாக படியுங்கள். இந்த பாடத்திற்காகவும் வகுப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

2. ஒவ்வொரு பாடத்தையும் அவைகளை நடத்தப் போகும் பல நாட்களுக்கு முன்பே ஆயத்தம் செய்து, நடத்தப் போகும் நாள் நெருங்க நெருங்க அந்தப் பாடத்தில் இன்னும் தயார் செய்து கொள்ளவும்.

3. பாடங்களை வகுப்பில் நடத்தும்போது உருவாகும் கேள்விகளை யூகித்து, அவற்றிற்கும் பதில் கொடுக்க ஆயத்தமாகுங்கள்.

4. வகுப்பில் பங்குபெறும் ஒவ்வொருவருக்கும் ஒரு பாடப்புத்தகம் இருக்கிறதா என உறுதி செய்யுங்கள்.

5. படிக்க வகுப்பிற்கு வருமுன் பாடங்களை படித்து வரும்படி ஒவ்வொருவரையும் உற்சாகப்படுத்துங்கள்.

6. வகுப்பு முழுவதும் சொற்பொழிவு செய்யாமல், அனைவரும் பங்குபெற உதவுங்கள்.

7. வசனங்களை வாசித்து, பிரச்சனைகளை விவாதித்து, ஒவ்வொருவரும் ஒரு தீர்வு கொடுக்க ஊக்கப்படுத்தி, ஒவ்வொரு தீர்வையும் முழுமையாக விவாதியுங்கள்.

8. வகுப்பு முடியுமுன் பிரச்சனைக்கு வசனத்தின்படியான ஒரு தீர்வை பெற்றுக் கொள்வதில் உறுதியாயிருங்கள்.

9. எதோடும் ஒத்துப் போகாமல் சத்தியத்திற்காக உறுதியாய் நில்லுங்கள்; ஆனாலும், அதை எல்லாம் மீதும் உள்ள அன்போடும் அக்கறையோடும் முரட்டுத் தனமாய் இல்லாமல் செய்யுங்கள்.

10. இந்தப் படிப்பில் உண்மையோடும், அக்கறையோடும் இருங்கள்.

11. ஒவ்வொரு வகுப்பிலும் வித்தியாசப்பட்டவர்களை பாடம் படிக்கவும், வசனம் வாசிக்கவும் நிர்ணயிக்கலாம்.

12. நல்ல, கற்றுக் கொடுக்கக்கூடிய, உணர்வூட்டும், பயனுள்ள படிப்பை சந்தோஷமாக படியுங்கள்.

வகுப்பை பயனுள்ளதாக மாற்ற மற்ற பல விஷயங்களும் இருக்கும் என்பதில் ஐயமில்லை; ஆனால் ஒரு ஆசிரியராக நீங்கள் உங்கள் வகுப்பை மதித்து நடக்க, செய்ய வேண்டியதை செய்து முடிக்கும் சிறந்த முயற்சியை உபயோகப்படுத்தி பயனுள்ளதாக மாற்றுவது உங்கள் கையில்!

# மாணவர்களுக்கான அறிவுரைகள்

இந்த குறிப்பிட்ட வகுப்பின் மாணவராக, உங்கள் குறிக்கோளானது கற்றுக் கொண்டு, இவைகளின் மூலம் எவ்வளவு நன்மைகளை பெற முடியுமோ, அவ்வளவு பெற வேண்டும். உங்களுக்கு விருப்பமில்லையெனில், தயவுசெய்து உங்கள் நேரத்தையும், உங்கள் ஆசிரியரின் நேரத்தையும், உங்கள் வகுப்பின் மற்ற சகமாணவர்கள் நேரத்தையும் வீணாக்காதீர். இந்த பாடத்தின் மூலம் உங்களுக்கு பயன் ஏதும் கிடைக்கவில்லையெனில், அதற்கு முழு காரணம் நீங்களேயன்றி, மற்றவர்களை குறை கூறாதீர். பாருங்கள்! நீங்கள் இதன்மூலம் பயன்பெற நேரமும் முயற்சியும் செலவழித்து கொஞ்சம் வேலை செய்ய இருக்கிறீர்கள். உங்களுக்கு பயன்தரும் சில குறிப்புகள்:

1. உங்கள் வீட்டிலும் இந்த பாடங்களை படிக்கும்படி உங்களுக்கென ஒரு புத்தகத்தைப் பெறுவீர்.
2. ஒவ்வொரு பாடத்திற்கும் கொடுக்கப்பட்டுள்ள வசனங்களைப் படித்து, தேவையான தயார் நிலையில் இருங்கள்.
3. உங்களுக்கு புரியாத வார்த்தை இருக்குமாயின் அகராதி (Dictionary) பயன்படுத்தி தெளிவுறுவீர்.
4. வீட்டிலும் சரி, வகுப்பிலும் சரி நீங்கள் படிக்கும்போது ஒரு நோட்டு மற்றும் பேனா வைத்துக் கொள்வீர்.
5. உங்கள் பாடத்திற்காக (கற்றுக் கொள்ளுதல்), ஆசிரியருக்காக, வகுப்பிற்காக ஜெபியுங்கள்.
6. வகுப்பிற்கு நேரப்படி செல்லுங்கள்; மேலும் ஒவ்வொரு வகுப்பிற்கும் தவறாமல் பங்கு பெறுங்கள்.
7. உங்கள் ஆசிரியர் மற்றும் வகுப்பு சகாக்களுக்கு மரியாதை கொடுங்கள்.
8. உங்கள் படிப்பை, வகுப்பை இடையூறு செய்யும் எதையும் செய்யாதீர்.
9. ஒவ்வொரு கேள்விக்கும் உண்மையை மட்டும் அறிந்து கொள்ளும் திறந்த மனதுடன் படியுங்கள்.
10. கேள்விகளை கேட்டு, மற்றவர்களுடைய கேள்விகட்கு பதில் கொடுத்து வகுப்பில் உற்சாகத்துடன் பங்கு பெறுவீர்.
11. வகுப்பில் விவாதம் செய்ய வேண்டுமே என்ற நோக்குடன் விவாதம் செய்யவும், வகுப்பை உங்கள் கட்டுப்பாட்டில் வைக்கும் முயற்சியிலே ஈடுபடாதீர்.
12. உங்கள் ஆசிரியரின் அறிவுரைகளை பின்பற்றுங்கள்.
13. உங்களுடன் சேர்ந்து மற்றவர்களும் இந்த பயனுள்ள வகுப்பில் பங்குபெற உற்சாகப்படுத்துவீர்.

உங்களுடைய இந்த படிப்பில் உங்களுக்கு 2 இலட்சியங்கள் இருக்க வேண்டும். முதலாவது, உங்களுடைய சொந்த தனிப்பட்ட தேவைக்கென இப்பாடங்களிலிருந்து நீங்கள் உண்மையை மட்டுமே கற்றுக்கொள்ள வேண்டும். இரண்டாவது, நீங்கள் உண்மையை கற்றுக் கொண்ட அனுபவத்திலிருந்து மற்றவர்களுக்கு இந்த சத்தியத்தை கற்றுக் கொடுக்க வேண்டும். இந்த பாடத்தின் அறிவுரைகளை உங்களுக்கே நீங்கள் அப்பியாசம் செய்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். நினைவில் கொள்வீர், எல்லாமே உங்கள் கையில்தான் உள்ளது.

# உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | பெயரை மாற்றுதல் | 1 |
| 2. | ஐக்கியம் | 2 |
| 3. | குழந்தை ஞானஸ்நானம் | 3 |
| 4. | பொய் பேசுதல் | 4 |
| 5. | ஆராதனையை தவறவிடுதல் | 5 |
| 6. | வெற்றிலை பாக்குப் போடுதல் | 6 |
| 7. | திருடுதல் | 8 |
| 8. | கடன் வாங்குதல் | 9 |
| 9. | திருச்சபைக்கு வெளியே திருமணம் செய்தல் | 10 |
| 10. | கெட்ட வார்த்தை பேசுதல் | 12 |
| 11. | காணிக்கை கொடுத்தல் | 13 |
| 12. | மதுபானம் குடித்தல் | 14 |
| 13. | சபைக் கூடுமிடம் | 15 |
| 14. | கல்லறைத் தோட்டம் | 16 |
| 15. | திருமண வைபவம் | 18 |
| 16. | வெளிநாட்டு பண உதவி | 19 |
| 17. | மனைவி மற்றும் பிள்ளைகளையும் திருமுழுக்கு எடுக்கச் செய்தல் | 20 |
| 18. | ஆண்டவரின் ஜெபம் | 21 |
| 19. | மதசம்பந்தமான விடுமுறைகள் | 22 |
| 20. | ஒழுங்கான ஆராதனை | 24 |
| 21. | வெளிநாட்டு கிறிஸ்தவ மிஷனெரி | 25 |
| 22. | சரியான நேரத்திற்கு வருதல் | 27 |
| 23. | பேய் பிடித்தல் | 28 |
| 24. | முழுநேரம் ஆண்டவர் பணி செய்தல் | 30 |
| 25. | குறி சொல்லுதல் | 31 |
| 26. | லாட்டரி டிக்கெட் வாங்குதல் | 32 |
| 27. | ஒழுங்கு செய்யப்பட்ட திருமணங்கள் | 33 |
| 28. | லஞ்சம் | 34 |
| 29. | துன்புறுத்தப்படுதல் | 35 |
| 30. | இளம் பிரசங்கியார்கள் | 36 |

## உள்ளே...


| | | |
|---|---|---|
| 31. | குற்றம் கண்டுபிடித்தல் | 37 |
| 32. | நேரப்பிரச்சனை | 38 |
| 33. | ஒரே பாத்திரம் | 39 |
| 34. | கர்த்தருடைய பந்தியில் கட்டுப்பாடு | 41 |
| 35. | நீள்மான முடிவளர்த்தல் | 43 |
| 36. | முழுங்கால் ஜெபம் | 44 |
| 37. | வேலை செய்யும் பெண்கள் | 45 |
| 38. | தூய்மையாயிருத்தல் | 47 |
| 39. | ஏழ்மை | 49 |
| 40. | புறங்கூறுதல் | 50 |
| 41. | பழிவாங்குதல் | 51 |
| 42. | புகைப்பிடித்தல் | 52 |
| 43. | திருச்சபையில் இசை | 53 |
| 44. | அற்புதங்கள் | 55 |
| 45. | மாய்மாலம் | 57 |
| 46. | தாழ்மை | 58 |
| 47. | நன்றி உணர்வு | 59 |
| 48. | மக்களுக்கு உதவுதல் | 61 |
| 49. | வேலை | 63 |
| 50. | சோம்பேறித்தனம் | 65 |
| 51. | அடக்கமாயிருத்தல் | 67 |
| 52. | பொருளாசை | 68 |
| 53. | மேற்கத்திய கலாச்சாரத்தை பின்பற்றுதல் | 70 |
| 54. | பரிணாமக்கொள்கை | 72 |
| 55. | நாட்டுப்பற்று | 73 |
| 56. | பிறர் பொருட்கள் மீது கரிசனை (அல்லது) அக்கறை | 74 |
| 57. | சினிமா (திரைப்படம்) | 76 |
| 58. | தவறுகளை உணருதல் | 77 |
| 59. | கடினமான போதகம் | 78 |
| 60. | முடநம்பிக்கை | 80 |

# பெயரை மாற்றுதல்

## CHANGING NAMES

**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

ஆதி. 17:5,15 — யோ. 5:43 — ஆதி. 32:28
வெளி. 3:5 — நீதி. 22:1 — மத். 10:1–4
பிர. 7:1 — மாற்கு 3:14–21 — உபா. 29:20
பிலி. 4:3

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

விக்ரம் கிறிஸ்தவராக முடிவு செய்தார். மற்ற அநேக காரியங்களோடு கூட அவர் தன்னுடைய தனிப்பட்ட பெயரை என்ன செய்வது என்று யோசித்தார். சிலர் ஆண்டவருக்குக் கீழ்ப்படிந்த பின் "கிறிஸ்தவப் பெயர்" மாற்றுவது வழக்கம் என்று அவருக்குத் தெரியும். அவர்கள் ஒரு மேலைநாட்டு பெயராக தங்களுடைய பெயரை மாற்றுவதைத் தவிர வேறொன்றும் செய்யவில்லை என அவருக்குத் தெரியும். இப்படிப் பெயர் மாற்றுவது அவசியம் என்றால், தானும் அதைச் செய்ய விரும்பினார். ஆனாலும் தன்னுடைய இயற்பெயரை அவர் விரும்பியதால் அதை வைத்துக் கொள்ள விரும்பினார். அதை வைத்துக் கொள்ள விரும்பினார். அவர் என்ன செய்ய வேண்டும்?

**சாத்தியமான தீர்வுகள் :**

1. அவருடைய சொந்தப் பெயரையே வைத்துக் கொள்ளுவது.
2. ஒரு மேலை நாட்டு பெயராக மாற்றுவது.
3. பைபிளில் இருந்து ஒரு பெயரை தேர்ந்தெடுப்பது.
4. இதைப் பற்றி நிறைய கிறிஸ்தவர்களிடம் பேசுவது.

**தொடர் விவாதத்திற்கு :**

1. உங்களுடைய பெயரை நீங்கள் மாற்றியுள்ளீர்களா?
2. இல்லையெனில், நீங்கள் ஏன் பெயர் மாற்றவில்லை?
3. ஆம் எனில், நீங்கள் ஏன் பெயரை மாற்றினீர்கள்?
4. ஒருவர் தன்னுடைய பெயரை மாற்ற வேண்டும் என இன்று வேதாகமம் எங்கு போதிக்கிறது?
5. ஒருவன் தன்னுடைய பெயரை மாற்றுவது தவறா?
6. மாற்ற வேண்டிய சில பெயர்கள் இருக்கின்றனவா?
7. ஒருவருடைய சொந்தப் பெயர் முக்கியமானதா?
8. ஒருவருடைய பெயரின் அர்த்தம், அதை மாற்றுவதற்கான முடிவுடன் தொடர்புடையதா?
9. பைபிளில் ஏன் சில நேரங்களில் பெயர் மாற்றப்பட்டுள்ளது?

# ஐக்கியம்
## FELLOWSHIP

**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

| | | |
|---|---|---|
| 1 கொரி. 10:20 | 1 யோ. 1:3 | 2 கொரி. 6:14 |
| 1 யோ. 1:6 | எபே. 5:11 | 1 யோ. 1:7 |
| அப். 2:42 | ரோமர் 16:17,18 | கலா. 2:9 |
| 2 யோ. 9,10,11 | பிலி. 1:4,5 | |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

சகோ. சேகர் ஒரு நாமகர்ணக் கூட்ட திருச்சபையின் பின்னணியில் இருந்து வந்தவர். அவர் ஆண்டவருடைய திருச்சபையில் அங்கமாகினாலும் அந்த பட்டணத்தில் உள்ள அநேக மதப்பிரிவுகளின் போதகர்களை அவருக்குத் தெரியும். மேலும், அவருடைய நண்பர்களில் அநேகர் அப்படிப்பட்ட சபைகளில் அங்கமாயுள்ளனர். அவர்கள் இவரை சகோதரர் என்று தொடர்ந்து அழைத்து, அவர்களோடு இன்னும் இவரை ஆராதிக்க அழைக்கின்றனர். ஆனால் அவர்களுடன் இனிமேல் ஐக்கியம் வைக்கக் கூடாது என்று சேகருக்குச் சொல்லப்பட்டது. அவர் என்ன செய்ய வேண்டும்?

**சாத்தியமான தீர்வுகள் :**

1. முந்தி செய்தது போலவே அவர்களுடன் சென்று ஐக்கியப்படலாம்.
2. அவர்களுடன் எந்தவித ஈடுபாடும் கொள்ள மறுத்து விடுவது.
3. கிடைக்கின்ற சந்தர்ப்பத்தில் எல்லாம் அவர்களுடைய மதத் தவறுகளை சுட்டிக் காட்டுவது.
4. அவர்களுடன் ஐக்கியப் படாமலே அன்புடன் அவர்களிடம் இருந்து சத்தியத்தை அவர்கட்கு போதிக்க முயல்வது.

**தொடர் விவாதத்திற்கு :**

1. மதரீதியாக தவறு செய்பவர்களுடன் கிறிஸ்தவர்கள் ஐக்கியம் வைப்பதில் என்ன தவறு இருக்கிறது?
2. ஒருவர் யாருடன் ஐக்கியம் வைக்க வேண்டும்?
3. ஐக்கியம் என்றால் என்ன?
4. மத உலகில் உள்ளவர்களோடு ஐக்கியம் கொள்வதினால் ஏதேனும் ஆதாயம் உண்டா?
5. ஏன் நாமகர்ணக் கூட்ட ஜனங்கள், நாம் அவர்களுடன் ஐக்கியப்பட வேண்டும் என விரும்புகின்றனர்?
6. நாம் அவர்களுடன் ஐக்கியம் வைக்க தவறும்போது அவர்கள் என்ன சொல்கின்றனர்?
7. மதரீதியாக தவறு செய்பவர்களை நாம் எவ்வாறு நடத்த வேண்டும்?
8. எந்த அளவிற்கு இத்தகைய ஜனங்களுடன் நாம் ஐக்கியம் வைக்கலாம்?
9. போதிப்பதற்காகவும், தொடர்புகளை பெறவும் நாம் அவர்களுடைய கூட்டங்களில் எப்போதாவது பங்கு பெறலாமா?

# குழந்தை ஞானஸ்நானம்
## INFANT BAPTISM

**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

மத். 18:1–6 அப். 2:38 மத். 28:19–20
கொலோ. 2:12 மாற்கு 16:15,16 அப். 22:16
ரோமர் 6:3–4

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

தாமஸ் மற்றும் மேரிக்கு புதிதாக குழந்தை ஒன்று பிறந்தது. அவர்களுடைய பெற்றோர் இருக்கும் ஒரு நாமகர்ண சபையை விட்டு, சமீபத்தில் தான் அவர்கள் வெளியேறி விட்டனர். ஆனாலும், அவர்கள் தங்கள் பெற்றோரால், குழந்தைக்கு ஞானஸ்நானம் (தெளித்தல்) கொடுக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். பைபிள் இப்படிப்பட்ட ஞானஸ்நானத்தைப் பற்றி பேசவோ, போதிக்கவோ இல்லை என்று தாமஸ் மற்றும் மேரிக்கு தெரிந்திருந்தாலும், குடும்பத்தில் அமைதி இருப்பதற்கு அவர்களுக்கு வேறு வழி தெரியவில்லை. இதைத் தவிர இப்படிச் செய்வதினால் என்ன தீமை? என்று அவர்கள் யோசித்தனர். இந்த காரியத்தை தாமஸ் மற்றும் மேரி ஆகிய இருவரும் எப்படி கையாள வேண்டும்?

**சாத்தியமான தீர்வுகள் :**

1. பெற்றோரின் விருப்பத்தோடு ஒத்துப் போவது.
2. இப்படி செய்ய முடியாது என தைரியமாக பெற்றோரிடம் சொல்லுவது.
3. அவர்களை சந்தித்து, இதை செய்ய முடியாது என வேத வசனத்தின் துணைக்கொண்டு ஆதாரத்துடன் கூறுதல்.
4. முழுவதையும் புறக்கணித்து விடுதல்
5. குழந்தை ஞானஸ்நானம் கொடுக்க மறுப்பது
6. இந்த காரியத்தைக் குறித்து, உங்கள் பகுதியில் இருக்கும் போதகரை அவர்களிடம் பேசச் செய்வது.

**தொடர் விவாதத்திற்கு :**

1. ஒரு குழந்தையை ஞானஸ்நானம் எடுக்க அனுமதிப்பதின் மூலம் வரும் சில விபரீதமான விளைவுகள் யாவை?
2. ஒரு குழந்தை "திருமுழுக்கு" பெற வேண்டுமா?
3. ஏன் அது அவசியமில்லை?
4. ஒருவர் எப்பொழுது திருமுழுக்கு பெற வேண்டும்?
5. வேதாகமத்து திருமுழுக்கு என்பது எது?
6. பைபிள் திருமுழுக்கு (ஞானஸ்நானம்) என்பதற்கான காரணங்களை கூறுக?

# பொய் பேசுதல்

**LYING**

**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

| | | |
|---|---|---|
| நீதி. 6:17 | அப். 5:1–11 | நீதி. 12:22 |
| நீதி. 19:22 | நீதி. 13:5 | 1 யோ. 2:22 |
| எபே. 4:25 | வெளி. 21:8 | |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

பொய் சொல்வது ஒரு பெரிய பிரச்சனை இல்லையென்றும், அது ஏற்றுக் கொள்ளப் பட்டதென்றும் நினைத்து ஜான் வளர்ந்தான். யாருக்காவது பதில் சொல்லும்போதோ, வாக்குக் கொடுக்கும்போதோ அது பொய்யோ இல்லையோ, அவன் தனக்கு வசதியானதை சொல்லி விடுவான். பின்பு ஜான் ஒரு கிறிஸ்தவனானான். அப்பொழுது, பொய் சொல்வது தவறு என்று அவனுக்குச் சொல்லப்பட்டது. ஆனால் அவனுக்கோ அது ஒரு யதார்த்தமான காரியமாகத்தான் தோன்றியது. உதாரணமாக, அவனுடைய வேலையில் அவன் விடுமுறை எடுக்க வேண்டும் என்றால், அவனுக்கு இருந்த வாய்ப்பு – யாராவது உறவினர் இறந்து விட்டார் என்று சொல்வது (அல்லது) குடும்பத்தில் யாருக்காவது உடல் சுகம் இல்லை என்று சொல்வதுதான். அவன் ஏதாவது வேலை செய்யவில்லை என்றால், அதற்கு ஏதாவது கதை சொல்லியே ஆக வேண்டும். அவனுக்கு அதுதான் வாழ்வாகவே இருந்தது. ஆனால், இது தவறு என்றால், அவன் என்ன செய்ய வேண்டும். பின்பு அவன் எப்படித்தான் வாழ முடியும்?

**சாத்தியமான தீர்வுகள் :**

1. பழைய மாதிரியே வாழ்வது.
2. கொஞ்சம் கொஞ்சமாக மாற்றிக் கொள்வது
3. சூழ்நிலையையோ, விளைவுகளையோ பற்றிக் கவலைப்படாமல் எப்பொழுதுமே உண்மையையே பேசுதல்.
4. சம்பந்தப் பட்டவர்களிடம் சென்ற தற்போதைய தேவையைக் கூறுதல்.

**தொடர் விவாதத்திற்கு :**

1. ஒருவர் உண்மையிலேயே எப்பொழுதாவது பொய் சொல்வதினால் நன்மையடைய முடியுமா?
2. பொய் சொல்வதினால் வரக்கூடிய சில பிரச்சனைகள் யாவை?
3. உண்மை சொல்வதினால் என்ன நன்மை (லாபம்)?
4. ஒரு பொய் சொல்லும் நபர் நித்தியமாக இரட்சிக்கப்பட முடியுமா?
5. ஏன் ஆண்டவர் பொய் சொல்வதைக் கண்டிக்க வேண்டும்?
6. உங்களிடம் ஒருவர் பொய் சொல்வதைப் பற்றி நீங்கள் என்ன நினைப்பீர்கள்?

# ஆராதனையை தவறவிடுதல்
## MISSING WORSHIP

**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

| | | |
|---|---|---|
| அப். 2:42 | யோ. 4:24 | அப். 20:7 |
| எபே. 5:19 | 1 கொரி.16:12 | கொலோ. 3:16 |
| 2 கொரி. 9:7 | எபி. 10:25 | |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

சுனில் சில நாட்களுக்கு முன்தான் கிறிஸ்தவரானார். அவர் எல்லா வகையிலும் சிறந்த மனிதர். ஆனால் அவருக்கு ஒரே பெரிய பிரச்சனைதான் இருந்தது. திருச்சபையினுடைய எல்லா ஆராதனைகளிலும் கலந்து கொள்வது அவருக்கு மிகவும் கடினம். சில நாள் அவர் சபையார் வீடுகளை சென்று சந்திப்பார். சிலநாள் வேலை இருக்கும்போது அலுவலகத்திற்கு சென்றுவிடுவார். இல்லையெனில் ஓய்வெடுப்பார். அவர் சில நாள் ஞாயிறு ஆராதனைகளில் கலந்து கொண்டாலும், மற்ற கூட்டங்களில் கலந்து கொள்ள சிறிதும் பிரயாசப்படமாட்டார். அவர், எல்லா திருச்சபைக் கூட்டங்களிலும் பங்கு பெற வேண்டுமா என்று கூட யோசிப்பார். மேலும் திருச்சபை ஆராதனைக்கு போக முடியாத நாட்களில், வீட்டிலிருந்தே ஆராதிக்கக் கூடாதா என்ன? என்று கூட நினைப்பார்.

**சாத்தியமான தீர்வுகள் :**

1. முடிந்தவரை அவர் எல்லா கூட்டங்களிலும் பங்கு பெற வேண்டும்.
2. இந்தக் காரியங்களைப் பற்றி அவருக்கு இன்னும் அதிகமான போதனை தேவை.
3. திருச்சபையிலே கூட முடியாத சூழ்நிலைகளில், அவர் வீட்டில் ஆராதிக்க வேண்டும்.
4. பொது ஆராதனைக் கூட்டங்கள் முக்கியமானதில்லாததால், அவர் இந்த காரியத்தைப் பற்றி கவலைப்பட தேவையில்லை.

**தொடர் விவாதத்திற்கு :**

1. ஒருவர் ஏன் ஆராதனையில் பங்கு பெற வேண்டும்?
2. ஒருவர் திருச்சபையில் எத்தனை கூட்டங்களில் பங்கு பெற வேண்டும்?
3. எப்பொழுது ஒருவர் ஆராதனையை தவறவிடும்போது அவரை மன்னிக்க வேண்டும்?
4. ஒருவர் ஆராதனையை தவறவிடுவதற்கான சில தடைகள் யாவை?
5. ஒருவர் ஒன்றுசேர்ந்து ஆராதிக்கும்படியாக ஒரு திருச்சபை அருகில் இருக்கையில், தனியாக ஆராதிக்கலாமா?
6. திருச்சபை அங்கத்தினர்கள் எல்லா கூட்டங்களிலும் பங்குபெறும்படி எவ்வாறு அவர்களை உற்சாகப்படுத்த முடியும்?
7. திருச்சபை அங்கத்தினர்கள் வேண்டும் என்றே ஆராதனையை தவற விடும்போது என்ன செய்யப்பட வேண்டும்?

# வெற்றிலை பாக்கு போடுதல்
## CHEWING BETEL NUT

**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

| | | |
|---|---|---|
| 1 கொரி. 3:16–17 | 1 யோ. 2:15–17 | 1 கொரி. 6:19 |
| யாக். 4:4 | 1 கொரி. 10:13 | 1 தீமோ. 5:22 |
| யாக். 1:12 | யாக். 1:27 | 2 பேதுரு 2:9, மத். 5:16 |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**


தான் சின்னப் பையனாக இருக்கும்போதிருந்தே ராஜுவுக்கு வெற்றிலைப் பாக்குப் போடும் பழக்கம் உண்டு. அதை உண்பது அவருக்கு ரொம்ப இஷ்டம். மேலும் அதினால், ஒவ்வொரு முறையும் ஒரு பான் கடையை கடக்கும்போதும் அதை வாங்கி சாப்பிடும்படியாக அவர் தூண்டப்படுகிறார். ஆனாலும், அவர் இப்போது கிறிஸ்தவராக மாறிவிட்டார்; மேலும் இந்தப் பழக்கத்தை அவர் விட்டுவிட வேண்டியுள்ளது. அதை வாங்கி சாப்பிடுவது அவருக்கு ஒரு பெரிய செலவாக தெரியாவிட்டாலும், காலம் செல்லச் செல்ல அது அவருக்கு பெரிய செலவு வைக்கும் என்று தெரியும். மேலும் அவர், எப்பொழுது அதை வாங்கிச் சாப்பிட்டாலும் அவருடைய நண்பர்களும், குடும்பத்தில் உள்ளவர்களும் எளிதில் தெரிந்து கொள்ளும்படியாக அவருடைய வாயும், பற்களும் கறைப் பட்டுவிடும். மேலும், இப்படி சாப்பிடுவது அவருக்கு வாய் புற்றுநோயை உண்டுபண்ணும் என்றும் அவரிடம் சொல்லப்பட்டுள்ளது. இது எல்லாம் அவருக்குத் தெரிந்திருந்தாலும், மற்றவர்கள் சாப்பிடுவதால் தானும் சாப்பிடலாம் என்று அவர் நினைக்கிறார். இந்த பழக்கத்தை அவர் விட்டுவிட வேண்டுமா? விட்டுவிட வேண்டுமென்றால் அவர் அதனை எப்படி செய்ய முடியும்?

**சாத்தியமான தீர்வுகள் :**

1. மற்றவர்கள் செய்வதைப் போல அவரும் அதைத் தொடர்ந்து சாப்பிடலாம்.
2. உடனடியாக அந்தப் பழக்கத்தை விட்டுவிட்டு, அதை திரும்பவும் உண்ணாமல் இருக்க ஆண்டவரிடம் உதவி கேட்கலாம்.
3. படிப்படியாக வெற்றிலைப் பாக்கு சாப்பிடுவதை விட்டுவிடலாம்.
4. வெற்றிலைப் பாக்கு சாப்பிடுவதற்கு பதிலாக சீவிங் கம் (Chewing Gum) சாப்பிடலாம்.
5. அந்தப் பழக்கத்தை விட்டுவிட்டதைப் போல நடித்துவிட்டு, அதை திருச்சபைக்கத் தெரியாமல் இரகசியமாகத் தொடரலாம்.

**தொடர் விவாதத்திற்கு :**

1. வெற்றிலைப் பாக்கு சாப்பிடுவதால் என்ன தவறு?
2. வெற்றிலைப் பாக்கு சாப்பிடுவதில் ஏதும் நல்ல விஷயம் இருக்கிறதா?
3. ஒருவர் வெற்றிலைப் பாக்கு சாப்பிடும் பழக்கத்துடன் கிறிஸ்துவையும் பின்பற்ற முடியுமா?
4. ஒரு கிறிஸ்தவர், இன்னொரு கிறிஸ்தவரை வெற்றிலைப் பாக்கு சாப்பிட ஊக்கப்படுத்தலாமா?
5. ஒருவர் வெற்றிலைப் பாக்கு சாப்பிடுவதன் மூலம் ஒரு நல்ல உதாரணம் ஏற்படுத்த முடியுமா?
6. இந்தப் பழக்கத்தை விட்டுவிட முடியுமா?



# திருடுதல்
## STEALING

**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

| | | |
|---|---|---|
| ரோமர் 2:21 | மத். 15:19 | எபே. 4:28 |
| 1 தீமோ. 2:1,2 | யோ. 10:10 | ரோமர் 13:13 |
| மாற்கு 10:19 | ரோமர் 12:17 | 1 தெச. 4:12 |
| 2 கொரி. 8:21 | எபி. 13:18 | 1 பேதுரு. 2:12, லூக். 8:18 |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

வங்கிகளை கொள்ளையடிப்பது, யாருடைய வாகனத்தையாவது திருடி விடுவது மற்றும் வீட்டை உடைத்து திருடுவது போன்ற குற்றங்களில் ஈடுபடுபவன் விஜய். ஆனால், அவனுடைய கஷ்டமான நிலைமையினால், இதையெல்லாம் செய்வது அவனுக்கு நியாயமாகப் பட்டது. உயிர்வாழ, எங்கு என்ன கிடைக்கிறதோ அதை எடுப்பது அவசியம் என நினைத்தான். அவனைப் பொறுத்தவரை, தாராளமாய் வைத்திருப்பவனிடமிருந்து ஒன்றுமில்லாத தான் எடுத்தால் தவறென்ன என நினைத்தான். இப்பொழுது விஜய் கிறிஸ்தவனாக மாறியதினால் இதையெல்லாம் மாற்றிக் கொள்ளனுமா என்ன?

**சாத்தியமான தீர்வுகள் :**


1. மற்றவர்களுடைய பொருட்களை எடுப்பதை அவன் உடனே நிறுத்திக் கொள்ள வேண்டும்.
2. ஏன் நேர்மையாக இருக்க வேண்டும் மற்றும் பிறர் பொருளை எடுப்பதில் என்ன தவறு என்பதைப் பற்றி அறிந்து கொள்ள அவன் வேத வசனங்களைப் படிக்க வேண்டும்.
3. கொஞ்சம் கொஞ்சமாக இந்த வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ளலாம்.
4. இந்தப் பிரச்சனையைப் பற்றி யாராவது ஒரு விசுவாசமுள்ள அங்கத்தினரிடம் பேசி, அவரிடம் உதவி கேட்கலாம்.
5. இதைக் குறித்து அடிக்கடி ஜெபம் செய்யலாம்.
6. பணக்காரர்களிடம் இருந்து மட்டும் தொடர்ந்து திருடலாம்.

**தொடர் விவாதத்திற்கு :**

1. அரசாங்கத்திற்கு சொந்தமான ஒன்றை எடுப்பது கூடத் தவறா?
2. ஒருவர் எவ்வளவுக்கு அதிகமாக நேர்மையாக இருக்க வேண்டும்?
3. ஒருவர் எந்தெந்த வகையில் எல்லாம் நியாயமாக (நேர்மை) இருக்க வேண்டும்?
4. உங்களிடம் ஒரு நேர்மையில்லாத நபர் வேலைப் பார்ப்பதை நீங்கள் விரும்புவீர்களா?
5. நேர்மையாக இருப்பதினால் வரக்கூடிய சில ஆசீர்வாதங்கள் என்ன?

# கடன் வாங்குதல்

## PAYING DEBITS



**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

ரோமர் 13:8
ரோமர் 12:17
2 கொரி. 8:21
1 தீமோ. 5:8
1 தீமோ. 4:12
1 பேதுரு 2:21
லூக். 7:41
லூக். 16:5

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

ஜேக்கப் அதிகமாக சம்பாதிப்பது இல்லை. அவருடைய அன்றாட செலவினங்களுடன் சேர்த்து குடும்ப செலவுகளையும் சந்திக்க வேண்டிய கட்டாயம். இதை சரிசெய்ய, அவர் அவ்வப்போது கடன் வாங்க வேண்டிய நிலைமை. அவர் தன்னுடைய நண்பர்களிடமோ, கடன் கொடுப்பார்கள் என தான் நம்பும் யாரிடமோ சென்று பணம் வாங்குவார். பின்பு, அவர் வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்துவதில் அவருக்கு அடிக்கடி சிக்கல் ஏற்படும்.

**சாத்தியமான தீர்வுகள் :**

1. தன்னுடைய வருமானத்திற்குள்ளேயே வாழ்ந்து பழகுதல்.
2. இன்னும் அதிகமாக சம்பாதிக்கும்படியாக ஒரு நல்ல வேலையை கண்டுபிடிப்பது.
3. தனக்குக் கடன் கொடுத்தவர்கள் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லும்வரை வாங்கிய பணத்தைப் பற்றி மறந்து விடுவது.
4. தான் யாரிடம் பணம் கடன் வாங்கினாரோ, அவர்களிடம் சென்று தன் நிலையை விளக்குவது.
5. முடிந்தளவு சீக்கிரமாய் எல்லா கடன்களையும் கட்டிவிடுதல்.

**தொடர் விவாதத்திற்கு :**

1. தன்னால் திரும்பச் செலுத்த முடியாது என்று தெரிந்தும் ஒருவர் கடன் வாங்கலாமா?
2. ஒருவர் எவ்வளவு கடன் வாங்கலாம்?
3. உண்மையிலேயே வாங்கிய கடனை திரும்பச் செலுத்த மறப்பது சரியா?
4. ஒருவர் வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்த மறுத்தால் என்ன நடக்கும்?
5. ஒருவர் வாங்கிய கடனை நேர்மையாக திரும்பச் செலுத்தினால் என்ன நன்மை உண்டாகும்?
6. கடன் என்றால் என்ன?
7. கடன் வாங்குவதற்கான சில காரணங்களை குறிப்பிடுக:–

# திருச்சபைக்கு வெளியில் உள்ளவர்களை திருமணம் செய்தல்

## MARRYING OUTSIDE THE CHURCH

**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

ரோமர் 12:1,2 — 1 கொரி. 10:12 — 2 கொரி. 6:14

1 கொரி. 15:33 — 1 தீமோ. 4:12

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

இஸ்ரவேல், திருமணம் செய்து கொள்ளலாம் என நினைக்கிறார். அவர் ஒரு கிறிஸ்தவராயிருப்பதினால், திருச்சபைக்குள்ளேயே ஒரு கிறிஸ்தவப் பெண்ணை திருமணம் செய்ய நினைக்கிறார். ஆனால் அவருடைய திருச்சபை மிகவும் புதியதானதால், அங்கு ஒரு (இளம் வயது) கிறிஸ்தவ பெண்ணும் இல்லை. ஒரு நாமகர்ண கூட்ட சபையை சேர்ந்த நல்ல பெண்ணைக் கண்டுபிடித்து திருமணம் செய்து, பின்பு மனம்மாற செய்து விடலாம் என்று அவர் நினைக்கிறார். கொஞ்ச காலத்தில் அவருடைய திருச்சபையிலேயே, சில பெண்கள் ஆண்டவருக்கு திருமுழுக்கில் கீழ்ப்படியக் கூடும். ஆனால் அவர் அவர்களுக்காய் காத்திருக்க விரும்பவில்லை. மேலும் அவர் பிற இடங்களில் உள்ள திருச்சபைகளில் இருந்து, பெண்களை தேடலாம். ஆனால் இதினால் நேரமும், பணமும் செலவாகும் என்பதால் அவர் அதை விரும்பவில்லை. மேலும் அவரிடம் இரண்டுமே அதிகமாக இல்லை. ஞானமான முடிவு என்னவாயிருக்கும்?

**சாத்தியமான தீர்வுகள் :**

1. எவ்வளவு சீக்கிரமாய் மனமாற்ற முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் மனமாற்றி விடலாம் என்ற எண்ணத்துடன் உடனே திருச்சபைக்கு வெளியே உள்ள பெண்ணை திருமணம் செய்து கொள்ளுதல்.
2. அந்த பெண் கிறிஸ்தவரானால்தான், அவரை திருமணம் செய்ய முடியும் என அவரிடம் உறுதியாக கூறுதல்.
3. அந்த பெண்ணுக்கு சத்தியத்தைப் போதித்து திருமணத்திற்கு முன்பே மனமாற செய்தல்.
4. ஒரு சாதகமான நேரம் வரும்வரை திருமணத்தை தள்ளிப்போடுதல்.
5. பெண் எந்த மதம் என்பதைப் பற்றிக் கவலைப் படாமல், அவருடைய பெற்றோரின் விருப்பப்படி திருமணம் செய்தல்.

**தொடர் விவாதத்திற்கு :**

1. திருச்சபைக்குள் தான் திருமணம் செய்ய வேண்டும் என்பது ஏன் முக்கியம்?
2. விசுவாசமில்லாத ஒரு துணையை ஒருவர் பெறுவதனால் உண்டாகும் சில பிரச்சனைகள் என்னென்ன?
3. திருமணத்திற்கு முன்பு ஒருவர் எவ்வாறு, ஒரு பெண் கிறிஸ்தவர் ஆக மாற போதிக்க வேண்டும்?
4. திருச்சபைக்கு வெளியே திருமணம் செய்வதை பைபிள் தடை செய்கின்றதா?
5. ஒழுங்கு செய்யப்பட்ட திருமணத்தால் ஏதேனும் தவறு உண்டா?



# கெட்ட வார்த்தை பேசுதல்
## BAD LANGUAGE

**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

| | | |
|---|---|---|
| யாக். 4:11 | ரோமர் 12:14 | யாக். 1:26 |
| யாக். 3:19 | யாக். 3:6–8 | யாக். 5:12 |
| சங். 34:1,3 | மத். 5:34–36 | 1 பேதுரு 3:10 |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

ரமேஷ் ஒரு நல்ல பையன். அதற்கும் மேல் அவன் ஒரு நல்ல கிறிஸ்தவனாக இருக்க விரும்புகிறான். ஆனாலும், அவனிடம் திருந்த வேண்டிய ஒரே ஒரு குணம் உள்ளது. அது கெட்ட வார்த்தை பேசுவது. அவனுடன் வேலைப் பார்க்கிற நபர்கள் அடிக்கடி அசிங்கமான காரியங்களைப் பேசுவது வழக்கம். மேலும், அவனுடைய நண்பர்களும் கூட அடிக்கடி சாபமான வார்த்தைகளும், கேளிப் பேச்சும் கெட்ட வார்த்தைகளும் பேசுவதுண்டு. இதன் எல்லாவற்றின் விளைவாக ரமேஷ் கூட தன்னை அறியாமல் சில வார்த்தைகளை பயன்படுத்துகிறார். இந்த கெட்டப் பழக்கத்தில் இருந்து அவன், தன்னை எவ்வாறு விடுவித்துக் கொள்ள முடியும்?

**சாத்தியமான தீர்வுகள் :**

1. கெட்ட வார்த்தை பேசும் எல்லாரிடம் இருந்து விலகுதல்.
2. பேசும் வார்த்தைகளைக் குறித்து கவனமாய் இருந்து, ஜெபம் செய்து நல்ல வார்த்தைகளைப் பயன்படுத்தத் தகுந்த முயற்சி எடுத்தல்.
3. நண்பர்கள் பேசும் வார்த்தைகள் தவறானது என்று அவர்களிடம் பேசுவது.
4. மற்றவர்கள் பேசும்பொழுது அமைதியாக இருத்தல்.
5. தவறாக பேசுபவர்கள் கூட்டத்தில் மட்டும் இந்த கெட்ட வார்த்தைகளை பயன்படுத்திக் கொள்வது.

**தொடர் விவாதத்திற்கு :**

1. சபித்தல் என்றால் என்ன?
2. கெட்ட வார்த்தை என்றால் என்ன?
3. கெட்ட வார்த்தைகளை பயன்படுத்துவது யாருக்காவது உதவி செய்யுமா?
4. ஏன் ஒருவர் கெட்ட வார்த்தைகளை பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும்?
5. ஒரு கிறிஸ்தவன், தான் என்ன பேசுகிறான் என்பதைப் பற்றி கவனமாக இருக்க வேண்டுமா?

# காணிக்கை கொடுத்தல்

## GIVING

**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

| | | |
|---|---|---|
| 1 கொரி. 16:2 | அப். 5:1–11 | 2 கொரி. 9:7 |
| அப். 2:42 | அப். 20:35 | மத். 6:33 |
| அப். 2:44,45 | மத். 6:24 | |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

பவுலுக்கு நல்ல சம்பளம் கிடையாது. மேலும் அவன் எப்போதும் காணிக்கைப் பையில் ஒவ்வொரு ஞாயிறு ஆராதனையிலும் ஒரு ரூபாய் மட்டுமே போடுவார். அவருடைய சம்பளம் ரொம்ப கொஞ்சமாக இருப்பினும் அவர் இன்னும் அதிகமாகக் காணிக்கைக் கொடுக்க வேண்டும். ஆனால், தன்னுடைய எல்லா குடும்பச் செலவுகளுக்கு மேல் இதைவிட, அதிகமாகக் காணிக்கை கொடுக்க தன்னால் இயலவில்லை என்று அவர் கூறுகிறார். ஆனால், அவசியமான செலவுகளுக்கு அப்பாற்பட்டு, பொழுதுபோக்குக் காரியங்களான ஊர்களுக்கு செல்வது மற்றும் தனிப்பட்ட செலவுகளுக்கு அவரிடம் பணம் உள்ளது. தன்னுடைய காணிக்கையை குறித்து பவுல் என்ன செய்ய வேண்டும்?

**சாத்தியமான தீர்வுகள் :**


1. தேவனுக்கு ஒரு குறிப்பிட்டத் தொகையைக் கொடுக்கத் தீர்மானம் செய்து, மற்ற செலவுகளை செய்வதற்கு முன்பே இதை தனியே எடுத்து வைத்தல்.
2. ஒவ்வொரு வாரமும் என்ன மீதம் உள்ளதோ அதை மட்டும் கொடுப்பதையே தொடர்வது.
3. வசனத்தின்படி எப்படி கொடுக்க வேண்டும் என கற்றுக் கொள்ளுதல்.
4. காணிக்கை கொடுப்பதைப் பற்றி மற்ற கிறிஸ்தவர்களுடன் பேசுதல்.

**தொடர் விவாதத்திற்கு :**

1. ஒவ்வொரு வாரமும் ஒருவர் எவ்வளவு காணிக்கைக் கொடுக்க வேண்டும்?
2. ஏன் அவர் கொடுக்க வேண்டும்?
3. ஒருவர் தன்னுடைய சம்பளம் எதுவாயிருப்பினும் வசனத்தின்படி காணிக்கை கொடுக்க முடியுமா?
4. வசனத்தின்படி காணிக்கை கொடுப்பதினால் வரும் ஆசீர்வாதங்கள் என்ன?
5. பைபிள் சொல்வதுபடி காணிக்கை கொடுக்காவிட்டால் யாருக்கு நஷ்டம்?

# மதுபானம் குடித்தல்

## DRINKING



**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

எபே. 5:18 | கலா. 5:21 | 1 தீமோ. 3:3,8
1 கொரி. 6:10 | 1 பேதுரு 4:3 | 1 கொரி. 5:11
1 தீமோ. 5:23 | நீதி. 23:29–35 | ரோமர் 13:13
நீதி. 20:1

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

வினோத் ஒரு வசதியான வீட்டு பையன். எப்பொழுது வேண்டுமானாலும் அவருக்கு போன் வரும். உடனே மது பார்டிதான். எந்த பார்டியிலும், திருமணங்களிலும் வினோத் எப்பொழுதும் மதுவில் மிதப்பது வழக்கம். ஏதாவது ஒட்டலுக்கு சாப்பிட சென்றால் உடனே அங்கு பீர் சாப்பிடுவது வழக்கம். கிறிஸ்தவர்கள் மது அருந்தக்கூடாது என்று அவரிடம் சொல்லப்பட்டது. ஆனால், அதினால் ஒரு தவறும் இல்லை என்று அவர் நினைத்தார். இனி மதுபானம் சாப்பிடுவதில்லை என்பதை அவர் எவ்வாறு தன்னுடைய நண்பர்கள் மற்றும் தொழில் முறை சகாக்களுடன் தெரிவிப்பது? மேலும், அவர்கள் வினோத்தை பார்க்க வரும்போது, இவர் அவர்கட்கு மது பார்டி கொடுக்காவிட்டால் அவர்கள் என்ன நினைப்பார்கள்? என்ன செய்வது?

**சாத்தியமான தீர்வுகள் :**


1. பைபிளைப் படித்து, அது மது அருந்துவதைப் பற்றி என்ன போதிக்கிறது என்று கற்றுக் கொள்வது.
2. தான் மது குடிப்பதை விட்டுவிட தீர்மானம் செய்து விட்டதாக தன் நண்பர்களிடம் விளக்கிச் சொல்வது.
3. தொடர்ந்து மது குடிப்பதை வழக்கமாக்கிக் கொண்டு, திருச்சபைக்கு மட்டும் தன்னுடைய செயல்தெரியாமல் பார்த்துக் கொள்வது.
4. மது குடிப்பதற்கு பதிலாக குளிர்பானம் குடிப்பது.

**தொடர் விவாதத்திற்கு :**

1. குடிப்பது ஏன் தவறு?
2. ஒருவர் பீர் மட்டும் குடிக்கலாமா?
3. முந்தைய காலத்தில் மது (Wine) மருந்தாக பயன்பட்டதா?
4. மது குடிப்பது ஒருவர் மனதிலும், உடலிலும் பாதிப்பை ஏற்படுத்துமா?
5. விசேஷங்களுக்கு குடிக்கும் பழக்கம் ஒருவரை குடிக்கு அடிமையாக்கும் (குடிகாரர்) அபாயம் உண்டா?
6. எந்த வகை மக்கள் பொதுவாக குடிப்பார்கள்?

# சபை கூடுமிடம்

## A MEETING HOUSE



**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

அப். 20:7
1 கொரி. 16:19
1 கொரி. 10:11
ரோமர் 16:5
அப். 2:42
எபி. 10:25
பிலமோன் 2

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

ஆராதனை செய்யவும், பிற வேலைகளை செய்யவும் ஒரு திருச்சபைக்கென்று சொந்த இடமிருக்க வேண்டும் என அநேகர் நினைக்கின்றனர். அதே நேரம் ஜனங்களை ஒரு பொது இடத்திலோ, பள்ளி கட்டிடத்திலோ, வீட்டிலோ கூட்டுவது என்பது சிறுது சிரமமே. அப்படி கூடுபவர்களைப் பொருத்தமட்டில், அப்படிக் கூடுமிடங்கள் ஒரு தற்காலிக இடம் என்ற எண்ணமே இருக்கும். ஆனால் நாம் புதிய ஏற்பாட்டில் பார்த்தால், எங்குமே திருச்சபை ஒரு சொந்த கட்டிடம் வைத்திருந்ததாக இல்லை. சபை கூடியது என்பது உண்மையே! ஆனால் சபை பலதரப்பட்ட இடங்களில் கூடியிருக்கிறது; மேலும் ஒரு முறைக்கும் மேலாக சபையானது கிறிஸ்தவர்களின் வீடுகளில் கூடியதாக உள்ளது. இடம் மற்றும் கட்டிடங்களுக்கான அதிகப்படியான விலை காரணமாக, மேலும் ஒரு இடத்தில் சொந்த கட்டிடத்தில் சபை இருப்பதினால் எல்லாரும் பிரயாணம் செய்ய வேண்டிய பிரச்சனைகளின் காரணமாக, சபைகள் நகரம் முழுவதும் வீடுகளில் கூடும்படி சிதறியிருப்பதும் நல்லதுதான். இந்தப் பிரச்சனையில் ஜனங்களின் மனதை மாற்ற என்ன செய்யலாம்?

**சாத்தியமான தீர்வுகள் :**

1. சபை என்றால் என்ன? என்றும், சபைக் கூடுமிடத்தைப் பற்றி வேதாகமம் என்ன கூறுகிறது? என்றும், எல்லாருக்கும் உணர்த்தலாம்.
2. மக்களை சத்தியத்திற்கு திருப்பிவிட்டால், சபை கூடுமிடம் அவர்கட்கு முக்கியமாகத் தெரியாது.
3. இன்று இருக்கும் மத உலகின் மனநிலை காரணமாக, நாமும் ஒரு இடத்தை வாங்கி சொந்தக் கட்டிடம் கட்டினால் நலமாயிருக்கும்.

**தொடர் விவாதத்திற்கு :**

1. சபைக்கென்று சொந்தமாக கூடுமிடம் இருப்பதினால் உள்ள நன்மைகள் யாவை?
2. சபைக்கென்று சொந்தமாக கூடுமிடம் இருப்பதினால் உள்ள தீமைகள் யாவை?
3. வீடுகளில் சபை கூடுவதினால் உள்ள ஆசீர்வாதங்கள் யாவை? இடையூறுகள் யாவை?
4. சபைக் கூடுவதற்கான மற்ற சில இடங்களை குறிப்பிடவும்?
5. ஒரு பிராந்திய சபை கூடுவதற்கான இடத்தின் பொறுப்பு யாருடையது?

# கல்லறைத் தோட்டம்

## A BURIAL PLACE

**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

| | | |
|---|---|---|
| மாற்கு 6:29 | லூக். 16:22 | மத். 23:29 |
| அப். 5:9,10 | நியா. 8:32 | அப். 8:2 |
| ஆதி. 23:6 | லூக். 9:59,60 | யோ. 5:28,29 |
| மத். 6:33 | வெளி. 20:13 | |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**


மோசஸ் மற்றும் அவருடைய மனைவி ஆகிய இருவரும் ஒரு நாமகர்ணகூட்ட சபையைச் சேர்ந்தவர்கள். அங்கத்தினர்கள் என்ற முறையில் மற்ற சலுகைகளுடன் அவர்களுக்கும், அவர்கள் குடும்பத்தாருக்கும் கல்லறை தோட்ட வசதி அவர்கட்கு உண்டு. அதாவது, அவர்கள் குடும்பத்தில் யார் மரிக்க நேர்ந்தாலும் அடக்க ஆராதனையையும், புதைக்க தேவையான ஏற்பாடுகளையும் அந்த திருச்சபையே (நாமகர்ண சபை) பொறுப்பேற்கும். ஆனாலும், புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தப் பற்றிக் கேள்விப்பட்டபின், அவர்கள் மிகவும் ஆவலுடன் படித்து, ஆண்டவருடைய ஒரே சபையில் அங்கமாகும் சாத்தியங்களை மேற்கொண்டு வருகின்றனர். தங்களுடைய அங்கத்தினர்களை அடக்கம் செய்ய கிறிஸ்துவின் சபை என்ன ஆயத்தங்களை மேற்கொண்டுள்ளது என அவர்கள் கேட்டனர். அவர்களை பொறுத்தவரை இது ஒரு முக்கியமான விஷயம். அவர்கட்கு என்ன பதில் கொடுக்க வேண்டும்?

**சாத்தியமான தீர்வுகள் :**

1. அவர்கள் நடைமுறையின்படி, இப்பொழுது அவர்களுக்கு கல்லறைத் தோட்டத்தை உறுதி செய்யும் மதப்பிரிவுடனேயே இருக்கலாம்.
2. அவர்கள் தேவனுக்கு முதலிடம் கொடுத்து இந்த தேவைகளை எல்லாம் அவர் ஏற்ற நேரத்தில் நடத்துவார் என்று முடிவு எடுக்கனும்.
3. இப்படிப்பட்ட காரியங்களை பேசியதால் அவர்கள் உடனே கண்டிக்கப்பட வேண்டும்.
4. இந்த மனிதனுக்கும் அவருடைய குடும்பத்திற்கும் அவர்கள் கிறிஸ்தவர்கள் ஆகும் முன் அதிகமாக போதிக்கப்பட வேண்டும்.

**தொடர் விவாதத்திற்கு :**

1. ஒரு கல்லறைத்தோட்டம் அவசியம்தானா?
2. ஏன் மக்கள் கல்லறைத் தோட்டத்தை இவ்வளவு முக்கியத்துவப் படுத்துகிறார்கள்?
3. உங்கள் வாழ்க்கையில், மரித்தும் அடக்கம் பண்ணப்படாமலே விடப்பட்ட யாரையாவது பார்த்துள்ளீர்களா?
4. மரித்தவர்களை எரிப்பதில் ஏதேனும் தவறு உண்டா?
5. செத்தவர்களை அடக்கம் பண்ணுவதைவிட முக்கியமானது என்ன?
6. தங்களுடைய சகோதர சகோதரிகளுக்கு ஒரு சரியான அடக்கம் கிடைப்பதைப் பற்றி கிறிஸ்தவர்கள் கவலைப் படுவார்களா?



# திருமண வைபவம்
## A MARRIAGE CEREMONY



**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

யோ. 2:1,2 | எபே. 5:23 | எபி. 13:4
ரோமர் 13:1,2 | ரோமர் 7:1–4 | 2 கொரி. 6:14–18
மத். 25:1–13

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

திருமணத்திற்காக காத்திருக்கும் நிறைய பிள்ளைகள் சகோதரன் மகேஷ் மற்றும் அவரது மனைவிக்கு உள்ளனர். அவர்களுடைய பிள்ளைகளுக்கு ஒரு திருச்சபை போதகர் திருமணம் செய்து வைக்க வேண்டும் என அவர்கள் நினைக்கின்றனர்; ஆனால், அந்த பிராந்திய சபையில் திருமணத்தை நடத்தும் அரசினால் அங்கீகாரம் பெற்ற யாரும் இல்லை. அவர்கள் திருமணத்தை நடத்தி வைக்கும்படி அவர்கள் ஒரு நாமகர்ண சபை போதகரிடம் செல்லலாம். ஆனால் அப்படி செய்ய அவர்கள் விரும்பவில்லை. இப்பொழுது அவர்கள் என்ன செய்வது?

**சாத்தியமான தீர்வுகள் :**

1. திருச்சபையின் பிள்ளைகள் திருமணத்திற்குத் தயாராவதற்கு முன், திருமணத்தை நடத்தி வைக்கும் உரிமம் பெற சபையில் உள்ளவர்கள் தேவையான முயற்சி எடுக்கனும்.
2. சட்டப்படி திருமணத்தை அரசில் பதிவு செய்தபின், போதகர் திருமண ஆராதனையை நடத்தி வைக்க வேண்டும்.
3. சமுதாயத்தில் (பதிவு அலுவலகத்தில்) மட்டும் திருமணம் செய்து கொள்ள வேண்டும்.
4. திருமணம் நடத்தி கொள்ள ஒரு நாமகர்ண் சபைக்கட்டிடத்தை நாடி, அந்த போதகரே திருமணம் நடத்த அனுமதி கோருவது.

**தொடர் விவாதத்திற்கு :**

1. திருமண பந்தம் நிலைத்திருக்க வேண்டுமானால் அதை ஒரு போதகர் நடத்த வேண்டுமா?
2. ஒரு நாமகர்ண கூட்ட திருச்சபை போதகரை வைத்து திருமணம் நடத்துவதினால் உள்ள சில பிரச்சனைகள் என்ன?
3. ஒரு திருச்சபை திருமணத்தின் நோக்கம் என்ன?
4. உரிமம் உள்ள ஒரு போதகரை, இன்னொரு இடத்தில் உள்ள திருச்சபையில் நடக்கும் திருமணத்திற்கு அனுப்புவது பற்றி என்ன?
5. திருச்சபையின் மூலம் நடக்கும் திருமணம் என்றால் என்ன?

# வெளிநாட்டு பண உதவி

## FOREIGN SUPPORT



**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

| | | |
|---|---|---|
| 1 தெச. 4:11 | அப். 20:34 | அப். 18:3 |
| 1 தெச. 2:9 | 1 கொரி. 4:2 | 2 தெச. 3:8 |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

ஏற்கனவே சபை இல்லாத இடத்தில் ஒரு புதிய ஊழியத்தை ஆரம்பிக்க, எப்பொழுதுமே ஒரு வெளிஉதவி அவசியம். இது ஒருவேளை கிறிஸ்தவ இலக்கியங்களை அச்சடித்து கொடுப்பதற்காகவோ, மக்கள் கூடிவந்து வேதாகமத்தை படிக்க ஒரு இடத்தை வாடகைக்குப் பிடிக்கவோ, தபால் வழி திருமறைப் பாடங்களுக்காக தபால் செலவுக்காகவோ, மேலும் அந்த பகுதியில் ஊழியம் செய்யும் ஊழியக்காரனுக்கு ஒரு சின்ன சம்பளமாகவோ இருக்கலாம். ஆனால் இப்படிப்பட்ட வேலைகட்கு எவ்வளவு கொடுக்க வேண்டும் மற்றும் எவ்வளவு காலம் கொடுக்கப்பட வேண்டும். வெகு நாட்களுக்கு பிரசங்கிமார்களுக்கு சம்பளம் கொடுத்து, வாடகைக்கு எடுப்பதையும், சபைக் கூடுமிடம் கட்டுவதையும், மற்ற எல்லா பொருளாதார தேவைகளையும் சந்திப்பதை இது உள்அடக்குமா? இப்படிப்பட்ட உதவிகள் குறைந்த அளவில் செய்யப்படும்போது அந்த ஊழியத்திற்கு பெரிய உதவியாக இருக்கும். ஆனால் அது அளவில்லாமல் போகும்போது அந்த உதவியே உருவாக்குவதற்கு பதில் ஊழியத்தை அழித்து விடும். இதைத் தவிர்க்க, பிராந்திய சபையின் சகோதரர்கள் அந்த சபை சுயமாக உதவிப் பெற்றதற்காக அடையும்வரை தொடர்ந்து ஊழியம் செய்யனும். இது எப்படி முடியும்?

**சாத்தியமான தீர்வுகள் :**

1. பிராந்திய சபையே அதின் ஊழியக்காரர்களுக்கு உதவி செய்யத்தக்க வகையில் ஊழியத்தைக் கட்டுதல்.
2. பிரசங்கியார் தன்னைத்தான் காப்பாற்றிக் கொள்ள ஒரு உலக வேலைக்கும் போவது.
3. சபை ஒரு வீட்டிலோ, ஏதோ ஒரு பொது இடத்திலோ ஆராதிக்கலாம்.
4. தொடர்ந்து வெளிநாட்டு உதவி பெற்றுக் கொண்டே இருக்கலாம்.

**தொடர் விவாதத்திற்கு :**

1. வெளிநாட்டு உதவி பெறுவதினால் வரக்கூடிய சில இடையூறுகள் யாவை?
2. ஒரு பிராந்திய சபையின் மக்களே அதின் ஊழியக்காரருக்கும், அந்த சபைக் கூடும் இடத்திற்கும் கொடுக்க திராணி இருக்கும்போது, அங்கு வெளிநாட்டு உதவி அவசியமோ?
3. இப்படிப்பட்டக் காரியங்களுக்கு பிராந்திய சபை மக்களால் தேவைகளை சந்திக்க முடியாதபோதும், அவர்களுக்கு வெளிநாட்டு சகோதரர்கள் உதவ வேண்டுவது அவர்கள் கடமையா?
4. அநேக இடங்களில் ஸ்தாபிக்கப்பட்ட சபைகளில் இருந்த சகோதரர்கட்கு பவுல் உதவி செய்ததாக புதிய ஏற்பாட்டில் எங்கேயாவது வாசிக்கின்றோமா?

# மனைவி மற்றும் பிள்ளைகளையும் திருமுழுக்கு எடுக்கச் செய்தல்

## BAPTIZING WIFE AND CHILDREN

**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

| | | |
|---|---|---|
| மாற்கு 16:15,16 | பிலி. 4:3 | மத். 28:19,20 |
| 1 தீமோ. 2:12 | அப். 2:37,38 | தீத்து 2:3,4 |
| அப். 9:36 | 1 பேதுரு 3:5 | அப். 17:34 |
| எபே. 5:23 | 1 கொரி. 14:34,35 | அப். 16:13–15 |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

தீபக் சுவிசேஷத்தைக் கேட்டு அதற்குக் கீழ்படிய விரும்பினார். ஆனால், அவர் திருமுழுக்கு எடுப்பதற்கு முன், வீட்டிற்குச் சென்று தன்னுடைய மனைவி மற்றும் பெரிய பிள்ளைகளும் தன்னுடன் திருமுழுக்கு எடுக்கும்படியாக அவர்கட்கும் சொல்ல வேண்டும் எனக் கூறினார். வீட்டின் தலைவனாக அவர் எடுக்கும் ஒரு நல்ல தீர்மானத்திற்கு, அவர்களும் உடன்பட்டு தன்னுடன் சேர வேண்டும் என தீபக் விரும்பினார். இந்தப் பிரச்சனையை எப்படி கையாள்வது?

**சாத்தியமான தீர்வுகள் :**

1. தன்னுடைய குடும்பத்தினர் வசனத்தின்படி ஆண்டவருக்கு கீழ்ப்படியும் முன், அவர்களுக்கு சத்தியம் கற்றுக் கொடுக்கப்பட்டு அவர்கள் தானாகவே தீர்மானம் எடுக்க தருணம் கொடுக்கப்பட வேண்டும்.
2. அவருடைய செயல் தவறு என கடிந்து கொள்ளுதல்.
3. அவருடைய முடிவின்படியே காத்திருந்து அவருடைய குடும்பத்தினரையும் திருமுழுக்குப் பெறச் செய்தல்.

**தொடர் விவாதத்திற்கு :**

1. சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவது என்று வரும்போது, குடும்பத்தில் ஒருவராக இருந்தாலும், ஒருவர் மற்றவர்களாக முடிவு எடுக்க முடியுமா?
2. எந்த சூழ்நிலைகளில், மனைவி கணவனுக்கு கீழாக அடங்கி நடக்கனும்?
3. ஒரு கணவன் தன்னுடைய மனைவி மற்றும் குடும்ப அங்கத்தினர்களின் மீது மதசம்பந்தமான முடிவுகளை திணிக்கலாமா?
4. தேவனுடைய சட்டம் என்னவென்று தெரிந்து கொள்ளாமலே ஒருவர் அவருக்கு கீழ்ப்படிய முடியுமா?

# ஆண்டவரின் ஜெபம்

## THE LORD'S PRAYER



**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

மத். 6: 9–13 1 தெச. 5:17 யோ. 17:1–26

1 யோ. 5:14 லூக். 18:1

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

ஜான் நிறைய இடங்களுக்கு கிறிஸ்துவினுடைய சபை ஆராதனைகளுக்கு சென்றிருக்கிறார்; ஆனால், தொடர்ந்து அங்கு போகாமல் நின்று விட்டார். ஏன் அவர் தொடர்ந்து வரவில்லை என்று அவரை சந்தித்து கேட்டபோது, அவர் சொன்னது: சபையின் அங்கத்தினர்கள் ஒருபோதும் ஆண்டவருடைய ஜெபத்தை (பரமண்டல ஜெபம்) சொல்வதில்லை. மாறாக, மற்ற எல்லா நாமகர்ண சபைகளிலும் அந்த ஜெபம் சொல்லப் படுகிறது என்று. அவருக்கு எவ்வாறு பதில் கொடுப்பீர்கள்?

**சாத்தியமான தீர்வுகள் :**

1. மற்ற எல்லா சபைகளும் அந்த ஜெபத்தை சொல்வதினால் தவறு செய்கின்றனர் என்று உடனே அவருக்கு சுட்டிக் காட்டுவது.
2. மத். 6:9–13ல் உள்ளது ஒரு 'மாதிரி ஜெபம்'தானே தவிர அது ஆண்டவரின் ஜெபம் அல்ல என விளக்கிக் காட்டுவது.
3. நாம் ஜெபத்தில் நம்பிக்கை வைத்துள்ளோம். ஆனால், ஆண்டவர் நாம் பாரம்பரியத்தை பின்பற்றுவதை விட நம்முடைய சொந்த ஜெபத்தையே சொல்ல விரும்புகிறார் என்று அவருக்கு உறுதிபட சொல்வது.
4. ஜான் மற்றும் சிலரை திருப்திபடுத்த ஒவ்வொரு ஆராதனையிலும் அந்த ஆண்டவருடைய ஜெபத்தை (பரமண்டல ஜெபம்) சேர்த்துக் கொள்வது.

**தொடர் விவாதத்திற்கு :**

1. "ஆண்டவருடைய ஜெபத்திற்கு" ஏன் முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது?
2. நாம் வசனத்தின்படி இன்றும் அதே ஜெபத்தை ஏறெடுக்க முடியுமா?
3. இன்று மதவட்டாரத்தில் பயன்படுத்தும் வண்ணமாக அந்த ஜெபத்தை பயன்படுத்த கிறிஸ்து நோக்கம் கொண்டிருந்தாரா?
4. ஆண்டவரால் ஏறெடுக்கப்பட்ட ஏதாவது ஜெபம் வேத வசனத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளதா? அப்படியானால் அது எங்கே?
5. இன்று அநேகரால் ஏறெடுக்கப்படும் விதத்திலேயே இந்த ஜெபம் பயன்படுத்தப் பட்டால் யார் அதினால் பயனடைவர்?
6. இந்த ஜெபத்தை ஏறெடுக்காமல் விடுவதால் ஏதாவது தவறு உண்டா?

# மத சம்பந்தமான விடுமுறைகள்

## RELIGIOUS HOLIDAYS

**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

| | | |
|---|---|---|
| கலா. 4:10,11 | 1 கொரி. 11:23–29 | கொலோ. 2:20–22 |
| மத். 26:26–28 | 2 யோ. 9 | அப். 2:42 |
| ரோமர் 16:17,18 | அப். 20:7 | |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

வருடம் முழுவதும் வரும் விடுமுறைகளை எப்பொழுதுமே ரவி சந்தோஷத்துடன் அனுபவித்துள்ளார்; குறிப்பாக மத விடுமுறைகளான கிறிஸ்துமஸ் மற்றும் ஈஸ்டர் ஆகியவைகளை கொண்டாடுவார். மற்ற விடுமுறைகளான தீபாவளி, ஹோலி மற்றும் ஈத் ஆகியவற்றையும் கொண்டாடுவார். கிறிஸ்துமஸ், ஈஸ்டர் ஆகிய பண்டிகைகள் உட்பட இப்படிப்பட்ட பண்டிகைகளை கிறிஸ்தவர்கள் கொண்டாடுவதில்லை என அவருக்குச் சொல்லப் பட்டது. அவர் இதுவரை செய்துவந்த பின்னனியை வைத்து பார்க்கும்போது அவரால் இதை புரிந்து கொள்ள முடியவில்லை. மதரீதியாக இல்லை என்றாலும் இந்த விடுமுறைகளை அனுபவிப்பதில் தவறு என்ன? அவருக்கு நீங்கள் எவ்வாறு பதில் அளிப்பீர்கள்?


**சாத்தியமான தீர்வுகள் :**

1. பைபிள் எங்குமே கிறிஸ்துமஸ், ஈஸ்டர் போன்ற பண்டிகைகளை கொண்டாடச் சொல்லிக் கற்றுக் கொடுக்கவில்லை.
2. இவை மனிதர்களால் தோன்றியவையே என அவருக்கு சுட்டிக் காட்டுதல்.
3. மத ரீதியாக இல்லாமல், சாதாரணமாக அவற்றைக் கொண்டாட அவரை ஊக்கப் படுத்துவது.
4. கிறிஸ்துவின் பிறப்பிற்குப் பதிலாக அவருடைய மரணத்தையே வேத வசனம் வலியுறுத்துகிறது என்றும்; ஆணடிற்கு ஒருமுறை ஆண்டவரை நினைப்பதற்கு பதிலாக ஒவ்வொரு வாரமும் நினைவுகூற வேண்டும் என அவருக்கு சுட்டிக் காட்டுகிறது.
5. ரவி மற்றும் சிலரை புண்படுத்தாதபடி ஒரு சமரசம் செய்துகொண்டு கிறிஸ்துமஸ் மற்றும் ஈஸ்டர் பண்டிகைகளை கொண்டாட அனுமதிக்கலாம்.

**தொடர் விவாதத்திற்கு :**

1. நாங்கள் மதப்பண்டிகைகளை கொண்டாட மட்டும்தான் செய்வோம்; ஆனால் அதை நம்புவதில்லை என ஒருவர் எவ்வாறு சொல்ல முடியும்?
2. கிறிஸ்தவர்களுக்குச் சம்பந்தமில்லாத பண்டிகைக் கொண்டாட்டங்களில் ஒருவர் பங்கேற்பதினால் அவர் என்ன சொல்லுகிறார்?
3. இந்தப் பண்டிகைகளினால் யார் பயனடைவர்?
4. ஏன் மக்கள் இவைகளில் பங்கு பெறுகின்றனர்?
5. ஒரு உண்மையான கிறிஸ்தவருக்கும் இந்த பண்டிகைகட்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா?
6. இப்படிப்பட்ட பண்டிகைகளைப் பற்றி ஒன்றும் தெரியாத மக்களுக்கு இதை கொண்டாடும் ஒருவர் என்ன முன்மாதிரி வைக்க முடியும்?





# ஒழுங்கான ஆராதனை
## ORDERLY WORSHIP

**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

எபி. 10:25 எபே. 6:4 1 கொரி. 14:40
கொலோ. 3:20,21 எபே. 6:1 1 தீமோ. 3:15
நீதி. 22:6

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

தங்களுடைய பிள்ளைகளை ஆராதனைக்கும் மற்ற கூட்டங்களுக்கும் அழைத்து வரும்படி, பிராந்திய சபையானது பெற்றாரை உற்சாகப்படுத்துகிறது. புரிந்துக் கொள்ளும் நிலையில் உள்ள பிள்ளைகளுக்கு பைபிளைக் கற்றுக் கொடுக்கும்படியாக அவர்கள் சபைக்கு அழைத்து வரப்பட வேண்டும். அம்மாக்கள் ஆராதனைக்கு வராமல் வீட்டிலேயே இருந்துவிடாதபடி கைக்குழந்தைகளும் ஆராதனைக்கு அழைத்துவரப்பட வேண்டும். மேலும் அவர்களும் கூட சிறு வயதில் இருந்தே ஆராதனையில் கலந்துக் கொள்ளும் பழக்கமுடையவர்களாய் வளர வேண்டியது அவசியம். ஆனாலும், அநேகப் பெற்றார் தங்கள் பிள்ளைகளை சரிவர கவனிக்காததால் பிரச்சனை எழும்புகிறது. அந்தப் பெற்றார் தங்களுடைய பிள்ளைகள் சபைக் கட்டிடத்தை சுற்றி ஓடவும், விளையாடவும், பேசவும், சத்தம் போடவும் அனுமதிக்கின்றனர். இது பிரசங்கிப்பவர்கள் ஆராதனை செய்பவர்களின் கவனம் சிதறும்படி செய்கிறது. இதைத் தடுக்க என்ன செய்யலாம்?

**சாத்தியமான தீர்வுகள் :**

1. இப்படிப்பட்டக் குழந்தைகளை வீட்டிலேயே விட்டுவிடலாம்.
2. ஆராதனை நேரத்தில் எல்லாக் குழந்தைகளையும் தனி அறையில் வைத்து கவனித்துக் கொள்ள யாராவது ஒருவரை நியமிக்கலாம்.
3. ஒவ்வொரு பெற்றாரும் தங்கள் பிள்ளைகளைப் பற்றிய பொறுப்பேற்று அவர்கள் அமைதியாயிருக்க உதவ வேண்டும்.
4. இந்தப் பிரச்சனையை சபையிடம் தெரிவித்து, ஆலோசனை செய்து, ஒரு நல்ல தீர்வைக் காண வேண்டும்.

**தொடர் விவாதத்திற்கு :**

1. இந்தப் பிரச்சனைப் பற்றி ஏதாவது கருத்து தெரிவித்தாலே அந்தப் பெற்றாரின் மனம் வருத்தப்படாதா?
2. ஆராதனை நேரத்தில் சிறுபிள்ளைகள் பாத்ரூம் கூட போகாமல் கப்சிப் என்று அமைதியாக ஒரே இடத்தில் உட்காரும்படி எதிர்பார்க்கலாமா?
3. தங்களுடைய பிள்ளைகளை கவனித்துக் கொள்ளும் மிகச் சிறந்த வேலைகளை பெற்றோர்களால் செய்ய முடியுமா?
4. பிள்ளைகள், கூட்டம் நடக்கும் நேரங்களில் கவனிக்கப்படாமல் விடப்படும் போது அது மற்றவர்களுக்கு எப்படி இருக்கும்?
5. நம்முடைய ஆராதனைகளை நாம் எவ்வாறு சிறப்புடையதாக்க முடியும்?

# வெளிநாட்டு கிறிஸ்தவ மிஷனெரி
## THE FOREIGN MISSIONARY

**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

மாற்கு 16:15,16 கொலோ. 1:23 மத். 28:19,20
அப். 8 அப். 8:4

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

ஒருவர் தன்னுடைய சொந்த நாட்டை விட்டுவிட்டு இன்னொரு நாட்டில் போய் வாழ்வது எளிதல்ல. அவர்கள் சகித்தும், பொறுத்தும் கொள்ள வேண்டிய நிறைய புதுக்காரியங்கள் உண்டு. மேலும் ஒரு வெளி நபரை உள்நாட்டு மக்கள் எளிதில் ஏற்றுக் கொள்வதும் சிரமமே. ஒருவரை ஒருவர் குற்றம் கண்டுபிடிப்பது மிக எளிது. ஆனால் அந்த வெளிநாட்டு மிஷனெரி, தான் தேர்ந்தெடுத்த வேலையை இந்நாட்டில் செய்ய வந்த ஒரு விருந்தினர் என்றும், தான் வந்துள்ளதின் நோக்கத்தையும் உணர்ந்திருக்க வேண்டும். அதேப்போல், உள்நாட்டு மக்களும் தங்கள் நாட்டுக்கு வரும் வெளிநாட்டு சுவிஷேசகரை ஒரு புதியவர் என்ற அறிந்து, அவர் சிறிது காலம்தான் இங்கு இருக்கப்போகிறார் என்று தெரிந்து, அவரையும் அவருடைய குடும்பத்தாரையும் புரிந்துகொண்டு உதவி செய்யும் ஆர்வத்துடன் பார்க்கனும். வெளிநாட்டு சுவிஷேகரும் தான் வந்ததர்கான நோக்கத்தைப் புரிந்து கொண்டு, அவர் எந்த வேலைக்காக அனுப்பப்பட்டாரே அதை செய்து முடிக்க வேண்டும். அவரால் மனமாற்றம் அடைந்தோர், உலகப் பொருட்கள், சம்பளம், கூடும் இடங்கள் மற்றும் அவர்களுடைய வேலையை இவர் செய்ய வேண்டும் போன்ற அவருடையவைகளை எதிர்பார்க்கக் கூடாது. ஒருவருக்கொருவர் மரியாதையுடன், அன்புடன், ஒத்துழைப்புடன் இருந்தால் அநேக நன்மையானவைகளை செய்ய முடியும். ஏன் அடிக்கடி வெளிநாட்டு சுவிஷேசகருக்கும் உள்நாட்டு மக்களுக்கும் இடையே பிரச்சனைகள் உருவாகின்றது?

**சாத்தியமான தீர்வுகள் :**

1. வெளிநாட்டு சுவிஷேசகர் உள்நாட்டு மக்களை தவறாக வழிநடத்துதல்.
2. உள்நாட்டு மக்கள் வெளிநாட்டு சுவிஷேசகரிடம் எதிர்பார்ப்புடன் நடத்தல்.
3. ஒவ்வொருவரின் கடமை மற்றும் பொறுப்புகளைப் பற்றி இருவருக்கும் இடையே சரியான புரிந்து கொள்ளுதல் இல்லாமை.
4. இருவரிடமோ, இவர் அல்லது அவரிடமோ அன்பு குறைந்து இருத்தல்.

**தொடர் விவாதத்திற்கு :**

1. ஒரு வெளிநாட்டு சுவிஷேசகர் எவ்வளவு காலம் இருக்க திட்டமிட வேண்டும்?
2. உள்நாட்டு நபருக்கு வெளிநாட்டு சுவிஷேசகர் சம்பளம் தரவேண்டியது அவசியமா?
3. உள்நாட்டு சுவிஷேசகர்களுக்கு சம்பளம் கொடுப்பதினால் வரும் சில பிரச்சனைகள் என்ன?
4. வெளிநாட்டு சுவிஷேசகர், உள்நாட்டு ஊழியக்காரருக்கு சம்பளம் மற்றும் சபை கூடும் இடத்திற்கு பணம் ஆகியவை கொடுப்பது அவருடைய கடமையா?



# சரியான நேரத்திற்கு வருதல்

## BEING ON TIME

**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

அப். 20:7. மத். 5:16 எபி. 10:25

மத். 6:33 1 கொரி. 16:1,2

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

சரியான நேரத்திற்கு ஆராதனைக்கு வருவதில் அநேகருக்கு பிரச்சனை உண்டு. இது கூட்டதிற்கு வருவதில் தாமத்தையும், என்ன நடக்கிறது என புரிந்து கொள்ளாமையும், இடையூரையும் உண்டாக்குகிறது. அந்த நபருக்கு ஆர்வமில்லாமையும், கவனக்குறைவும், கருத்துவேற்றுமையும், பொறுப்பில்லா உணர்வும் இருப்பதை உணர்த்துகிறது. நம்மைச் சுற்றி நிறைய நிலையான மதிப்புள்ளவற்றை நாம் பார்த்தாலும், ஒரு ஆரம்ப கட்டத்துடன் நேரத்திற்கு செயல்படும் தன்மையுடையவையே எதையாவது பெற்றுத்தரும். இவை பள்ளிகளும், வேலைப்பார்க்கும் அலுவலகங்களும், திரையரங்குகளும், போக்குவரத்து கழகங்களும் தான். இவைகளோ அல்லது இதைப் போன்ற இன்னும் எத்தனை முக்கிய காரியங்களைவிட ஆண்டவரை ஆராதிப்பது அற்பமானதா? மக்கள் சரியான நேரத்திற்கு ஆராதனைக்கு வர நாம் என்ன செய்யலாம்?

**சாத்தியமான தீர்வுகள் :**

1. இதைப்பற்றி சபைக்கு போதிக்க வேண்டியது அவசியம்.
2. இந்த சூழ்நிலையை சாதாரணமாக எடுத்துக்கொண்டு, அதை விட்டுவிடுதல்.
3. மற்றவர்களுக்கு ஒரு நல்ல முன்மாதிரியை ஏற்படுத்தும்படி அங்க்த்தினரை உற்சாகப்படுத்தலாம்.
4. எல்லாருமே நேரத்திற்கு சபை ஆராதனைக்கு வரும் வகையில் நேரத்தை மாற்றலாம்.
5. தாமதமாக வருபவர்களைக் கணக்கில் எடுக்காமல் இருக்கலாம்.

**தொடர் விவாதத்திற்கு :**

1. ஏன் ஜனங்கள் நேரத்திற்கு சபை ஆராதனக்கு வருவதில்லை?
2. எல்லாரும் நேரத்திற்கு சபை ஆராதனைக்கு வந்து, நேரத்திற்கு ஆராதனையை துவங்குவதினால் உள்ள நன்மைகள் யாவை?
3. ஆராதனைக்கென்று ஒரு நேரத்தை நிர்ணயிப்பதிற்கான காரணங்கள் யாவை?
4. நேரத்திற்கு ஒரு இடத்திற்கு போகாமலிருப்பதில் உள்ள பிரச்சனைகள் யாவை?

# பேய் பிடித்தல்

## DEMON POSSESSION

**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

மத். 15:22 · அப். 13-4-13 · மாற்கு 5:18-20

அப். 19:13-16 · மத். 9:32-35 · 1 கொரி. 10:13

லூக். 4:33-37 · 2பேதுரு 2:9 · மத். 12:43-45

லூக். 11:14-26

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

ஜனங்களுக்கு பேய் பிடித்ததைப் பற்றியும், அது அவர்களை என்ன செய்ய வைத்தது என்பது பற்றியும் அநேக கதைகளை அலெக்ஸாண்டர் கேட்டிருக்கிறார். அந்த பேய் யாரைப் பிடித்துள்ளதோ, அவர்கள் மூலம் பேசவும், அவர்களை வியப்பான காரியங்களை செய்யவும் வைக்கும். பேய் பிடித்ததாகக் கூறப்படும் சிலர் வியப்பான வகையில் நடந்து கொள்வதையும் அவர் பார்த்துள்ளார். சில நாமகர்ணக் கூட்ட சபை போதகர்கள் வந்து இப்படி பேய் பிடித்தவர்களிடம் இருந்து பேயை விரட்டுவதாகக் கூறுவதையும் அவர் பார்த்துள்ளார். இன்று ஆச்சர்யத்துக்குரிய வகையில் மக்களை பிசாசு (பேய்) பிடிப்பது சாத்தியமானதா?

**சாத்தியமான தீர்வுகள் :**

1. ஒருவர், தான் கேள்விப்படும், கேட்கும் எல்லாவற்றையும் நம்பலாமா?
2. எல்லா மதத்தில் உள்ள மக்களும், தாங்கள் பிசாசுகளைத் துரத்துவதாகக் கோருகின்றனரா?
3. ஒரு நாமகர்ண (பிரிவினை) சபைப் போதகர் தேவனால் உண்டானவரல்ல, மாறாக பிசாசினால் உண்டானவர். அப்படிப்பட்டவர் பிசாசுகளைத் துரத்த முடியுமா?
4. கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்களின் காலத்தில் இருந்ததைப் போல இன்று பிசாசு யாரையும் பிடிப்பது இல்லை என அலெக்ஸாண்டர் மற்றும் அவரைப் போன்ற சிலர் உணர்ந்து கொள்ள வேண்டும்.
5. தேவன், பிசாசினை, இயேசுவின் மரணத்தின் மூலம் வென்று விட்டார் என்று உண்மைக்கு அப்பாலும் இவ்வுலகத்தில் ஆளுகை செய்பவனாக இன்றும் பிசாசு இருக்கிறான்.

**தொடர் விவாதத்திற்கு :**

1. கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலரின் காலத்தில் பிசாசு மனிதர்களைப் பிடித்ததின் நோக்கம் என்ன?
2. இன்று மக்களை பிசாசு பிடிக்கிறது என்று கோருபவர்கள் யார்?
3. பிசாசு பிடித்தவர்கள் என்று சொல்லப்படுபவர்களுக்கு எப்போதும் சரீர மற்றும் பெலவீனம்தான் இருக்கும் என்பது உண்மையா?
4. இன்று மக்கள்மீது பிசாசு எவ்வாறு வேலை செய்கிறான்?
5. ஒருவர் பிசாசின் பிடியில் இருந்து இன்று எவ்வாறு விடுதலை பெற முடியும்?



# முழுநேரம் ஆண்டவர் பணி செய்தல்

## WORKING FULL TIME FOR THE LORD

**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

| | | |
|---|---|---|
| மத். 28:19,20 | லூக். 22:35–37 | மாற்கு 16:15,16 |
| 1தீமோ. 5:18 | மத். 5:14–16 | மத். 9:38 |
| அப். 18:1–6 | 1 கொரி. 3:9 | அப். 19:9 |
| 2கொரி. 8:1–5 | லூக். 10:3–7 | |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

சாமுவேல், ஊழியம் செய்ய அதுவும் முழுநேரம் ஊழியம் செய்ய விரும்புவதாக கூறுகிறார். அப்படியானால் அதற்கு அர்த்தம், ஒரு சம்பளம் தேவை என்பதுதான். ஆனால் அவர் ஊழியம் செய்யும் சபை இளமையானதாகையால் (குறைந்த அங்கத்தினர்களுடன்) அவருக்கு சம்பளம் தருவது சாத்தியமல்ல. அதினால், அவர் ஒரு உலக வேலையை செய்து கொண்டே வாரக்கடைசியிலும், விடுமுறை நாட்களிலும், அவருக்கு தருணம் கிடைக்கும்போது எல்லாம் பிரசங்கிக்கும்படி அறிவுறுத்தப்பட்டார். ஆனால், அது அதிகமாக ஊழியம் செய்ய உதவாது என்று கூறி அவர் இந்த யோசனையை நிராகரித்து விட்டார். அவர் என்ன செய்ய வேண்டும்?

**சாத்தியமான தீர்வுகள் :**

1. வெளிநாட்டு பணஉதவியை எதிர்பார்த்திருக்கலாம்.
2. படித்து, தன்னைத்தான் பிரசங்கம் செய்ய ஆயத்தப்படுத்தலாம்.
3. அவருடைய வாழ்வின் தேவைகட்காக வேலை செய்து சம்பாதித்து, தருணம் கிடைக்கும்போது பிரசங்கம் செய்யலாம்.
4. சபை அவருக்கு சம்பளம் கொடுக்கும்வரை காத்திருக்கலாம்.

**தொடர் விவாதத்திற்கு :**

1. ஒரு மனிதன் சம்பளம் கிடைக்கும்வரை பிரசங்கம் செய்ய (ஊழியம் செய்ய) மறுப்பாரானால், அவர் கூலிக்காக வேலை செய்வதைப் போலாகுமா?
2. ஒருவர் எதினால் பிரசங்கம் செய்ய ஆர்வம் காட்டுகிறார்?
3. ஒருவர் பிரசங்கம் செய்வதற்கான சம்பளம் பெற வேண்டியது அவசியமா?
4. ஒருவர் பிரசங்கியாராக, ஆண்டவருக்கு எவ்வாறு சிறப்பாக ஊழியம் செய்ய முடியும்?
5. எல்லா கிறிஸ்தவர்களும் பிரசங்கம் செய்ய முயற்சி செய்ய வேண்டுமா?
6. முழுநேர ஊழியர்களுக்கும் மேலாக ஒரு சபைக்குத் தேவையானது என்ன?

# குறிசொல்லுதல்
## FUTURE TELLING

**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

அப். 8:9–24 1சாமு. 28:3–8 அப். 13:6–8
மீகா 5:12 அப். 19:19 யாக். 4:13–14

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

பீட்டர் சில காலமாக குறி சொல்லுபவரை சந்திப்பதை வழக்கமாக கொண்டிருந்தார். பல பிரச்சனைகட்கு ஆலோசனைப் பெறுவதற்காக அவர் அடிக்கடி குறி சொல்பவனை சந்திப்பதுண்டு. ஒரு கிறிஸ்தவனாக இப்படிச் செய்வது தவறு என்று அவருக்குச் சொல்லப்பட்டாலும், அதை அவர் மிகவும் உறுதியாக நம்பினதால் அதை விட்டுவிடுவது அவருக்கு சிரமமாய் இருக்கிறது. இதற்கு என்ன செய்யலாம்?

**சாத்தியமான தீர்வுகள் :**

1. உடனடியாக குறி சொல்பவனை சந்திப்பதை விட்டுவிடலாம்.
2. முன்பு போல தொடர்ந்து குறி பார்ப்பது.
3. குறி சொல்வதினால் ஒரு தவறும் இல்லை.
4. குறி கேட்வதை விட்டுவிடுவதற்கான காரணத்தை அவனிடமே சென்று சொல்லி விடுதல்.
5. இந்தக் காரியத்தைக் குறித்து பைபிளைப் படித்து, பைபிள் கற்றுத் தருவதின்படி செய்வது.

**தொடர் விவாதத்திற்கு :**

1. குறி சொல்வது என்றால் என்ன?
2. இந்தக் காரியத்தைப் பற்றி பைபிள் என்ன சொல்கிறது?
3. ஒருவர் மிகத் துல்லியமாக குறிசொல்ல முடியுமா?
4. குறி சொல்வது என்பது ஏன் தவறானது?
5. ஒரு கிறிஸ்தவர் குறி சொல்லுபவனிடம் செல்ல முடியுமா?

# லாட்டரி டிக்கெட்கள் வாங்குதல்
## LOTTERY TICKETS

**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

1தெச. 4:11 கலா. 6:7,8 2தெச. 3:10
நீதி. 11:28 2தெச. 3:12 பிரசங்கி 12:14
கலா. 6:4

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

அஜித் ஒருநாள் வெளியில் சென்றிருந்தபோது, ஒரு லாட்டரி விற்பவன் அவரை சந்தித்தான். அப்பொழுது அவன், ஒரு ரூபாய்க்கு டிக்கெட் வாங்கினால் ஒரு லட்சம் ரூபாய் பரிசு கிடைக்க வாய்ப்புண்டு என அஜித்திடம் கூறினான். அந்த லாட்டரி டிக்கெட் வாங்குவதால் நஷ்டப்பட ஒன்றுமில்லை. மற்றும் இலாபம்தான் நிறைய உண்டு என்ற எண்ணத்துடன், அஜித்தும் ஒரு டிக்கெட் வாங்கினார். ஆனால் நாட்கள் போகப் போக, ஒரு சமயம் இல்லாவிட்டாலும் இன்னொரு சமயம் பரிசு விழும் என்ற எண்ணத்துடன் அவர் நிறைய டிக்கெட் வாங்கினார். ஆனால் அவருக்கு பரிசு கிடைக்கவே இல்லை. ஆனாலும், அடுத்தமுறை அடுத்தமுறை என நிறைய முறை வாங்கினார். இதில் ஏதாவது தவறு இருக்கிறதா?

**சாத்தியமான தீர்வுகள் :**

1. அவர் தொடர்ந்து லாட்டரி வாங்க வேண்டும். மேலும், என்றாவது அவருக்கு பரிசு கிடைக்கும்.
2. இப்படிப்பட்ட சூதாட்டத்தில், இனியும் அவர் ஒரு பைசா கூட செலவிடக் கூடாது.
3. அவர் எப்போதாவதுதான் லாட்டரி டிக்கெட் வாங்க வேண்டும்.
4. சூதாடுவது தவறு என்று அவருக்கு வசனத்தில் இருந்து தெரிவிக்கப்பட வேண்டும்.

**தொடர் விவாதத்திற்கு :**

1. சூதாட்டம் என்றால் என்ன?
2. ஒன்றுமே இழக்காமல் எதையாவது பெற்றுக் கொள்ள முடியுமா?
3. லாட்டரி வாங்குதல், சீட்டு விளையாடுதல், குதிரையின்மேல் பந்தயம் கட்டுதல் போன்ற சூதாட்டங்களில் என்ன தவறு உண்டு?
4. இறுதியில், ஒருவர் உண்மையிலேயே சூதாட்டத்தினால் வெற்றி பெற முடியுமா?
5. ஒரு கிறிஸ்தவர் சூதாடலாமா?

# ஒழுங்கு செய்யப்பட்ட திருமணங்கள்

## ARRANGED MARRIAGES

**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

| | | |
|---|---|---|
| ஆதி. 2:4 | மத். 19:6 | ஆதி. 29:31 |
| மாற்கு 10:9 | ஆதி. 2:18–25 | 2கொரி. 6:14–18 |
| ரூத். 1 | 1கொரி. 7:10–16 | |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

தன்னுடைய திருமண வயதை சகோ. லால் அவர்கள் அடைந்து விட்டார். அவர், காலம் காலமாக ஒழுங்குசெய்யப்பட்ட திருமணங்கள் நடக்கும் பாரம்பர்ய குடும்பத்தில் இருந்து வந்தவர். மேலும், அவருடைய பெற்றோர் விசுவாசிகள் அல்லாதது ஒரு பிரச்சனையாகும். இயற்கையாக அவருடைய அப்பாவும் அம்மாவும் அவருக்கு ஒரு கிறிஸ்தவரல்லாத பெண்ணைத்தான் தேர்வு செய்வார்கள். சகோ. லால் தன்னுடைய பெற்றாரை நேசிக்கிறார் மற்றும் அவர்களுக்கு மரியாதை கொடுக்கிறார். ஆனாலும், அவர் ஒரு அவிசுவாசியை திருமணம் செய்ய விரும்பவில்லை. அவர் என்ன செய்ய வேண்டும்?

**சாத்தியமான தீர்வுகள் :**

1. திருமணத்திற்கு முன்பே அந்த பெண்ணிற்குப் போதித்து திருமுழுக்கு பெறச் செய்ய வேண்டும்.
2. அவர் தன்னுடைய பெற்றாருக்கு மரியாதைக் கொடுத்தாலும், தன்னுடைய வாழ்வை அவர்கள் அழிக்க அனுமதி கொடுக்கக் கூடாது.
3. இப்பொழுது திருமணம் செய்து விட்டு, அதன்பின் அந்தப் பெண்ணை வசனத்திற்குக் கீழ்படியச் செய்யலாம்.
4. சூழ்நிலைகளை தன்னுடைய பெற்றோருக்கு விளக்கிச் சொல்லி, அவர்கள் புரிந்து கொள்வார்கள் என நம்பலாம்.

**தொடர் விவாதத்திற்கு :**

1. ஒரு நாமகர்ண கூட்ட சபை நபரை திருமணம் செய்வதைப் பற்றி ஒருவர் என்ன நினைக்க வேண்டும்?
2. ஒழுங்கு செய்யப்பட்ட திருமணங்களால் ஏதும் தவறு உண்டா?
3. ஒழுங்கு செய்யப்படும் திருமணங்களால் என்ன நன்மைகள் உண்டு?
4. ஒழுங்கு செயயப்படும் திருமணங்களால் என்ன இடையூறுகள் (தீமைகள்) உண்டு?
5. ஒரு "காதல் திருமணத்தை" பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

# லஞ்சம்

## BRIBERY



**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

| | | |
|---|---|---|
| 1 சாமு. 8:3 | 1 தெச. 4:12 | 1 சாமு. 12:3,4 |
| எபி. 13:18 | சங். 26:9–10 | 1தீமோ. 2:12 |
| ஏசாயா 33:15,16 | ரோ. 12:17 | ஆமோஸ் 5:12,13 |
| 2கொரி. 8:21 | யோபு 15:34 | 2கொரி. 13:7 |
| மத். 28:9–15 | 1பேதுரு 2:12 | ரோமர் 13:13 |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

எந்த ஒரு சராசரி மனிதனும் லஞ்சம் என்னும் பிரச்சனையை எதிர்நோக்குகிறார்கள். ஒரு வேலையை வாங்கவும், யாரோ ஒரு முக்கியமான அதிகாரியைப் பார்க்கவும், போலீஸில் இருந்து பாதுகாப்பு பெறவும், ரேஷன் கடையில் பொருள் வாங்கவும் இது போன்ற அநேக காரியங்களை சாதிக்கவும் அவன் பணம் கொடுக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிறைய மக்கள் இப்படிப்பட்ட வாழ்க்கை முறையை அங்கீகரித்துக் கொள்கிறார்கள். ஆனால் ஒரு கிறிஸ்தவன் இவைகளை எவ்வாறு அணுக வேண்டும்?

**சாத்தியமான தீர்வுகள் :**


1. ஏதோ ஒன்றைப் பெற கொடுக்கும் பணத்தில் லஞ்சமும் ஒரு பகுதிதான் என அவர் நினைக்க வேண்டும்.
2. எந்த கேள்வியும் கேட்காமல் வழக்கத்தின்படியே அவர் ஒத்துப் போகணும்.
3. இது ஒரு பாவப் பழக்கம் என அவர் இதை புறக்கணிக்க வேண்டும்.
4. ஒவ்வொரு பிரச்சனையும் அதினுடைய சூழ்நிலைகட்கு ஏற்றாற்போல முடிவு எடுக்கப்பட வேண்டும்.
5. யாராவது லஞ்சம் கேட்டால், அவர் தகுந்த அதிகாரம் உள்ளவர்களிடம் புகார் செய்யணும்.

**தொடர் விவாதத்திற்கு :**

1. லஞ்சம் என்றால் என்ன?
2. லஞ்சம் எந்த விதத்திலும் சரியானதா?
3. லஞ்சம் ஒரு சட்டப்படியான செயலா?
4. லஞ்சம் வாங்காமல் ஒருவர் செய்ய வேண்டிய வேலைக்கு, ஒருவருக்கு லஞ்சம் கொடுக்கலாமா?
5. இந்தப் பிரச்சனையை நீங்கள் எப்படி கையாளுவீர்கள்?

# துன்புறுத்தப்படுதல்

## PERSECUTION



**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

| | | |
|---|---|---|
| சங். 119:86 | அப். 7:52 | மத். 5:10–12 |
| 1கொரி. 4:12 | மத். 5:44 | 1தெச. 2:15 |
| மத். 23:34 | அப். 9:4,5 | யோ. 15:20 |
| 2தீமோ. 3:12 | ரோ. 12:14 | பிலி. 2:29 |
| அப். 4:18–21 | 1பேதுரு 2:19–23 | அப். 5:28,29,40,41 |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

ஒரு கிறிஸ்தவனாக, தான் ஏதாவது ஒரு வழியில் துன்பப்படுவதாக அந்தோணி நினைக்கிறார். பொதுவாக, பாகுபாடு, தேவையற்ற பேச்சு, கேலி செய்தல், புறக்கணிப்பு மற்றும் முகம் கோணுதல் போன்ற விதங்களில் அவர் துன்பப் பட்டுள்ளார். சில நேரங்களில் அவர் வாழ்க்கையையே வெறுத்து விடுகிறார். ஆனாலும், மற்றவர்களை துன்பப்படுத்துகிற இவர்கள் எப்பொழுதுமே தவறானவர்கள் என்று அவர் சமாதானம் படுத்திக் கொள்கிறார். இப்படி துன்பப் படுத்தப்படுதலுக்கு மாறாக, அந்தோணி மற்றும் எல்லா கிறிஸ்தவர்களும் எப்படி செயல்பட வேண்டும்?

**சாத்தியமான தீர்வுகள் :**

1. தீமைக்கு தீமை செய்யவே எப்பொழுதும் நாடலாம்.
2. அப்படியே விட்டு விடலாம்.
3. கிறிஸ்துவுக்காகத்தானே துன்பப்படுகிறோம் என மகிழ்ச்சியாயிருக்கலாம்.
4. தீமைக்கு பதிலாக நன்மை செய்யலாம்.
5. உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காக ஜெபம் பண்ணலாம்.
6. மற்றவர்கள் என்ன செய்தாலும் கவலைப்படாமல், நாம் கிறிஸ்தவர்களாகவே இருக்கலாம்.

**தொடர் விவாதத்திற்கு :**

1. துன்புறுத்துதல் என்றால் என்ன?
2. ஏன் மக்கள் மற்றவர்களை துன்புறுத்துகிறார்கள்?
3. துன்புறுத்துகிறவர்கள் யார்? எப்படிப்பட்டவர்கள்?
4. கிறிஸ்தவர்கள் எப்பொழுதாவது யாரையாவது துன்பப்படுத்தலாமா?
5. துன்புறுத்தலின் விளைவு என்ன?

# இளம் பிரசங்கியார்கள்

## YOUNG PREACHERS

**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

| | | |
|---|---|---|
| 1தீமோ. 4:12 | 2தீமோ. 3:15 | 2தீமோ. 2:2 |
| தீத்து 1:4,5 | 1தீமோ. 5:1 | 2தீமோ. 4:1,2 |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

பிராந்திய சபையில் உள்ள மற்ற இளம் பிரசங்கியார்களில் தீமோத்தேயுவும் ஒருவர். இந்த இளம் பிரசங்கியார்கள் வயதிலும், பிரசங்கிக்கும் ஆண்டுகளிலும் மிகவும் இளமையானவர்கள். இந்த பிராந்திய சபை அவர்களைப் பற்றி மிகவும் பெருமைப்படுகிறது. மேலும், அவர்கள் தேவனுடைய ராஜ்யத்திலே சிறப்பான ஊழியர்களாய் உருவாக சபையார் அவர்களுக்கு எல்லா விதத்திலும் ஊக்கமளிக்க வேண்டும். ஆனால், இந்த இளம் பிரசங்கியார்கள் விஷயத்தில் உள்ள ஒரு பிரச்சனையே அவர்கள் இளமைதான். வயதில் மூத்த விசுவாசிகள் இவர்களுடைய வார்த்தைகளை ஒரு பொருட்டாகவே நினைப்பதில்லை. மேலும், இதைக் கண்டு பொங்கி எழுவதினாலும், இளம் வாலிபர்களுக்கு பிரச்சனை அதிகரிக்கிறது. இந்தக் காரியங்கள் எவ்வாறு கையாளப்பட்டு, அவர் ஆண்டவருடைய வேலையில் பிரயோஜனமானவர்களாய் இருக்க, சபையின் மதிப்பை எவ்வாறு பெற முடியும்?

**சாத்தியமான தீர்வுகள் :**

1. இளம் வாலிப பிரசங்கியார்கள் பொறுப்புடன், தங்கள் பிரசங்கங்கள் நன்றாக ஆயத்தம் செய்து, பிரசங்கிப்பதை பயிற்சி செய்யணும்.
2. ஒருவருடைய அற்பணிப்பு, திறமை மற்றும் வாழ்வுமுறை கவனிக்கப்பட வேண்டுமே ஒழிய வயது அல்ல.
3. அவர்கள் என்ன போதிக்கிறார்கள் என்பதை அவர்கள் வயதை வைத்து அல்ல, வசனத்தை வைத்து தீர்மானிக்க வேண்டும்.
4. அனுபவம் இல்லாததினால் வாலிபர்கள் பிரசங்கிக்க அனுமதிக்கப்படக் கூடாது.

**தொடர் விவாதத்திற்கு :**

1. ஒரு மனிதன் எப்பொழுதிலிருந்து வேத வசனத்தைப் போதிக்க ஆரம்பிக்கனும்?
2. ஒரு பிரசங்கியாரின் தகுதிகள் என்ன?
3. ஒரு பிரசங்கியாருக்கு இருக்க வேண்டிய மனநிலை என்ன?
4. ஒரு பிரசங்கியாரிடம் சபை மக்களுக்கு இருக்க வேண்டிய மனநிலை என்ன?

# குற்றம் கண்டுபிடித்தல்

## FAULT FINDING

**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

| | | |
|---|---|---|
| யாக். 5. 16 | 2கொரி. 12 : 20 | கலா. 6 : 1 |
| 1 பேதுரு. 3 : 10 | ரோ. 1 : 30 | சங். 15 : 1–3 |
| யாக். 1 : 26 | நீதி. 25 : 23 | யாக். 3 : 5–8 |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

அருண் ஒரு கிறிஸ்தவன்; மேலும்,குற்றம் கண்டுபிடிப்பதே அவனுடைய வேலையாக இருந்தது. கைப்பிரதிகளை திருச்சபையில் அச்சடித்தால், தேவையில்லாமல் பணம் விரையம் செய்யப்படுகிறது என புலம்புவார் அதை மக்களுக்கு சென்று கொடுத்தால், பிரயோஜனமாக பைபிள் படிப்பதில் செலவிட்டிருக்கலாம் என்பார் சில நேரங்களில், ஆராதனை ரொம்ப சீக்கிரம் என்றோ (அல்லது) ரொம்ப தாமதமாக உள்ளது என்றோ குற்றம் கண்டுபிடிப்பார் (அல்லது) ரொம்ப நேரம் ஆராதனை நடக்கின்றது என்றோ குற்றம் கண்டுபிடிப்பார் அடிக்கடி அவர், மற்ற கிறிஸ்தவர்களின் நேர்மையிலும் அவர்கள் ஆராதனையில் காட்டும் பயபக்தியிலும் குற்றம் கண்டுபிடிப்பார் இந்த மனோநிலையை அவர் மாற்றிக்கொள்ள உதவ, என்ன செய்யலாம்?

**சாத்தியமான தீர்வுகள் :**


1. குற்றம் கண்டுபிடித்தல் என்னும் பாவத்தைப் பற்றி அதிகமாக பிரசங்கம் செய்யலாம்.
2. சகோதரர்கள் மீது இன்னும் அதிகமாக அன்பு செலுத்தி, அவர்களை புரிந்து கொள்ளலாம் .
3. அவர்களைப் பற்றி மற்றவர்கள் சாட்டும் குற்றச்சாட்டுகளை நீங்கள் கேட்க விரும்பவில்லை என்பதை குற்றம் கண்டுபிடிப்பவர்கள் உணரட்டும்.
4. அவர்களுடைய குற்றம் கண்டுபிடிக்கும் பண்பிலே நீங்களும் அவர்களுடன் சேர்ந்து கொண்டு ஊக்கப்படுத்தாதீர்கள்.
5. குற்றம் கண்டுபிடிப்பவரை உற்சாகப்படுத்தலாம்.

**தொடர் விவாதத்திற்கு :**

1. குற்றம் கண்டுபிடித்தல் என்றால் என்ன?
2. சகோதரர்கள் ஏன் குற்றம் கண்டுபிடிக்கின்றனர்?
3. குற்றம் கண்டுபிடிப்பது ஆக்கப்பூர்வமானதா?
4. குற்றம் கண்டுபிடிப்பதால் உண்டாகும் சில விளைவுகள்?

# நேரப் பிரச்சனை

## THE TIME PROBLEM




**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

அப் 20 : 7–12 மத் 6 : 24 1 கொரி 16 : 12
ரோ 12 : 12 மத் 5 : 6,7 கொலே 3 : 17
லூக் 9 : 23

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

சகோ. ஆண்டனி மற்றும் சபையின் மற்ற சகோதரர்கள் சபைக்கூட்டங்கள் நடக்கும் நேர அளவைப்பற்றி குறைகூறி விமர்சித்து வருகிறவர்கள் ஆராதனை நேரம் மிகவும் சுருக்கமாக இருக்க வேண்டும் என்று அவர்கள் கூறுகிறார்கள் அவர்களுடைய வாதம் என்னவென்றால், ஆராதனை நேரம் அதிகமாகும்போது அது பார்வையாளர்கள் (visitors) மற்றும் சிலரை பங்குபெறுவதில் இருந்து சோர்வடையச் செய்கிறது. பொதுவாகவே அவர்கள் நினைப்பது , பிரசங்கம் சுருக்கமாக இருக்க வேண்டும் . இதற்கு என்ன செய்யலாம்.?

**சாத்தியமான தீர்வுகள் :**

1. பிரசங்கத்திற்கும் , ஆராதனைக்கு கூட நேரக் கட்டுப்பாடு விதிக்கலாம்.
2. குறைசொல்லித் திரிபவர்களை பற்றி கவலைப்படாமல் எப்பொழுதும் போல ஆராதனை நேரத்தைக் கடைபிடிப்பது.
3. ஆராதனையின் உண்மையான நோக்கத்தை அங்கத்தினர்களுக்கு கற்றக்கொடுத்து , சில நேரங்களில் எப்பொழுதும் இருப்பதைவிட ஆராதனை நேரம் ஏன் அதிகமாக இருக்கிறது என விளக்கிச் சொல்லுதல்.
4. சபை கூட்டங்களை ஒரு நியாயமான நேரம் நடத்துவது.

**தொடர் விவாதத்திற்கு :**

1. கூட்டங்களுக்கு ஒரு நேரக் கட்டுப்பாடு இருக்க வேண்டியது அவசியமா?
2. கூட்டத்தில் பங்கு பெறும் அனைவருக்குமே கூட்டத்தின் தோராயமான நேரம் தெரியாதா?
3. ஆராதனை முடிவதர்க்கு முன்பாகவே ஒருவர் அந்த இடத்தை விட்டு போக சுதந்திரம் இல்லையா?
4. ஒரு கால அளவை நிர்ணயிப்பதில் உள்ள ஆபத்து என்ன?
5. மக்கள் திரைப்படத்தை உட்கார்ந்து பார்பதற்கு எவ்வளவு மணி நேரம் செலவிடுகிறார்கள்? தினமும் வகுப்பில் எவ்வளவு நேரம் செலவிடுகிறார்கள்?
6. கூட்டத்தின் நேரம் கூடும் போது மக்கள் ஏன் எதிர்கிறார்கள்?
7. ஆராதனையில் கலந்து கொள்ளுதலின் முக்கிய நோக்கம் என்ன?
8. தொடர்ந்து நடைபெறும் ஞாயிறு கூட்டங்களில் ஒருவருக்கு நாம் போதிக்காவிட்டால் , எப்பொழுது நாம் பிறர்க்கு போதிக்கும் தருணம் நமக்கு கிடைக்கும்?

# ஒரே பாத்திரம்

## ONE CUP

**சிந்திக்க வேண்டிய வசனங்கள் :**

1 கொரி. 11 : 23–29 மத்தேயு 26 : 26–28 அப். 20 : 7

மாற்கு 14 : 22–25 அப். 2 ; 42 லூக்கா 22 : 17–20

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**


கர்த்தருடைய பந்தியில் பங்குபெற நாம் ஒரே பாத்திரத்தை தான் பயண்படுத்த வேண்டும் என்று சாமுவேல் வலியுறுத்துகிறார். நாம் ஒரு கோப்பை தான் வைத்திருக்கவேண்டும். இங்கு நாம் கருத்தில் கொள்ள வேண்டியது பாத்திரத்தையா, அல்லது பாத்திரத்தில் உள்ள ரசத்தையா?அவர் பாத்திரத்தை எடுத்து ஸ்தோத்திரம் செய்து அதை தன்னுடைய சீஷர்களுக்கு கொடுத்து அதை வாங்கி குடியுங்கள் என்றார். அவர் பாத்திரத்துக்காக நன்றி செலுத்தினாரா அல்லது அதில் உள்ள பொருளுக்காகவா? அவர்கள் பாத்திரத்தை குடித்தார்களா அல்லது அதில் உள்ளதை குடித்தார்களா? அவர் பாத்திரத்தைப் பற்றி பேசும் போது, அதில் இருந்த திராட்சரசத்தை பற்றி நினைக்கவில்லையா? பாத்திரத்தில் இருப்பதைப் பற்றி என்றால், அப்புறம் அது ஒரே பாத்திரமா அல்லது அதற்கு மேற்பட்டவைகளா என்பதை குறித்து ஆராய அவசியமில்லையே. ஒரு பாத்திரத்திற்கு மேல் பயன்படுத்துவது இல்லையென்றால் , பின்னர் யார் ஒவ்வொரு திருச்சபைக்கும் ஒரு பாத்திரத்தை பயன்படுத்தும் அதிகாரத்தைக் கொடுத்தது? அப்படியென்றால் அந்த ஒரே பாத்திரத்தில் தான் எல்லாமே அடங்கியிருக்கும் என்றால், அந்த ஒரு பாத்திரம் தான் உலகம் முழுவதுமுள்ள எல்லா திருச்சபைகளிலும் பயன்படுத்தப்பட வேண்டும். ஒரே இது சாத்தியமற்றது. அப்படியென்றால், நாம் என்ன செய்ய வேண்டும்?

**சாத்தியமான தீர்வுகள் :**

1. ஒவ்வொரு பிராந்திய சபையும் ஒரு பாத்திரத்தை வைத்துக்கொள்ளலாம்
2. சபையின் தேவைக்கு ஏற்ப நிறைய பாத்திரங்களை பயன்படுத்திக் கொள்ளலாம்.
3. தேவன் ஏற்படத்தாத ஒரு இடத்தில் நாமாக சட்டத்தை உருவாக்க கூடாது.
4. நாம் பாத்திரத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதை விட அதற்குள் இருப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.
5. சாமுவேலை அவருடைய எண்ணத்தின் படியே விட்டுவிடலாம்.

**தொடர் விவாதத்திற்கு :**

1. ஒரே பாத்திரத்தை பயன்படுத்தினால் ஏதேனும் தவறு உண்டா?
2. ஒரு பாத்திரத்திற்கு மேல் நிறைய பயன்படுத்துவதினால் ஏதேனும் தவறா?
3. தனித்தனி பாத்திரங்களை பயன்படுத்துவதற்கு காரணங்கள் என்னவாக இருக்கும்?
4. இப்படி ஒரு விஷயத்திற்காக சபையையே பிரிப்பது நியாயமா?



# கர்த்தருடைய பந்தியில் கட்டுப்பாடு

## CLOSED COMMUNION

**சிந்திக்கவேண்டிய வசனங்கள் :**

| | | |
|---|---|---|
| 1 கொரி. 11 : 23–29 | யாக்கோபு. 5 : 16 | அப். 2 0 : 7 |
| யோவான். 8 : 1 –11 | 2 கொரி. 13 : 5 | அப். 2 : 4 7 |
| 1 யோ. 1 : 7–1 0 | 2 தீமோ. 2 : 1 9 | |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது :**

கர்த்தருடைய பந்தியில் சபையின் அங்கத்தினர் மட்டுமே கலந்துக் கொள்ள வேண்டும். என சுந்தர் வலியுறுத்துகிறார். சபையின் அங்கத்தினர் அல்லாதவரும் கிறிஸ்துவை நம்பாதவர்களும், வேறு சபையை சேர்ந்தவரும் மிகவும் சுதந்திரமாக கர்த்தருடைய பந்தியில் பங்குபெற அனுமதிக்கபடுகிறார்கள் என்றும் அவர்களுக்கு அதை வழங்கவே கூடாது என்றும் கூறினார். ஆனால் வேதாகமம் என்ன கூறுகிறது என்றால் பங்கு பெறும் ஒவ்வொருவரும் தன்னை தானே சோதித்து அதில் பங்கு பெற வேண்டும். ஒருவன் கிறிஸ்தவனா, இல்லையா என்பதை மனிதன் தீர்மானிக்க இயலாது சிலரை நாம் ஆண்டவருடைய சபையின் அங்கத்தினர்கள் என்று சில வெளிப்புற அடையாளங்களினால் கண்டறிய முடியும், கிறிஸ்தவர்களே கூட, பந்தியில் பங்கு பெற உண்மையில்லாமலும், ஆயத்தமில்லாமலும் இருக்கின்றனர்.சபையில் திருமுழுக்கு பெற்றவர்கள் தான் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற முடியும் என்றால், பிற்காலங்களில் திருமுழுக்கு எடுக்க இருக்கும் இன்றைய பார்வையாளர்களையும் அது தடுக்க கூடும். உண்மையிலே , ஒருவர் அவிசுவாசியாக அல்லது வேறு சபையை சேர்ந்தவராக இதில் பங்கு பெறுவாரானால், அது அவர் நித்தியமாக தண்டனை அடையச்செய்யாது நாம் அப்படிப்பட்டவர்களை தடை செய்யாதிருந்தால், அவர்கள் வருவதை நிறுத்தி விடாமல், சிறிது காலத்தில் ஆண்டவருக்கு கீழ்படியக் கூடும். இதை விட்டுவிட்டு நாம், கர்த்தருடைய பந்தியில் கட்டுப்பாடு விதித்தால், நம்மை நாமே நியாயாதிபதிகள் போன்ற நிலையில் உயர்த்திக் கொண்டு, நன்மையை விட அதிக கெடுதலே உண்டாக்குவோம். இந்த பிரச்சனை குறித்து என்ன செய்வது?

**சாத்தியமான தீர்வுகள் :**


1. கர்த்தருடைய பந்தியில் கட்டுப்பாட்டுடன் (திருமுழுக்கு பெற்றவர்கள் மட்டும்) கடைபிடிப்பது .
2. ஒவ்வொருவரும் தன்னைத்தானே ஆராய்ந்து பார்க்கட்டும்.
3. கர்த்தருடைய பந்தி என்றால் என்ன என்பதைப் பற்றியும், அதில் யார் பங்கு

பெற வேண்டும் என்பது பற்றியும் ஆராதனையில் பங்குபெறும் அனைவருக்கும் போதுமான அளவு கற்பிப்பது.

4. தேவன் ஏற்படுத்தாத ஒரு சட்டத்தை ஏற்படுத்தாமல் இருப்பது.

**தொடர் விவாதத்திற்கு:**

1. கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் இன்றும், திருமுழுக்கு பெற்றவர்கள் மட்டும் தான் கர்த்தரின் பந்தி என்பதை பின்பற்றுகிறார்களா? புதிய ஏற்பாட்டின் காலத்தில் இதை செய்தார்களா?
2. யார் பங்கு பெற வேண்டும், யார் பங்குபெற கூடாது என சொல்ல யாருக்கு உரிமை உண்டு?
3. கட்டுப்பாட்டுடன் கூடிய கர்த்தருடைய பந்தியை அனுசரிப்பவர்கள் யார்?
4. கட்டுப்பாட்டுடன் கர்த்தருடைய பந்தியைப் பங்கு பெறுபவர்களைப் பார்த்து யாராவது அதையே தாங்களும் செய்ய தயாராகனும் என்று உணர்வு வருமா?
5. யாராவது உங்களைப்பார்த்து , நீங்கள் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறக் கூடாது என சொல்வதை நீங்கள் விரும்புவீர்களா?



# நீளமான முடி வளர்த்தல்

## LONG HAIR

**ிந்திக்க வேண்டிய வசனங்கள்:**

உபா 22 : 5 — தீத்து 2 : 6 – 8 — 1 கொரி 11 : 14 ,15

எபே 6 : 1 — 1 தீமோ 4 : 12

**ிரச்சனை விளக்கப்பட்டுள்ளது:**

தன்னுடைய பள்ளியில் நிறைய நண்பர்கள் தங்களுடைய முடியை ுன்பைவிட நீளமாக வளரவிடுவதை அந்தோணி பார்த்திருக்கிறான். சிலருடைய ுடி தோள்பட்டை வரை இருப்பதினால், பெண்களையும் அவர்களையும் பிரித்துப் ார்ப்பது கூட கடினம். ஆண்கள் நீளமான முடிவளர்ப்பது அவமானம் என்று வசனம் சால்வது அவனுக்கு தெரிந்திருந்தாலும், தன்னுடைய நண்பர்களுடைய ஸ்டைல் ுவனுக்கும் பிடித்திருப்பதால், அதைப் பின்பற்ற அவன் முடிவு செய்துள்ளான், ாலிபர்கள் மட்டுமல்லாமல், நடுவயதினர்கள் மற்றும் வயதானவர்கள் கூடதான் ளமாக முடி வளர்க்கின்றனர் என்று தன்னுடைய விருப்பத்திற்கு அவன் நியாயம் தடுகிறான். ஆனால், அந்தோணியின் இந்தச் செயல் சமுதாயத்திடமும், பற்றோரிடமும் போராடும் குணமுடைய ஹிப்பீஸ் என்பவர்களைப் போல் .ள்ளதால், இந்த ஸ்டைலை அவன் பெற்றோர் எதிர்த்தனர். இதைக் குறித்து ன்ன செய்யலாம்?

**ாத்தியமான தீர்வுகள் :**

1. நீளமான முடி வளர்ப்பதைப் பற்றி, பைபிள் என்ன சொல்கிறது என்ற உண்மை கற்பிக்கப்பட வேண்டும்.
2. இப்படி நீளமான முடி வளர்ப்பவர்கள் உண்டாக்கும் பாதிப்பை பற்றி அவர்களிடம் தனிமையில் பேசப்பட வேண்டும்.
3. அவர்களை தனியாக விட்டுவிடலாம்; தானாகவே அவர்களுடைய ஸ்டைல் மாறிவிடும்.
4. காலம் மாறியிருப்பதால், இன்று நீளமாக முடி வளர்ப்பது ஏற்றுக் கொள்ளப் படக்கூடிய ஒன்று.

**தாடர் விவாதத்திற்கு:**

1. ஒவ்வொருவருடைய முடி எவ்வளவு நீளம் இருக்க வேண்டும்?
2. இயேசுவுக்கு நீளமான முடி இருந்ததா?
3. கடந்த நூற்றாண்டு மக்கள் நீளமான முடி வைத்திருந்தனரா?
4. நீளமாக முடி வளர்ப்பதால் என்ன தவறு?
5. நீளமான முடி வைக்காமல், இன்று குறைவான முடி வளர்ந்து ஒருவர் பிறர் கவனத்தை ஈர்க்க முடியுமா?
6. நீளமாக முடி வளர்ப்பதால் உண்டாகும் தீய விளைவுகள் யாவை?

# முழங்கால் ஜெபம்



## NEELING IN PRAYER

**சிந்திக்க வேண்டிய வசனங்கள்:**

அப் 20 : 36
லூக் 18 : 10–13
ரோ 12 : 12
அப் 16 : 24,25
லூக் 11 : 1
அப் 10 : 9
1 தெச 5 : 17
அப். 2 : 42
அப் 21 : 5
லூக் 18 : 1
கொலே 4 : 2
மத் 6 : 1–15

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது:**

ஒரு கிறிஸ்தவர் எப்பொழுது ஜெபம் செய்தாலும் அவர் முழங்காபடியுட்( தான், ஜெபம் செய்ய வேண்டும் என தாஸ் மற்றவர்கள் இதை முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை; மேலும் அவர்கள், ஒருவர் முழங்கா படியிட்( ஜெபிப்பதினால் தவறில்லை என்றாலும் பைபிளில் இதற்கு நல்ல உதாரணங்கள் இருந்தாலும், இது ஒரு தாழ்மையின் அடையாளமே தவிர, எப்பொழுதும் முழங்கால் படியிட்டு ஜெபம் செய்ய வேண்டும் என்பது தவறு, என்றனர் வெளிப்புறத் தோற்றப் முக்கியமில்லை என்றும், நாம் ஜெபிக்கும் போது தாழ்மையான இருதயத்தோடுப் தேவனோடு உறவு கொள்ளும் இருதயமும் உடையவர்களா என்றும் தான் ஆண்டவர் பார்கிறார். ஒருவர் எல்லா சூழ்நிலையிலும் முழங்கால் போட்டு ஜெபிக்க முடியாது; ஆனால், எப்பொழுதும் ஜெபம் செய்தே ஆக வேண்டும். இது ஒரு பிரச்சனை ஆகமல் இருக்க இந்த கேள்வியை சபை எவ்வாறு தீர்க்க வேண்டும்?

**சாத்தியமான தீர்வுகள்:**

1. அடிக்கடி ,ஜெபம் என்ற தலைப்பில் வேத பாடங்களை எடுக்கலாம்.
2. ஒவ்வொரு முறை ஜெபிக்கும்பொழுதும் முழங்கால் படியிடுதல்.
3. இதைக் குறித்து குழப்பத்தில் இருப்பவர்களை மட்டும் தனியே அழைத்து,ஜெபிக்கும் நிலையைப் பைபில் சொல்வதை அவர்கட்கு கற்பிக்கலாம்.
4. பொதுக் கூட்டங்களில், ஜெபிக்கும் வித்தியாசப்பட்ட நிலைகளைப் பற்றி அங்கத்தினர்கள் மனதில் உள்ள ஒரே ஒரு ஜெபிக்கும் நிலை என்ற எண்ணத்தை மாற்றலாம்.
5. இந்த சங்கதியை அப்படியே விட்டுவிடலாம் ; அது தானே போய் விடும்.

**தொடர் விவாதத்திற்கு:**

1. ஒருவர் எப்பொழுதுமே முழங்காலிட்டு தான் ஜெபிக்க வேண்டும் , என்று போதிப்பதினால் உண்டாகும் சில பிரச்சனைகள் என்ன?
2. முழங்கால்படியிடுவது எதைக் குறிக்கிறது?
3. இந்த செய்தியை வைத்து ஒருவர் ஏன் ஒரு பிரச்சனை உண்டாக்க வேண்டும்?
4. ஜெபிக்கும் பல்வேறு நிலைகளை குறிப்பிடுங்கள்?

# வேலை செய்யும் பெண்கள்

## WORKING WOMEN

**ந்திக்க வேண்டிய வசனங்கள்:**

1 தீமோ 5 : 2 , 4 1 பேதுரு 3 : 1 தீத்து. 2 : 3 ,4 ,5
1 தீமோ 5 : 14 எபே 5 : 22 , 24 நீதி. 30:10–28
கொலோ. 3 : 18

**ிரச்சனை விளக்கப்பட்டுள்ளது:**

வீட்டை விட்டு வெளியே சென்று ஒரு பெண் வேலை செய்யும் சூழ்நிலைகள் ிருக்கலாம் ; குறிப்பாக அவள் தனிமையாகவோ, விதவையாகவோ அல்லது வளுடைய குடும்பத்தின் கஷ்டம் காரணமாகவோ அவள் வேலைக்குச் சல்லலாம். அதே நேரத்தில் குடும்பத்தில் உலக நன்மைகளை அனுபவிக்கும்படி ருமானத்தை அதிகரிக்க , ஒரு தாய் வீட்டை விட்டு வேலைக்குச் செல்வதை ந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாது தனக்கும் தன்னுடைய ிள்ளைகளுக்கும் போஷிக்கக் கூடிய ஒரு நல்ல கணவன் ஒரு பெண்ணிற்கும் ிருப்பாரானால் அந்த பெண்மணியின் இருப்பிடம் வீடு தான் , அவளுடைய அந்த பாருப்பை (இடத்தை) வேறு யாரும் எடுத்துக் கொள்ள முடியாது அவளுடைய ணவனுக்கு அவள் தேவை; எல்லாவற்றிற்கும் மேலாக அவளுடைய ிள்ளைகளுக்கு அவர் நிச்சயம் தேவை ஒரு பெண் விரும்பினால் வீட்டில் உள்ள வேலைகளே அவளுக்கு அதிகமாக இருக்கும் ; வீட்டு வேலைகளை, பிள்ளைகளை ார்த்து , அவர்களை நேசித்து , அவர்களுக்கு தேவையான பயிற்சி கொடுப்பது, துவே போதும்! வீட்டுக்கு அடிப்படைத் தேவைகளை சந்திக்க, கணவன் வேலைக்குச் செல்ல வேண்டியது மிக அவசியமானதால், விட்டில் உள்ளவைகளைப் ார்க்கவும், பிள்ளைகளை கவனிக்க வேண்டியதும் ஒரு மனைவியின் பொறுப்பே! **'கணவன், மனைவி இரண்டுபேரும் எல்லா நேரங்களிலும் வீட்டில் இருக்க டியாது. ஆனால், இரண்டு பேருமே வீட்டை விட்டு வெளியே சென்று வேலை ார்ப்பது நல்லதல்ல."** ஒரு தாய், வேலைக்காகவே மற்றக் காரணங்களுக்காகவே வெளியே செல்வது, பிள்ளைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.


**ாத்தியமான தீர்வுகள்:**

1. வேலை மற்றும் மற்ற எதற்கும் மேலாக, பிள்ளைகளையும் குடும்பத்தையும் வைப்பது.
2. பிள்ளைகள் பள்ளிக்குச் செல்லும் வயதை அடையும் வரைக்கும் மாத்திரம் வேலைக்குச் செல்லலாம்.

3. பிள்ளைகள் பள்ளிக்குச் செல்லும் வயதை அடைந்தபின்பே வேலைக்கு செல்லாம்.
4. அம்மாவையோ, சகோதரியையோ அல்லது வீட்டில் வேறு யாரையாவது வீட்டையும் பிள்ளைகளையும் பார்த்துக் கொள்ளச் செய்யலாம்.

**தொடர் விவாதத்திற்கு:**

1. பிள்ளைகளை வீட்டில் தனியாகவோ, மற்றவர்கள் பாதுகாப்பிலோ விடுவதினால் என்ன பாதிப்பு உண்டாகும்?
2. வேலை செய்வது பெண்களுக்கு என்ன பாதிப்பை ஏற்படுத்தும்?
3. மற்றவர்கள் இப்படிச் செய்வதினால், நாமும் அதைச் செய்வது சரியா?
4. ஒரு தாய்க்கு பிள்ளைகள் மேல் உள்ள பொறுப்புக்களை விவாதிக்கவும்.
5. ஏன் பிள்ளைகளுக்கு தாய் மிக அவசியம் தேவை (தேடுகிறார்கள்)?



# தூய்மையாயிருத்தல்

## CLEANLINESS

**சிந்திக்க வேண்டிய வசனங்கள்:**

| | | |
|---|---|---|
| லேவி. 15:7–11,13 | மாற்கு 1:44 | சங்.24:3,4 |
| லூக்.5:14 | யோ.13:10 | லூக்.2:22 |
| 2கொரி.7:1 | அப்.21:26 | |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது:**


ஆரம்ப காலம் முதலே தேவன், மனிதனுக்குள் வெளிப்புறமாகவும், ஆவிக்குரிய வகையிலும் தூய்மை மற்றும் பரிசுத்தத்தின் அவசியத்தை வலியுறுத்தி வந்துள்ளார். பழைய ஏற்பாட்டு காலத்தில் நிறைய கட்டளைகள் அவர்களின் மாம்ச நலனையே சார்ந்திருந்தது. அவர்கள், தங்களுக்குள் நோய் பரவாமல் இருக்க முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருந்தது. அவர்கள் சில மாமிசங்களை சாப்பிட முடியாதிருந்தது. ஆனால், கிறிஸ்துவின் கட்டளைகளின் கீழ், ஆத்துமாவை சுத்திகரிப்பதே வலியுறுத்தப்பட்டது. ஆனால், உலகத்தில் சாதாரணமாகச் சொல்லும்போது, 'சுத்தம் தேவபக்திக்கு சமமாகக் கூறப்படுகிறது' ஒருவர் அழுக்கான உடல் மற்றும் அசுத்தமான உடையுடன் எப்பொழுதும் சுற்றுவது, அநேகரை கிறிஸ்தவராகும்படி உற்சாகப்படுத்த முடியாது. அவர் ஏழையாக இருந்தாலும், சுத்தமாக இருக்கலாமே. தன்னுடைய உடல் சுத்தத்தினால், அவர் யாருடன் தேவனுடைய வார்த்தையைப் படிக்கின்றாரோ, அவர்கள் மீது நல்ல பாதிப்பை உண்டுபண்ண முடியும். உணர்வுகளை காயப்படுத்தாமல், திருச்சபை எவ்வாறு தன்னுடைய அங்கத்தினர்கள் சுத்தமாயிருக்கும்படி உற்சாகப்படுத்த முடியும்?

**சாத்தியமான தீர்வுகள்:**

1. தேவனுடைய மக்கள், ஆவிக்குரிய பரிசுத்தத்துடன் எவ்வாறு சரீரப்பிரகாரமாகவும் சுத்தமாயிருந்தனர் என்பதை பைபிளில் இருந்து அடையாளம் காட்டலாம்.
2. இது ஒவ்வொருவரும் தனிப்பட்ட வகையில் தீர்மானிக்க வேண்டிய விஷயமாகையால், இதைப்பற்றி கவலைப்பட வேண்டிய அவசியமில்லை.
3. இந்தப் பிரச்சனையைக் குறித்து பலதரப்பட்ட மக்களிடம் பேசலாம்.
4. ஒவ்வொருவரின் வேலையின் தன்மை காரணமாக, எல்லாருமே ஒரே மாதிரி கொஞ்சம் கூட அழுக்கே இல்லாமல் இருக்க முடியாது என புரிந்து கொள்ளலாம்.

**தொடர் விவாதத்திற்கு:**

1. ஏன் சரீர சுத்தம் மிக முக்கியமானது?
2. ஒருவர் எந்த அளவிற்கு சுத்தமாயிருக்க வேண்டும்?
3. அழுக்கான மக்களை மற்றவர்கள் எவ்வாறு பார்க்கின்றனர்?
4. ஒருவர் எவ்வாறு சுத்தமாயிருக்க முடியும்?



# ஏழ்மை
## POVERTY

**சிந்திக்க வேண்டிய வசனங்கள்:**

| | | |
|---|---|---|
| 2கொரி.8:2,9 | யோ.12:5,6 | மத்.26:8–11 |
| யாக்.2:5,6 | மாற்கு 12:42 | கலா. 2:10 |
| லூக்.14:13,14 | வெளி.3:17 | |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது:**

ஏழ்மை நிலை என்பது பணம் இல்லாமல் இருக்கும் நிலை ஆகும். சபையின் அநேக அங்கத்தினர்களும் ஆண்டவருடைய சரீரத்திற்கு வெளியே இருப்பவர்களும் பெரும்பாலானவர்கள் ஏழ்மையினால் அவதிப்படுகிறார்கள். இது ஆசீர்வாதமும் அல்ல; சாபமும் அல்ல. சிலர் தங்களை முன்னேற்றிக் கொள்ள விரும்பாததினால் ஏழ்மையானவர்களாயும், சிலர் சூழ்நிலையின் அடிமைகளாக ஏழ்மையாகவும் உள்ளனர். ஏழ்மையில் பல்வேறு நிலைகள் உள்ளன. ஒரு வீடு வைத்திருப்பவன் கூட உண்மையில் ஏழையாக இருக்கலாம். ஆனால், இரவில் தெருவில் தூங்குகிற ஒரு நபருக்கு அவன் பணக்காரனாகத் தெரிவான். நம்மிடம் பொருளாதார ரீதியில் என்ன உள்ளதோ, என்ன இல்லையோ என்பதை பொருட்படுத்தாமல், நிறைய வைத்திருப்பவர்களைப் பற்றியும், ஒன்றும் இல்லாதவர்கள் பற்றியும் நமக்கு நல்ல மனநிலை வேண்டும். ஏழைகளைக் குறித்த அல்லது ஏழ்மை நிலையைக் குறித்த நம்முடைய மனநிலையை எவ்வாறு முன்னேற்றிக் கொள்ள முடியும்?

**சாத்தியமான தீர்வுகள்:**

1. நாம் உலகில் வரும்போது ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, உலகில் இருந்து ஒன்றும் கொண்டு போவதில்லை என்பதை மனதில் கொள்ள வேண்டும்.
2. நாம் ஐசுவரியவானாகும்படி இயேசு ஏழ்மையானார் என நினைவில் கொள்ள வேண்டும்.
3. உண்மையில் தேவையுள்ள ஏழைகளுக்கு, அவர்களுடைய தேவைக்குத் தக்கதாகவும், நம்முடைய நிலைமைக்குத் தக்கதாகவும் உதவலாம்.
4. ஏழைகள் முக்கியமல்ல என்பதால் அவர்களைத் தவிர்த்து விடலாம்.

**தொடர் விவாதத்திற்கு :**

1. யார் பணக்காரன்? யார் ஏழை?
2. ஏழ்மைநிலை இல்லாமல் செய்ய முடியுமா?
3. சுவிசேஷம் யாருக்கெல்லாம்?

4. தரித்திரத்திலும் தரித்தமானவர்களை ஆண்டவருக்காக ஆதாயப் படுத்துவது ஏன் மிகச் சிரமம்?
5. உலகப்பிரகாரமான பொருட்களினால் நாம் எல்லாரும் ஐசுவரியவானா வோம் என இயேசு வாக்களித்தாரா?
6. நாம் எல்லோரும் ஆவிக்குரிய வகையில் பணக்காரர்கள் இல்லையா?

# புறங்கூறுதல்

## GOSSIP

**சிந்திக்க வேண்டிய வசனங்கள்:**

| | | |
|---|---|---|
| யாக்.1:26 | சங். 52:2 | யாக்.3:5–8 |
| நீதி. 6:17,18,19 | 1பேதுரு 3:10 | 1தீமோ.5:13 |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது:**

புறணி பேசுபவர்கள் வெறும் பெண்கள் மாத்திரம் அல்ல; ஆண்களும் கூட. இந்த தவறை செய்பவர்கள்தான் யூகங்களை எடுத்துக் கொண்டு, அதை உண்மையைப் போல பரவச் செய்யும் எளிமை அழிக்கும் ஒரு செயலாகும். ஒருவர் சொன்ன செய்தியை மிகைப்படுத்தி அதை பரப்புவது பிரச்சனையை மட்டுமே உண்டுபண்ணும். ஒரு திருச்சபையில் இருந்து இதை எப்படி நீக்க முடியும்?

**சாத்தியமான தீர்வுகள்:**

1. உங்களுக்கு உண்மை என்று தெரிந்ததை மட்டும் பேசுங்கள்.
2. புறணி கேட்பதை மறுப்பது.
3. கேள்விப்படுவதை மனதில் வைத்துக் காக்கலாம்.
4. மற்றவர்களைப் பற்றி எப்பொழுதும் நன்மையையே பேசலாம்; எந்த தீமையையும் எப்பொழுதும் பேசாமல் இருக்கலாம்.
5. புறணியைக் கேட்க தருணமே கொடுக்காதபடி மற்ற கிறிஸ்தவர்களிடம் இருந்து உங்களை தனிமைப் படுத்தலாம்.

**தொடர் விவாதத்திற்கு:**

1. ஒருவர் தான் மற்றவர்களிடமிருந்து கேட்ட செய்தியை, எந்த சூழ்நிலை மற்றும் விதிமுறையின்படி மற்றவர்களிடம் கூறலாம்?
2. புறணி பேசும் நபரைப் போலவே சமமாக, புறணி கேட்கும் நபர் குற்றவாளி அல்லவா?
3. புறணி (புறங்கூறுதல்) ஆண்டவருடைய சபைக்கு என்ன செய்யக் கூடும்?
4. புறணி பேசுவது ஏன் ஒரு மிகத் தீமையானது?
5. அதினால் ஏதேனும் நன்மை வரக்கூடுமா?

# பழிவாங்குதல்

## SEEKING REVENGE

**சிந்திக்க வேண்டிய வசனங்கள்:**

ஆதி. 4:15 நீதி.25:21–22 சங்.94:1
2தெச.1:7 ஏசாயா 35:4 மத்.5:43–47
எரேமியா 15:15 லூக்.6:31 ரோமர் 12:17–21
ரோமர் 13:1–4

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது:**

ராஜேஷ் கொஞ்ச நாட்களாகத்தான் கிறிஸ்தவராக உள்ளார். கடந்த காலங்களில் அவர், தன்னுடைய பகைவர்கள் என்று கருதிய சிலரிடம் சண்டை போடுவதும், பழிவாங்குவதுமாயிருந்தார். இப்பொழுது அவர் கிறிஸ்தவராக மாறிய பின் தன்னுடைய கோபத்தைக் கட்டுப் படுத்துவதிலும், பழிவாங்காமல் விட்டுவிடுவதிலும் அவருக்கு பிரச்சனை உள்ளது. சில நபர்களுக்கு 'தகுந்த பாடம் புகட்ட வேண்டும்' என்று அவர் நினைக்கிறார்; மேலும் தேவன் பழிவாங்குவதை விட தான் பழிவாங்குவதுதான் சரியாக இருக்கும் என அவர் நினைக்கிறார். தன்னுடைய சட்டத்தின் கீழ், தீமை செய்பவர்களுக்கும் நன்மை செய்ய வேண்டும் என இயேசு சொல்லியிருப்பது ராஜேஷ்க்கு தெரிந்திருந்தாலும், பகைவர்களை அப்படி விட்டுவிடுவது ஒரு கோழைத்தனம் என நினைக்கிறார். அப்படியானால், ராஜேஷ் என்ன செய்ய வேண்டும்?


**சாத்தியமான தீர்வுகள்:**

1. தன்னுடைய பழைய வழியிலேயே நடக்கலாம்.
2. பழிவாங்கிய யாரையாவது கவனித்துப் பார்த்து, அதினுடைய இறுதி நிலை என்னவென்று பார்க்கலாம்.
3. இந்தப் பகுதியைப் பற்றி பைபிளில் சொல்லப்பட்டது என்ன என்று பார்க்கலாம்.
4. நீதியை செய்வதினால் உண்டாகும் நன்மைகளை குறியுங்கள்.

**தொடர் விவாதத்திற்கு:**

1. மக்கள் ஏன் பழிவாங்குகிறார்கள்?
2. பழிவாங்குதல் நிலைமையை எப்பொழுதாவது சரிசெய்யுமா?
3. தன்னை சிலுவையில் அறைந்தவர்களிடத்தில், இயேசு என்ன மனநிலை வைத்திருந்தார்?
4. பழிவாங்குதல் ஏன் தேவனுக்கு உரியது?

# புகைப்பிழத்தல்



**SMOKING**

## சிந்திக்க வேண்டிய வசனங்கள்:

| | | |
|---|---|---|
| கலா.5:19–21 | 1தெச.5:22 | 1யோ.2:15–17 |
| 2யோ. 11 | யாக்.4:4 | 1கொரி.3:16,17 |
| 1தீமோ.4:12 | 1கொரி.6:19,20 | தீத்து 2:11,12 |

## பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது:

உலகத்தில் புகைப்பிடித்தல் என்பது அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகவே உள்ளது. புகைப்பிடித்தல் என்பது நுரையீரல் புற்றுநோய், இருதய கோளாறு மற்றும் அது சம்பந்தமான பல நோய்களுக்குக் காரணமாக இருக்கக்கூடும் என சொல்லப் பட்ட போது சிலர் அந்தப் பழக்கத்தைக் கைவிட்டனர். ஆனால், அந்த அதிர்ச்சி கடந்த பின் பலர் முன்பைவிட அதிகமாக புகைக்கவும், புகையிலை உபயோகிக்கவும் தொடங்கினர். இது உலகத்தின் விருப்பமாகவும் உள்ளது. கிறிஸ்தவர்களைப் பொருத்தமட்டில், புகைப்பவர்களை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை; என்றாலும் சில கிறிஸ்தவர்கள் புகைப் பிடிக்கிறார்கள். அஜித் என்ற கிறிஸ்தவர்க்கு இந்தப் பிரச்சனை உள்ளது. அவர் சிறு பையனாக இருக்கும்போது தன்னுடைய முதல் சிகரெட்டை புகைத்தார். இப்பொழுது அவர் அந்தப் பழக்கத்தை தொடர்ச்சியாக கடைப்பிடிக்கிறார். அவர் தன்னுடைய உடல் நலத்திற்கு கேடு விளைவித்தும், பணத்தை மூடத்தனமாக செலவழித்தும், ஒரு கெட்ட முன்மாதிரியை நிலைநாட்டியும், திருச்சபைக்கு கலங்கம் செய்தும் கொண்டுள்ளார் என்பதையும், இந்த எல்லா கேடுகட்காக தேவனுக்கு பதில் சொல்ல வேண்டும் என்பதை உணராது உள்ளார். கிறிஸ்தவர்களை, புகைப்பிடிக்கும் பழக்கத்தைக் கைவிடச் செய்ய என்ன செய்யலாம்?

## சாத்தியமான தீர்வுகள்:

1. புகைப்பிடிப்பவர்களுக்கு திருமுழுக்குக் கொடுக்க மறுத்துவிடலாம்.
2. புகைப்பிடிக்கும் அங்கத்தினர்களிடமிருந்து ஐக்கியத்தை (உறவை) விலக்கிக் கொள்ளலாம்.
3. கிறிஸ்துவுக்கு தங்களையே ஒப்படைப்பதென்றால் என்ன? என்று அங்கத்தினர்களுக்குக் கற்றுக் கொடுக்கலாம்
4. இந்தப் பழக்கத்தைக் கைவிடும்படி அவர்களை நிர்பந்தம் செய்யலாம்.
5. இந்தப் பிரச்சனையை அப்படியே கைவிடலாம்.

## தொடர் விவாதத்திற்கு:

1. புகைப்பிடித்தல் ஒரு பாவமா?
2. ஒருவர் புகைப்பிடித்தலைக் கைவிடக் கூடுமா?
3. புகைப்பிடித்தலால் ஏதேனும் நன்மை உண்டாகும் என எதையும் கூற முடியுமா?
4. ஏன் ஜனங்கள் புகைப்பிடிக்கிறார்கள்?
5. வெற்றிலைப் பாக்குப் போடுதல், மூக்குப்பொடி போடுதல் போன்றவற்றைப் போல சிகரட் புகைப்பதும் ஒரு குற்றமா?

# திருச்சபையில் இசை

## MUSIC IN THE CHURCH

**சிந்திக்க வேண்டிய வசனங்கள்:**

| | | |
|---|---|---|
| எபே. 5:19 | 1கொரி.14:14,15 | கொலோ.3:16 |
| எபி.13:15 | ரோமர் 15:9 | எபி.2:12 |
| யோவான் 4:24 | வெளி.22:18,19 | 2தீமோ.3:16,17 |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது:**

திருமதி. சுசீலா திருச்சபையின் அங்கத்தினர் ஒருவருடன் வசனத்தைத் தொடர்ந்து படித்து வந்தார். மேலும், அவர் திருச்சபையில் ஏன் இசை இருப்பதில்லை என தெரிந்து கொள்ள விரும்பினார். நமக்கு திருச்சபையில் இசை இருக்கிறது என்றும், அது வாத்திய இசையல்ல, மாறாக வாய்ப்பாட்டு (குரல் இசை) என்று கூறப்பட்டது. அநேக நாமகர்ண திருச்சபைகளில் வாத்திய இசை பயன்படுத்தப் படுவதால், கிறிஸ்துவினுடைய சபையில் உள்ள சில பெலவீனமான அங்கத்தினர்களுகும் கூட, 'நாம் ஏன் இசைக்கருவிகளைப் பயன்படுத்துவது இல்லை?' என நினைக்கின்றனர். அவர்களுக்கு அதில், தவறு ஏதும் இருப்பதாக தெரியவில்லை. அவர்களுக்கு அது விருப்பமாக உள்ளது. மேலும், அதைப் பயன்படுத்துவது ஆராதனைக்கு கூடுதல் மதிப்பளிக்கும் என நினைத்தனர். இதைக் கேள்விகட்கு நாம் எப்படி பதில் அளிக்க வேண்டும்?

**சாத்தியமான தீர்வுகள்:**


1. இந்தப் பிரச்சனை தொடர்பான வேத வசனங்களைப் போதிப்பது.
2. இந்தப் பிரச்சனையை அப்படியே புறக்கணித்து விடலாம்.
3. தேவனுடைய ஒழுங்கமைப்புடன் சிலவற்றைக் கூட்டுவதினால் உண்டாகும் ஆபத்துக்களை வலியுறுத்துவது.
4. இசைக்கருவியினை உபயோகிக்கும் எல்லாவரையும் கண்டனம் செய்யலாம்.
5. இசைக்கருவிகளின் அதிகப்படியான இரைச்சலைவிட மனிதனுடைய குரலை உபயோகிப்பதின் அழகை ஆராதனையில் விவரிக்கலாம்.

**தொடர் விவாதத்திற்கு:**

1. பழைய ஏற்பாட்டில் உள்ள ஆதாரங்களை வைத்து, ஆராதனையில் இசைக் கருவிகளை பயன்படுத்துவதை நியாயப்படுத்த முடியுமா?
2. பரலோகத்தில் உண்மையான வாத்தியங்களின் இசை இருக்குமா? இது இன்று, திருச்சபை ஆராதனைக்கென்று உள்ள கட்டளைகளை

பாதிக்குமா?

3. வீட்டில் தாங்கள் செய்யும் எல்லாவற்றையும் ஆராதனையின்போது கிறிஸ்தவர்கள் செய்ய முடியுமா?
4. ஆராதனையிலே வாத்திய இசையை பயன்படுத்த ஏன் பெரும்பாலானோர் உறுதியாயுள்ளனர்?
5. ஆராதனைக்கு வெளியே வாத்திய இசைக்கருவிகளை பயன்படுத்துவதில் ஏதும் தவறு உண்டா?
6. நாம் ஏன் ஆராதனையில் இசைக்கருவிகளை பயன்படுத்தக் கூடாது?
7. ஆராதனை என்றால் என்ன? மேலும் அதினால் யார் பிரியப்பட்டு, மகிமைப் படுத்தப்பட வேண்டும்?



# அற்புதங்கள்

## MIRACLES

**சிந்திக்க வேண்டிய வசனங்கள்:**

| | | |
|---|---|---|
| மத்.9:12 | பிலி.2:25–30 | 1தீமோ.5:23 |
| யாக்.1:25 | 2கொரி.12:7–9 | யோவான் 16:13 |
| 1கொரி.13:8–10 | அப்.2:1–4,6,43 | 1கொரி.14:19 |
| யோவான் 20:30,31 | 2தெச.2:2–10 | 2தீமோ.4:20 |
| மத்.7:21–23 | | |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது:**

ஜான் தற்பொழுதுதான் கிறிஸ்தவரானார். மேலும் அவர் தாமதமாகத்தான் 'அற்புதங்கள்' பற்றி சிந்திக்க ஆரம்பித்துள்ளார். பல மதங்களிலும் மக்கள் அற்புதங்கள் செய்வதாகக் கூறிக் கொள்வதும்; அநேக நாமகர்ண சபைகளிலும் 'புரியாத' மொழிகளைப் பேசி அற்புதங்கள் செய்வதாக கூறுவதும் அவருக்குத் தெரியும். மேலும், எப்பொழுதெல்லாம் இந்த வெளிநாட்டினர் இந்தியா வந்தாலும் அந்நிய பாஷையில் பேசுவதாகக் கூறும் இவர்கள் தங்களுக்கு மொழிபெயர்ப்பாளர்களை உபயோகிக்கின்றனர். ஆனால் முதல் நூற்றாண்டில் அப்போஸ்தலர்கள் மொழிபெயர்ப்பாளர்கள் இல்லாமலே பேசினார்கள். அப்படியானால், அற்புதங்களின் உண்மையான நோக்கம் என்னவென்று ஜான் வியக்கிறார்; மேலும், மக்கள் உண்மையிலேயே அற்புதங்கள் செய்கிறார்களா? அல்லது தங்களைப் பின்பற்றுபவர்களை ஏமாற்றுகிறார்களா? என்று தான் எப்படி சொல்ல முடியும் என்கிறார். இதற்கு ஜான் என்ன செய்ய வேண்டும்?

**சாத்தியமான தீர்வுகள்:**

1. இந்தப் பகுதியைப் பற்றி வேதாகமம் (பைபிள்) என்ன சொல்கிறது என படித்துக் கற்றுக் கொள்ளலாம்.
2. எந்த ஒரு மதவாத தலைவர் சொல்வதையும் அப்படியே நம்பலாம்.
3. ஜனங்களுக்கு, அற்புதங்களைப் பற்றி வேத வசனம் கூறுவதை சொல்வது மட்டுமின்றி, சில உண்மையான விளக்கங்களையும் செய்து காட்டலாம்.
4. இன்னும் பல காரியங்களிலும் இந்த மக்கள் எவ்வாறு தவறுகளைப் போதிக்கிறார்கள் என விளக்கிக் காட்டலாம்.
5. இதை எல்லாம் அப்படியே விட்டுவிடலாம் காலப்போக்கில் அது சரியாகி விடும்.

**தொடர் விவாதத்திற்கு:**

1. அற்புதம் என்றால் என்ன?
2. தாங்களும் அற்புதம் செய்வதாகக் கூறும் சில அவிசுவாசிகள் இன்று யார்?
3. இந்த அற்புதம் செய்யும் நபர்கள் எழுப்பிய மரித்தவர்கள் எங்கே?
4. இந்த ஜனங்கள் தங்களுக்கு தெரியாத ஒரு பாஷையை (உண்மையான மொழியை) இன்று பேச முடியுமா?
5. இன்று தான் விரும்பினால், தேவன் அற்புதங்களைச் செய்ய முடியுமா?



# மாய்மாலம்

## HYPOCRISY

**சிந்திக்க வேண்டிய வசனங்கள்:**

மாற்கு 12:15 லூக்.13:15 லூக்.12:1
மத்.6:2,5,16 1தீமோ.4:2 மத்.22:18
யாக்.3:17 மத்.23:13–29 நீதி.11:9
1பேதுரு 2:1 மத்.7:5

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது:**

மாய்மாலம் என்பது நடிப்பது; ஒரு நாடகத்தையே நடத்துவது போன்றது. மேலும், சொல்வது ஒன்று, செய்வது ஒன்றாக இருப்பதாகும். ஒரு மாய்மால நபர் கிறிஸ்தவத்தைப் போதித்தாலும், தான் போதிப்பதை செய்யாதவராவார். அவர் ஒருவரை ஒரு தவறுக்காக கடிந்து கொள்வார்; ஆனால்தானே, அதே தவறை செய்வார். இது ஒரு மோசமான பாவம்; மேலும் வேறு எந்தப் பாவத்தையும் விட இதுதான் சபையை மோசமாக பாதிக்கும். ஆண்டவர் மாய்மாலத்தை வெறுக்கிறார். இது, மனந்திரும்பாத தன்மையின் அடையாளம். இது நேர்மையற்ற தன்மையை அடையாளம் காட்டுகிறது. இது முதிர்ச்சியற்றத்தன்மையைக் காட்டுகிறது. ஆனால், இந்த பாவத்தை சபையில் இருந்து அகற்ற என்ன செய்யலாம்?

**சாத்தியமான தீர்வுகள்:**

1. இந்தத் தவறை செய்பவர்களிடம் பேசலாம்.
2. அவர்கள் தாங்களாகவும் சரியாகிவிடுவார்கள் என்ற நம்பிக்கையில் தனியாக விட்டுவிடலாம்.
3. அப்படிப்பட்டவர்களுக்கு முன்பாக சரியான முன்மாதிரியை ஏற்படுத்த கவனமாயிருக்கலாம்.

**தொடர் விவாதத்திற்கு:**

1. எல்லா மாய்மாலங்களையும் சபையில் இருந்து அகற்ற எப்பொழுதாவது முடியுமா?
2. வாழ்க்கையில் ஒவ்வொரு பகுதியிலும் மாய்மாலம் இல்லையா என்ன?
3. சபையில் உள்ள மாய்மாலம் தான் தன்னை சபைக்கு வரவிடாமல் தடுக்கிறது என்று ஒருவர் கூறினால், அதைப் பற்றி என்ன?
4. ஒரு மாய்மாலக்காரர் மிக அதிகமாக யாரைப் புண்படுத்துகிறார்?

# தாழ்மை

## HUMILITY

**சிந்திக்க வேண்டிய வசனங்கள்:**

யாக். 4:6–10
1தீமோ.6:11
கொலோ.3:12
யாக். 1:21
எபே. 4:2
கலா. 5:22,23
பிலி. 2:8
தீத்து 3:2
மத். 5:5
1பேதுரு 3:15
1பேதுரு 5:5,6
2தீமோ.2:24,25
லூக்.14:11
யாக். 3:13

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது:**

பெருமை மிக்கவர்களாய், தாங்களே முக்கியமானவர்கள் என்ற எண்ணத்துடன் ஆவிக்குரிய பெருமையுடன் கிறிஸ்தவர்கள் இருக்கும்போது அவர்கள் செய்யும் நன்மையை விட அதிகமான பாதிப்பை அவர்கள் உண்டாக்கக் கூடும். அவர்கள் தங்கள் சூழ்நிலை, குடும்பம், உறவுகள், பணபலம், வேலை, அறிவு, திறமை அல்லது சபையில் தலைமைத்துவம் ஆகியவற்றினால் இப்படி பெருமையாக நினைக்கலாம். இதனால் தான் சபையில் உள்ள ஒரு புதிய கிறிஸ்தவர் மூப்பராக நியமிக்கப்பட முடியாது. மேலும், இளம் பிரசங்கியார்கள், தங்களுக்கு சபை அதிகமான கவனம் செலுத்தும்போது இப்படிப்பட்ட மனநிலையில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மாறாக, தாழ்மை மற்றும் அமைதியின் அவசியத்தை வேதாகமம் அதிகமாகவே போதிக்கின்றது. பெருமையான எண்ணத்திலிருந்து தங்களை பாதுகாத்துக் கொண்டு, தாழ்மையின் ஆவியை வெளிப்படுத்த கற்றுக் கொடுக்க கிறிஸ்தவர்களுக்கு உதவ என்ன செய்யலாம்?

**சாத்தியமான தீர்வுகள்:**

1. ஒரே ஒரு அங்கத்தினர் மீது மட்டும் அதிகமான கவனம் செலுத்துவதை தவிர்க்க வேண்டும்.
2. அதிக நாட்களாக அங்கத்தினர்களாக இருக்கக் கூடியவர்கள், கொஞ்ச நாட்களாக அங்கத்தினர்களாக இருக்கக் கூடியவர்கள், கொஞ்ச நாட்களாக அங்கத்தினர்களாக உள்ளவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும்.
3. தாழ்மையை அவசியப்படுத்தும் பாடங்களை கற்றுக் கொடுக்க வேண்டும்.
4. நாம் சத்தியத்தை சரியாக புரிந்துள்ளோம் என நம்புவதால், நாம் பெருமை கொள்ள எல்லா உரிமையும் உண்டு.

**தொடர் விவாதத்திற்கு:**

1. தாழ்மை என்றால் என்ன?
2. பெருமை என்றால் என்ன?
3. பெருமையின் கனிகள் சிலவை யாவை?
4. தாழ்மை என்பது பெலவீனத்தின் அடையாளமா?

# நன்றி உணர்வு

## GRATITUDE

**சிந்திக்க வேண்டிய வசனங்கள்:**

| | | |
|---|---|---|
| சங். 100:4 | 2கொரி.2:14 | கொலோ.3:15 |
| மாற்கு 8:6 | ரோமர் 1:21 | மாற்கு 14:23 |
| எபே. 5:20 | யோவான் 6:11 | எபி. 13:15 |
| அப். 28:15 | | |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது:**

அநேகருக்கு 'நன்றி' என்று எப்படி சொல்வது என்றே தெரியவில்லை. அவர்கள் எல்லாம், தொடர்ந்து பெற்றுக் கொண்டே இருக்கிறார்கள். ஆனாலும் தாங்கள் பெற்றுக் கொள்வதற்கு எப்படி நன்றி (பாராட்டு) சொல்வது எனக் கற்றுக் கொள்ளவில்லை. இறுதியில், அவர்களுடைய நன்றி உணர்வு இல்லாமையின் காரணமாக, அவர்கள் பெறுவதும் குறைந்து விடும்; ஏனென்றால், நன்றி உணர்வில்லாத யாருக்குமே, மற்ற யாரானாலும் சரி; தொடர்ந்து உதவ மாட்டார். மற்றொரு நிலையில், ஒரு உண்மையான கிறிஸ்தவன் தன்னிடத்தில் உள்ளதாகவும், தனக்கு கிடைக்கும் உதவிக்காகவும் எப்பொழுதுமே நன்றி கிடைக்கும் உதவிக்காகவும் எப்பொழுதுமே நன்றி சொல்வான். நாம் பெறுகின்ற உதவி எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அது 'நன்றி' என்ற ஒரு வார்த்தைக்கு பாத்திரமாயிருக்கிறது. நீங்கள் எப்படி நன்றி சொல்லுவது என கற்றுக் கொள்ளாமல் இருப்பீர்களானால், ஏன் முயற்சிக்கக் கூடாது? முயற்சி செய்து பாருங்கள். அது உங்களையும், நீங்கள் யாருக்கு நன்றி சொல்கிறீர்களோ அவர்களையும் மகிழ்விக்கும். முதலில், தேவன் உங்களுக்குச் செய்த நன்மைகளை நினைத்து அவருக்கு முதலில் நன்றி கூறுங்கள். ஒருமுறை மட்டும் அல்ல, தினந்தோறும் உங்கள் குடும்பத்து மக்களை, உங்கள் சகோதர, சகோதரிகளை (திருச்சபையில்) உங்களுக்கு வழி சொல்பவர்களை, கடைக்குப் போகையில் உங்களுக்கு உதவுபவர்கள், உங்களுக்கு சாப்பாடு கொடுத்து உதவுபவர்கள் (கடையில்) யாருக்கானாலும் நன்றி சொல்ல மறவாதீர்! நாம் நன்றியுணர்வுடன் இருப்பதற்கு என்ன செய்யலாம்?

**சாத்தியமான தீர்வுகள்:**

1. நமக்கு தருவதாக வாக்குக் கொடுக்கப்பட்டு, எது நமக்கு கொடுக்கப் பட்டாலோ, நடந்தாலே அதை ஏற்றுக் கொள்ளலாம்.
2. இயேசு நமக்காக செய்தவற்றையும், அதற்கு நாம் நன்றி சொல்ல

வேண்டியதின் அவசியத்தையும் நினைத்துப் பார்க்கலாம்.

3. நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்பத உணர்ந்து கொள்ள, நம்முடைய ஆசீர்வாதங்களை எண்ணிப்பார்க்க வேண்டும்.
4. நமக்கு எது கொடுக்கப் பட்டாலும், அல்லது என்ன உதவி செய்ய பட்டாலும் அதற்காக நம்முடைய நன்றியைத் தெரியப்படுத்த நாம் பழகத் தொடங்க வேண்டும்.
5. நம்முடைய நன்றியுணர்வையும் பாராட்டையும் மக்கள் புரிந்து கொள்வார்கள் என்றும், அதை வார்த்தைகளில் வெளிப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்றும் நியாயப்படுத்தலாம்.

**தொடர் விவாதத்திற்கு:**

1. ஏன் அநேகர் எப்பொழுதுமே 'நன்றி' என்று சொல்வதில்லை?
2. உங்களைச் சுற்றியுள்ள மக்கள் தங்கள் பாராட்டுதலை எவ்வாறு வெளிப் படுத்துகிறார்கள்?
3. நீங்கள் செய்த ஒன்றிற்காக யாராவது உங்களுக்கு நன்றி சொல்லும்போது, அதை நீங்கள் பாராட்டுவீர்களா?
4. நன்றியுடைமை என்றால் என்ன?



# மக்களுக்கு உதவுதல்

**HELPING PEOPLE**

**சிந்திக்க வேண்டிய வசனங்கள்:**

| | | |
|---|---|---|
| அப். 6:1–4 | யாக். 2:5, 14–26 | கலா. 6:2,10 |
| 1கொரி. 13:3 | கலா. 2:10 | 1கொரி. 16:1,2 |
| ரோமர் 15:26 | 1தீமோ. 5:3–10,16 | |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது:**

நம்மைச் சுற்றிலும் எங்கு பார்த்தாலும் ஏழை மக்கள் உள்ளனர். அவர்களுக்கு உதவி செய்யப்பட வேண்டுமா? யார் அவர்களுக்கு உதவ வேண்டும்? அவர்களுக்கு எவ்வளவு உதவி செய்ய வேண்டும்? இந்த கேள்விகளுக்கு பதிலளிக்க வேதாகமத்தைப் படித்துப் பார்த்தால் அங்கே நாம் கடைப்பிடிக்க வேண்டிய சில வழிமுறைகள் உள்ளன. முதலாவது, கிறிஸ்தவர்கள் இயற்கையாகவே தங்கள் சொந்த சகோதர, சகோதரிகளைப் (சபையில்) பற்றி அக்கறையுடன் இருக்க வேண்டும். இரண்டாவது, யாரோ ஒருவருக்கு உதவுதல் என்ற விஷயத்தில், நிறைய கேள்விகள் கேட்கப்பட வேண்டியது அவசியம். அவர்களுக்கு உண்மையிலேயே உதவி தேவையா? உதவி பெற அவர்களுக்கு தகுதி உள்ளதா? அவர்களுக்கு எந்த வகை உதவி தேவை? எவ்வளவு உதவி செய்யப்பட வேண்டும்? மூன்றாவது சபையினால் உதவி செய்ய முடியுமா? எத்தனை பேருக்கு உதவி தேவை என்பதைக் காட்டிலும், இந்த தேவைகட்கு சபை உதவ எவ்வளவு ஆர்வமாக உள்ளது என்பதைக் காட்டிலும் தேவையான அளவு பணம் சபையில் இல்லையெனில் அதினால் உதவ முடியாது. இது எதை உணர்த்துகிறது என்றால், கிறிஸ்தவர்கள் தாங்கள் பெறுகிற ஆசீர்வாதத்திற்கு நன்றியாக தாராளமாய் காணிக்கை கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான், ஒரு தேவை அவசியமாக இருக்கும்பொழுது, அதை சபை பார்த்துக் கொள்ள முடியும். திருச்சபையின் பொக்கிஷ பை என்பது ஒரு அடித்தரை இல்லாத துவாரம் என்றும், அதில் நாம் ஒன்றுமே போட்டு வைக்காமல், அவசிய தேவைகட்கு அதினிடம் செல்ல முடியாது என சிலர் வெளிப்படையாக யோசிக்கின்றனர். தேவையுள்ளோருக்கு உதவுவது பற்றி சரியான முக்கியத்துவம் கொடுக்க நாம் என்ன செய்யலாம்?

**சாத்தியமான தீர்வுகள்:**

1. எல்லா ஏழைகட்கும் சபையினால் உதவ முடியாததினால், எல்லா வேண்டுதலுக்கும் இல்லை என்ற பதிலை சொல்வதை கொள்கையாக வைத்துக் கொள்ளலாம்.

2. தகுதியின்படி ஒவ்வொரு விண்ணப்பத்தையும் ஆராய்ந்து, உண்மையான தேவையை கண்டறிந்த பின்னரே அதற்கு உதவலாம்.
3. முறையில்லாமல் சபையின் பணம் பயன்படுத்தக்கூடாது.
4. வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே ஆசீர்வாதம் என சபையின் அங்கத்தினர்கட்கு கற்றுத்தரப்பட வேண்டும்.

**தொடர் விவாதத்திற்கு:**

1. ஏழைகட்கு உதவுவதின் நோக்கம் என்ன?
2. பெரிய அளவில் உதவி செய்ய வேண்டுமா? எப்பொழுது? ஏன்?
3. மக்களுக்கு எவ்வாறு உதவி செய்யப்பட வேண்டும்?
4. பொருளாதார உதவி பெறுவதற்காகவே ஒருவர் கிறிஸ்தவராக மாறலாமா?
5. ஏன் மக்களுக்கு உதவித் தேவைப்படுகிறது?



**பார்வையற்றோருக்கு**
**உதவி செய்யுங்கள்**

# வேலை

## WORK

**சிந்திக்க வேண்டிய வசனங்கள்:**

| | | |
|---|---|---|
| 1தெச. 4:11 | 1கொரி. 4:12 | 2தெச. 3:10 |
| எபே. 4:28 | 2தெச. 3:12 | 2தீமோ.2:15 |
| மத். 10:10 | 2கொரி. 15:58 | ரோமர் 4:4 |
| யாக். 1:22 | | |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது:**


சங்கர் இப்பொழுதுதான், தன்னுடைய இளங்கலைப் பட்டப்படிப்பை முடித்து விட்டு வேலைக்காக முயற்சி செய்து கொண்டுள்ளான். சரீர வேலையை விட, மூளைக்கு வேலை தரும் ஒரு வேலையை தன்னுடைய படிப்பினால் தான் பெற வேண்டும் என அவன் விரும்புகிறான். உண்மையில், கடினமான வேலை செய்வதற்கு வெட்கமோ, அதிகமான பெருமையோ அடையும் நிலைக்கு சங்கர் போய் விட்டான். அவனும் அவனுடைய தலைமுறையை சார்ந்த அனைவரும் இப்படிப்பட்ட சாதாரண வேலையெல்லாம் (உடல் உழைப்பு) தங்கள் தகுதிக்கு ஒவ்வாது என்றும், அதை விட தாங்கள் விரும்பும் நல்ல வேலை கிடைக்கும் வரை பெற்றாரின் உழைப்பில் உட்கார்ந்து சாப்பிடுவதை விரும்புகின்றனர். தரையைக் கூட்டுபவர்கள் மற்றும் தோட்டத்தை பராமரிப்போர் மற்றும் இப்படிப்பட்ட மற்ற வேலைகளை வருடம் முழுவதும் செய்பவர்களை நன்றி உணர்வுடன் எண்ணிப் பார்ப்பதை விட்டு விட்டு அவர்களை இவன் கேவலமாகப் பார்க்கிறான். இது கிறிஸ்துவின் ஆவி இல்லை. வேலை சம்பந்தமாக, உங்களுக்கு கிறிஸ்துவின் உறுதியான மனநிலை பெற்றுக் கொள்ள திருச்சபை எவ்வாறு உதவ முடியும்?

**சாத்தியமான தீர்வுகள்:**

1. பெருமையும் சோம்பேறித்தனமும் ஒன்றுடன் ஒன்று கைக் கோர்த்துக் கொள்ளும் என உணர்த்தலாம்.
2. இன்று வெற்றிபெற்றவர்கள் எல்லாருமே கடினமான உழைப்பினால்தான் முன்னேறியுள்ளனர் என சுட்டிக் காட்டலாம்.
3. மற்றவர்கள் பார்க்கிற வேலையினால் நமக்கு என்ன பலன் கிடைக்கிறதென்றும், நாம் கேவலமாக நினைக்கும் வேலைகளை அதை செய்பவர்கள் விட்டுவிட்டால் என்ன நடக்கும் என்றும் விவரிக்கலாம்.
4. இது ஆவிக்குரியதல்ல, மாறாக, சமூகம் சம்பந்தப்பட்டது என எண்ணி இந்தக் கேள்வியை விட்டுவிடலாம்.
5. இது ஒரு எதார்த்தமான மனநிலை என எண்ணி மன்னித்து விடலாம்.

**தொடர் விவாதத்திற்கு:**

1. ஏன் நிறைய வேலைகளை எண்ணி மக்கள் முகம் சுளிக்கின்றனர்?
2. உடல் உழைப்பு சம்பந்தமான வேலைகள் செய்வதில் ஏதேனும் தவறு உண்டா?
3. ஒரு சாதாரண மனிதன் வேலையில்லாமல் அதிக நாள் இருக்க முடியுமா?
4. வேலையைப் பற்றி நம்முடைய மனநிலை என்னவாக இருக்க வேண்டும்?
5. வேலை செய்யாமல் இருப்பது தேவகிருபையா?



# சோம்பேறித்தனம்

## LAZINESS

**சிந்திக்க வேண்டிய வசனங்கள்:**

நீதி. 12:24,27
எபி. 6:12
நீதி. 15:19
பிர. 10:18
நீதி. 18:9
நீதி. 6:6–9
நீதி. 24:30–34
நீதி. 20:4
மத்.25:26
1கொரி. 15:58
1தீமோ. 5:13
2தெச. 3:10,12
ரோமர் 12:11

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது:**


ரமேஷ் தனக்கு நியமிக்கப்பட்ட வேலையை எப்பொழுதும் ஒழுங்காகச் செய்வதில்லை. முதலாளி தன்னிடம் ரொம்ப நேரம் வேலை வாங்குவதாகவும், அல்லது வேலை கடினமாக இருப்பதாகவும் அல்லது தனக்குக் கொடுக்கப்படும் சம்பளம் மிகவும் குறைவானதாகவும் அவர் குறை சொல்லிக் கொண்டே உள்ளார். தன்னுடைய மிகப்பெரிய குடும்பத்தை கவனிக்க அவர் பெரும்பாலும் தன்னுடைய உறவினர்களையே சார்ந்திருக்க வேண்டியுள்ளது. சில நேரங்களில் அவர் தன்னுடைய நண்பர்களிடமே கடன் வாங்க வேண்டியுள்ளது. சில நேரங்களில் அவர் நாமகர்ண கூட்டத்தாரின் உதவிகளினால் உணவு, உடை மற்றும் பணமும் கூட இவர் பெற்றுள்ளார். இப்பொழுது இவர் கிறிஸ்தவராகி விட்டார். அவர் தன்னுடைய சோம்பேறித்தனத்திலும், தன்னுடைய பொறுப்புகட்காக மற்றவர்களை சார்வதிலும் தொடர்ந்து நீடிக்கலாமா?

**சாத்தியமான தீர்வுகள்:**

1. ஆம்! தன்னுடைய எல்லா தேவைகளையும் பெறும்படி அவர் சபையினிடம் திரும்பலாம்.
2. ஆம்! அவருடைய குடும்பம் அதே நிலையில் உள்ளதால், அவருக்குத் தொடர்ந்து உதவும்.
3. இல்லை! ரமேஷ் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாய் இருப்பதால் அவருடைய வாழ்வு மாறத்தான் வேண்டும்.
4. இல்லை! திருச்சபை சோம்பேறித்தனத்திற்கு எதிராக கற்றுத்தர வேண்டும்; மேலும் சபையை ஒரு பொருள் ஈட்டும் இடமாக எண்ணும் நபர்களிடம் இருந்து ஐக்கியத்தை விளக்கிக் கொள்ள வேண்டும்.

**தொடர் விவாதத்திற்கு:**

1. சோம்பேறித்தனம் என்றால் என்ன?
2. மக்கள் ஏன் சோம்பேறித்தனமாயிருக்கின்றனர்?
3. சோம்பேறித்தனத்தின் சில விளைவுகள் யாவை?
4. வேலை செய்ய விருப்பம் இல்லாதவர்களுக்கு எதையாவது கொடுத்து உதவ நீங்கள் விரும்புவீர்களா?



# அடக்கமாயிருத்தல்

## MODESTY

**சிந்திக்க வேண்டிய வசனங்கள்:**

1தீமோ. 2:11
1கொரி. 11:6
1பேதுரு 3:3
ஆதி. 2:21
வெளி. 3:18
ஆதி. 10:22–25
வெளி. 16:15

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது:**

இந்திய தேசத்திலே, பெண்கள் தலைமுதல் கால்வரை உடையணிந்து மூடி இருப்பது ஒன்றும் புதியது அல்ல. மற்றொரு பக்கம், ஆண்கள் வெறும் உடம்புடன் வெளியில் சுற்றுவதும், வயதான பெண்கள் தங்கள் மார்பகங்களை மறைக்காததும், உடையே அணியாமல் சிறு பிள்ளைகள் ரோட்டில் விளையாடுவதும் ஒன்றும் புதியது அல்ல. உண்மையில், பிறந்தநாள் உடையில் இடுப்புவரை மட்டும் குழந்தைகளுக்கு பெற்றார் உடையும் உடுத்துகின்றனர். மேல்நாட்டு உடை அணிபவர்கள் அநேகர் போதிய அளவு உடை அணிவதில்லை. மற்றொரு பக்கம் பார்த்தால், சிறுவர்களும், பெரியவர்கள் பொதுவான கழிப்பறையையே உபயோகிப்பதைப் பார்க்கிறோம். இவையனைத்தும் அடக்கமற்ற தன்மையும், முரட்டுத்தனமும், ஆபாசமும், படித்தவர்கள், கிறிஸ்தவர்கள் செய்யக் கூடாததுமாக உள்ளது. இதன் மத்தியிலும் இவைகளில் சில சபைகள் மக்களிடமே கூட காணப்படுகின்றது. இந்தப் பழக்கங்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது?

**சாத்தியமான தீர்வுகள்:**

1. மற்றவர்கள் மீது அடக்கத்தைப் பற்றிய எண்ணங்களை திணிப்பதை மறுக்கலாம்.
2. இப்படிப்பட்ட குற்றம் புரிபவர்களை தனியே அழைத்து, அவர்களுக்கு போதிக்கலாம்.
3. இந்தப் பாடத்தைப் பற்றி பொதுவாக எல்லாருக்கும் போதிக்கலாம்.
4. இதை புறக்கணித்து விடலாம்; மேலும் காலப்போக்கில் இது சரியாகி விடும்.

**தொடர் விவாதத்திற்கு:**

1. அடக்கம் மற்றும் அடக்கமின்மை என்றால் என்ன? இதை எப்படி பிரித்துப் பார்க்கலாம்?
2. அடக்கமில்லாமல் இருப்பதற்கு அறியாமையை காரணம் சொல்ல முடியுமா?
3. நீங்கள் அடக்கமில்லாமை என பகுத்துப் பார்க்கும் சில காரியங்களை குறிப்பிடுங்கள்.
4. ஒருவர் அதிகப்படியான உடை அணிவது சாத்தியமா?
5. அடக்கமின்மை என்பது உடையை மட்டும் சார்ந்த விஷயமா?

# பொருளாசை

## (உலகப் பொருட்களை முக்கியத்துவப்படுத்தல்) MATERIALISM

**சிந்திக்க வேண்டிய வசனங்கள்:**

எபி. 11:26
மத். 21:12,13
அப். 5:1–11
1தீமோ. 6:9,10
லூக். 16:1–12,13,19–21
அப்.8:18–20
யாக். 5:3
மத். 4:4
லூக்.12:16–21
1யோவான் 2:15–17
மத்.6:19,20,33
மத். 16:26
மத். 13:22
வெளி.3:17

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது:**

வெகு சிலருக்கே இந்த உலகத்தின் எல்லா ஐஸ்வர்யமும் இருக்கிறது. அவர்களுடைய முக்கியத்துவம் இயற்கையிலேயே வாழ்வின் பொருட்களிலேயே உள்ளது. இதனால், அநேக ஏழைகள் இத்தகைய பாவத்திலிருந்து விலகி இருக்கின்றனர் என்று பொருள் அல்ல. அவர்களுடைய முக்கியத்துவமும் இவ்வுலகின் உணவு, ஆடை, வீடு மற்றும் ஆடம்பரத்தின் மேல் விருப்பமாயிருக்கிறது. இந்த உலகின் நன்மைகளில் பல அவர்கட்கு இல்லாதிருந்தும் அதைப் பற்றியே அவர் கனவு கண்டுக் கொண்டு, அதை பெற முயற்சி செய்து கொண்டு, அதை பெறும் நாளுக்காக காத்துக் கொண்டிருக்கின்றனர். ஏழையோ, பணக்காரரோ எல்லாருமே உலகப் பொருட்களின் மேலுள்ள மாயையான அன்பை உணர வேண்டும். இறுதியில் அவர்கள் அதினால் திருப்தியடைய மாட்டார்கள். இதைவிட பரிதாபம் என்னவெனில், அநேகர் தங்களுக்கு மாம்ச மற்றும் பொருளாதார உதவிகளைப் பெற மதத்தை உபயோகித்துக் கொள்கின்றனர். இதே முக்கியத்துவத்தை ஆவிக்குரிய விஷயங்களில் கொள்ள, என்ன செய்யலாம்?

**சாத்தியமான தீர்வுகள்:**

1. ஆத்துமாவின் விலையேற்பெற்றத் தன்மையை விளக்கலாம்.
2. நீங்கள் பொருட்களை முக்கியத்துவப்படுத்துபவர் என்பதற்காக பணக்காரராய் இருக்க வேண்டிய அவசியம் இல்லை என சகோதரர்கட்கு நினைவு படுத்துங்கள்.
3. பிராந்திய சபையை, வெறும் சமுதாய உதவி மட்டும் செய்யும் ஒரு நிறுவனமாக மாற்றி விடாதீர்.
4. மனித இயல்பில் பொருட்களை முக்கியத்துவப்படத்துதல் ஒரு அங்கமே என அங்கீகரியுங்கள்.

**தொடர் விவாதத்திற்கு:**

1. பொருளாசை என்றால் என்ன?
2. பணத்துடன் மட்டும் ஏதேனும் தவறிருக்கின்றதா?
3. பொதுவாக, மக்கள் தங்கள் சொத்துக்களை எவ்வாறு பயன்படுத்துகின்றனர்?
4. உண்மையிலேயே யார் பணக்காரன்?
5. எல்லா உலகப் பொருட்களுக்கும் இறுதியில் என்ன நடக்கும்?
6. ஏன் ஆத்துமா மிகவும் விலையேறப்பட்டது?
7. உலகில், மற்ற எதையும் விட நீங்கள் எதை வைத்திருந்தால் நல்லது?

# மேற்கத்திய கலாச்சாரத்தை பின்பற்றுதல்

## IMITATING THE WEST

**சிந்திக்க வேண்டிய வசனங்கள்:**

| | | |
|---|---|---|
| நெகேமியா 13:23–27 | 1தெச. 1:6,7 | 1சாமு. 8:6–22 |
| 1பேதுரு 3:13 | 1கொரி. 4:16 | 2பேதுரு 2:15 |
| பிலிப்பியர் 3:17,18 | 1பேதுரு 2:21 | லூக். 9:23 |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது:**

உலகின் மேற்கத்திய பகுதி நாடுகள் மனித முயற்சியின் எந்த துறையிலும் பணக்கார நாடுகளாயும், முன்னேறிக் கொண்டிருப்பதாயும் காட்சியளிப்பதால், உலகின் ஏனைய நாடுகள் அவர்களைப்போலவே எல்லாவற்றையும் செய்து அவர்களுடன் சேர்ந்து கொள்ள நினைக்கின்றனர். நாகரீகம், பொழுதுபோக்கு, பொருட்கள், உழைக்கும் வகைகள் மற்றும் பலவற்றில் இது உண்மையாகவே உள்ளது. ஆனால், எதிர்பாராத நிகழ்வு என்னவென்றால், தவிர்க்க முடியாமல், நல்லவைகள் ஒதுக்கப்பட்டு, தீயவைகள் பின்பற்றப்படுகின்றன. உதாரணமாக, ஒரு மேற்கத்திய நாட்டு நபர் எப்பொழுதுமே மது குடிப்பவனாகத்தான் தெரிகிறான். ஆனால் அவன் மதுகுடிப்பவனாக இருப்பினும், வாழ்வில் வெற்றி பெறுவதால் நம் நாட்டு மக்களும், வெற்றி பெற வேண்டுமென்றால் மது குடிக்க வேண்டும் என எண்ணுகின்றனர். ஆகையால் நண்பர்களை சந்திக்கும்போது, தான் மற்ற மேற்கத்தியர்களைவிட நவீன பழக்கங்களில் சற்றும் சளைத்தவரல்ல என்பதால், நம்முடையவர் அவர்கட்கு மது வாங்கி கொடுக்கிறார். அவனுக்கு எல்லா மேற்கத்தியரும் மது குடிப்பதில்லை. எனினும், தொழிலிலோ மற்றவற்றிலோ முன்னேற குடிக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை என்றோ தெரிவதில்லை. இதுபோக, புகைபிடித்தல் (சிகரெட்), முடியை நீளமாக வளர்ப்பது (ஹிப்பி), குட்டைப் பாவாடை, கெட்ட வார்த்தை போன்றவையும் உள்ளது. ஆசியர்கள் (இந்தியர்கள்) இவைகளில் மேற்கத்தியரைப் பின்பற்றி பரிதாபமான நிலைக்கு தள்ளப்படுகின்றனர். தான் தானாகவே இருந்து, வாழ்வில் நல்ல பழக்கங்களை கடைபிடித்தால் அவன் மிக நன்றாக இருப்பான். மற்றவர்களுடைய கெட்ட பழக்கங்களை கடைபிடிக்கும் நபர்கள், அதை விட்டுவிடும்படி நாம் என்ன செய்யலாம்?


**சாத்தியமான தீர்வுகள்:**

1. தன்னம்பிக்கை உடையவர்களாயிருக்க மக்களுக்கு உதவலாம்.
2. தாங்களாகவே இருக்கும்படி மக்களை உற்சாகப்படுத்தலாம்.

3. இது சபையை ஒன்றும் பாதிக்காது என்றும், இது சரீர சம்பந்தப்பட்ட விஷயமே என்றும் எண்ணி, இதை அப்படியே விட்டு விடலாம்.
4. யார் அதை செய்தாலும், கெட்டவைகளை விட்டு விலக வேண்டும் என மக்களுக்குப் போதிக்கலாம்.

**தொடர் விவாதத்திற்கு:**

1. வெற்றி என்றால் என்ன?
2. வெற்றி பெறும்படியாக ஒருவர் மேற்கத்திய ஒருவரின் செயல்களை பிரதிபலிக்க வேண்டுமா?
3. ஒருவர் அல்லது எல்லாருமே யாரை பின்பற்ற வேண்டும்?
4. மனிதனை பின்பற்றுவதால் வரும் ஆபத்துக்கள் என்ன?





# பரிணாமக் கொள்கை



**EVOLUTION TAUGHT**

**சிந்திக்க வேண்டிய வசனங்கள்:**

ஆதி. 1:1 | ரோமர் 1:20–25 | சங்.19:1
யோவான் 1:1–14 | கொலோ. 1:15–18 | அப். 17:22–31
எபி. 1:1,2 | 1பேதுரு 3:15

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது:**

இந்தியாவில் உள்ள பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மற்றும் பல்கலைக் கழகங்களிலும் பரிணாமக் கொள்கை கற்பிக்கப் படுகிறது. பரிணாமக் கொள்கையே ஒரு தீமையானது. அனால் அது உண்மையைப் போல கற்பிக்கப்படும்போது இன்னும் மோசமாகின்றது. இது பரிதாபமானது. ஏனென்றால் இது உண்மையாயிராமல் ஒரு அறிக்கையே ஆகும். மேலும் அறிக்கை என்பது, ஒருவருடைய கருத்து மட்டுமே ஆகும். ஆனால், இதையெல்லாம் இளைஞர்கள் எவ்வாறு பகுத்துப் பார்ப்பார்கள்? கிறிஸ்தவ மாணவனைப் பொறுத்தமட்டில், இப்படிப்பட்ட தவறான போதனையை தூக்கி எறிய அவனுக்கு உறுதியான விசுவாசம் வேண்டும். அதே நேரம், சமயம் வாய்க்கும்போது, படைப்பைப் பற்றிய உண்மையை கூற அவன் முயற்சிக்க வேண்டும். இளம் கிறிஸ்தவ மாணவர்கட்கு, இந்த விஷயத்தில் திருச்சபை எவ்வாறு உதவ முடியும்?

**சாத்தியமான தீர்வுகள்:**

1. கிறிஸ்தவ ஆதாரங்கள் சம்பந்தமாக சிறப்பு வகுப்புகளை வாலிபர்களுக்கு நடத்தலாம்.
2. இந்த இளைஞர்களின் விசுவாசத்தைப் பலப்படுத்தும்படி அவர்களுடன் தனியாகப் படிக்கலாம்.
3. இப்படிப்பட்ட பரிணாமக் கொள்கைகள் உண்மையென்று தவறாகப் போதிக்கப்படுகின்றன என பள்ளி மற்றும் நிறுவனங்களின் தலைமையிடம் மறுப்புக் கூறலாம்.
4. இந்த பாடம் மிகவும் குழப்பமானது என எண்ணி இதை விட்டு விடலாம்.

**தொடர் விவாதத்திற்கு:**

1. பரிணாமம் என்றால் என்ன?
2. படைப்பைப் பற்றிய மற்ற ஏதாவது கொள்கைகள் உங்களுக்குத் தெரியுமா?
3. தேவன் இருக்கிறார் என்று ஒரு கிறிஸ்தவன் எப்படி நிரூபிக்க முடியும்?
4. கிறிஸ்தவன் தன்னுடைய விசுவாசத்தைக் குறித்து வெட்கப்பட வேண்டுமா?

# நாட்டுப்பற்று
## LOVE OF COUNTRY



**சிந்திக்க வேண்டிய வசனங்கள்:**

| | | |
|---|---|---|
| ரோமர் 13:1–7 | அப். 22:3 | 1பேதுரு 2:17 |
| 1தீமோ. 6:8 | மத். 22:21 | பிலி. 4:11,12 |
| அப். 25:11 | எபி. 13:5 | அப். 21:39 |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது:**

இந்திய தேசத்தில் எத்தனை பேர் உண்மையில் தங்கள் தேசத்தை நேசிக்கின்றனர்? நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கானோர் தொடர்ந்து வெளிநாட்டிற்கு படையெடுக்கும் முயற்சியில் ஈடுபடுவது இல்லையா? பொதுவாக, எத்தனை பேர் தங்கள் அரசை, சட்டத்தை, காவல்துறையை, ஏன் ரோட்டில் சந்திப்பில் உள்ள சிகப்பு விளக்குகளைக் கூட எத்தனைபேர் மதிக்கிறோம்? இங்கே நாடுமுழுவதும் ஊழலும், கலப்படமும், நம்பிக்கையில்லா தன்மையும் இல்லையா? இதனாலேயோ என்னமோ மக்கள் இந்நாட்டை விட்டு வெளியேற நினைக்கவில்லையா? மற்ற நாடுகளில் பிரச்சனையே இல்லை என அவர்கள் நினைக்கின்றனரா? அவர்கள் வெளி நாட்டிற்கு சொர்க்கத்தின் கனவோடு செல்லுகின்றனர். ஆனால் அங்கு சென்றபின்தான் அவர்கள், தங்கள் சொந்த வீட்டை விட மோசமான இடத்தைக் காண்பார்கள். நம் சொந்த நாட்டை பொறுத்தமட்டில் வேதம் சொல்லுகிறது, நாம் நம்மை ஆளுபவர்களை மதித்து, சட்டத்திற்கு கீழ்படிந்து, நம்மை நடத்துபவர்கட்காக ஜெபிக்க வேண்டும் என்று! நல்ல பிரஜையாக இருந்து, நம் நாட்டின் வளர்ச்சிக்காக உழைத்தால், நமக்கு நல்ல எதிர்காலம் உண்டு. நாம் தங்கி வேலை பார்க்க விரும்பும் அளவு நம்முடைய நாடு மாறும். கிறிஸ்தவர்கள் நல்ல பிரஜைகளாக ஒரு நாட்டில் இருப்பது ஏன்?

**சாத்தியமான தீர்வுகள்:**

1. அவர்கள் தான் மிகச் சிறந்தவர்கள்.
2. கிறிஸ்தவர்கள் மற்ற மக்களைவிட எந்த விஷயத்திலும் வித்தியாசப் பட்டவர்கள் அல்ல.
3. அவர்கள் தங்கள் நாட்டை மேம்படுத்த முற்படுகின்றனர்.
4. கிறிஸ்தவ கொள்கைகள் மிகச்சரியான பிரஜைகளை உருவாக்குகின்றது.

**தொடர் விவாதத்திற்கு:**

1. தன்னுடைய நாட்டை நேசிக்காத ஒருவர் உண்மையான கிறிஸ்தவராயிருக்க முடியுமா?
2. ஒருவர் தன்னுடைய நாட்டை எவ்வாறு முன்னேற்ற முடியும்?
3. ஒருவர் என்ன காரணத்தினால் தன்னுடைய நாட்டை நேசிக்காமல் இருக்கக்கூடும்?
4. ஏன் அநேக மக்கள், தங்கள் சொந்த நாட்டை விட்டு குடிபெயர நினைக்கின்றனர்?
5. ஒருவர் தன்னுடைய நாட்டை நேசிப்பதில் ஏதேனும் தவறு இருக்கிறதா?
6. ஒருவர் தன்னுடைய நாட்டை எந்த அளவிற்கு நேசிக்க வேண்டும்?

# பிறர் பொருட்கள் மீது கரிசனை (அல்லது) அக்கறை

## RESPECT FOR OTHER PEOPLE'S THINGS

**சிந்திக்க வேண்டிய வசனங்கள்:**

| | | |
|---|---|---|
| மத். 7:12 | கலா. 6:10 | கலா. 6:7 |
| லூக். 6:33 | யாக். 4:17 | எபே. 6:6–8 |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது:**

ஏன், மற்றவர்களுக்குச் சொந்தமான பொருட்களை அநேகர் மதிப்பதேயில்லை? உதாரணமாக, ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்தால் கூட, அதின் சுவற்றில் கிறுக்கி எல்லாவிதமான சேதங்களையும் உண்டாக்குவார்கள். பேருந்திலோ, ரயில் வண்டியிலோ பயணம் செய்பவர்கள் அவைகளில் எழுதி, சேதப் படுத்தி அவைகளில் எச்சிலும் துப்புகின்றனர். அநேக அரசாங்க கட்டிடங்கள் சேதப் படுத்தப்பட்டு, தவறாக பயன்படுத்தப் படுகின்றன. அநேக இடங்களில் பொதுக் கழிப்பறைகள் அசுத்தமாகவும், குப்பைகள் ரோடுகளில் பரவியும், அரசாங்க கட்டிட ஜன்னல், கதவுகள் உடைக்கப்பட்டுமுள்ளன. ரோடுகளில் பார்த்தாலும், சாலையில் அறிவிப்பு பலகைகள் சேதப்படுத்தப்பட்டு, ரோடுகள் ஆக்கிரமிக்கப் பட்டு, சுற்றுச்சுவர் அனைத்தும் சுவரொட்டிகளில் நிறைந்துள்ளன. இதற்கான காரணம் என்னவென்று பார்த்தால், பொருள் மற்றவர்களுடையதாய் இருக்கும் பட்சத்தில் அதை சேதப் படுத்துவதில் தவறொன்றும் இல்லை என மக்கள் நினைக்கின்றனர். மற்றவர்களுடைய உணவு, தண்ணீர், மின்சாரம் போன்ற எல்லாவற்றையும் வேலைக்காரர்களும் மற்றவர்களும் வீணாக்குகின்றனர். ஏன்? திருச்சபை மக்களும் கூட, ஆண்டவருடைய பணத்தை வீணாக்கி, கைப்பிரதிகளையும் மற்ற பொருட்களையும் தவறாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர். ஏனெனில் அவை அவர்களுடையதில்லாததினால், இதை தடுக்க என்ன செய்யலாம்?

**சாத்தியமான தீர்வுகள்:**

1. ஒருவர் பொதுச் சொத்தை சேதப்படுத்தினால், தன்னையே சேதப் படுத்துகிறார் என்பதை கற்றுக்கொள்ளுங்கள்.
2. இது வேத வசனத்தின்படி சரியான செயல் அல்ல என உணர்த்தலாம்.
3. இது மனிதனின் மாற்ற முடியாத பண்பு என ஏற்றுக் கொள்ளலாம்.
4. மற்றவர்களின் உடைமைகளை அக்கறையுடன் பாதுகாக்க கிறிஸ்தவர்கட்கு அறிவுரை கூறலாம்.

**தொடர் விவாதத்திற்கு:**

1. நாம் ஏன் மற்றவர்களுடைய பொருட்கள் மீது அக்கறை (பாதுகாப்பு) கொள்ள வேண்டும்?
2. நாம் எவ்வாறு நம்முடைய அக்கறையை காட்ட முடியும்?
3. மற்றவர்களுடைய உடைமைகளை சேதப் படுத்துவதினால் உண்டாகும் சில தீய விளைவுகள் யாவை?
4. தன்னுடைய பொருள் அல்லாத ஒன்றை ஒருவர் சேதப்படுத்துவதினால் என்ன வகை சந்தோஷம் பெற முடியும்?

# சினிமா (திரைப்படம்)

## CINEMA

**சிந்திக்க வேண்டிய வசனங்கள்:**

ரோமர் 12:9 | எபி. 5:14 | 1தெச. 5:22
2தெச. 3:3 | 1கொரி. 15:33

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது:**

முந்தைய காலத்தில் சினிமா என்பது தீமையான ஒன்று என கூறப்பட்டது என்று பீட்டருக்குத் தெரியும். ஆனால் இன்று திரைப்படங்களில் காட்டப்படும் ஒழுக்கமின்மை மற்றும் தீவிரவாதம், சண்டை காரணமாக அது இன்றுக் கேள்விக்குறியாக உள்ளது. இப்படிப்பட்ட குப்பைகளை தானும் தவிர்க்க வேண்டும். மற்றவர்களும் இவைகளைப் பார்ப்பதை தவிர்க்க வேண்டும் என பீட்டர் நினைக்கிறார். ஆனாலும், சில படங்கள் தீமையாக இருப்பதினால், ஒட்டு மொத்தமாக சினிமாக்கள் எல்லாமே தவறானவை அல்ல என்ற எண்ணமம் பீட்டருக்கு உண்டு. சரியான படங்களை தேர்ந்தெடுத்து பார்த்தால், தன்னையோ, பிறரையோ அது காயப்படுத்தாது என பீட்டர் நினைக்கிறார். மேலும் எல்லாருக்கும் அவ்வப்போது ஏதாவது பொழுதுபோக்குத் தேவை என்பதால் அதற்கு சினிமா மட்டுமே ஒரே சாத்தியமான வழி என பீட்டர் நினைக்கிறார். இந்தக் கேள்விக்கு அவர் எவ்வாறு செயல்பட வேண்டும்?

**சாத்தியமான தீர்வுகள்:**

1. எல்லா சினிமாக்களும் தவறானவை மற்றும் பார்ப்பவை பாவம் என ஒதுக்கி விடலாம்.
2. எல்லா படங்களும் பார்க்கலாம்.
3. பார்க்கும் சினிமா படங்களை தேர்ந்தெடுத்துப் பார்க்கலாம்.
4. இந்தப் பிரச்சனைப் பற்றியும், அதற்கான தீர்வு பற்றியும் மற்ற கிறிஸ்தவர்களுடன் விவாதிக்கலாம்.

**தொடர் விவாதத்திற்கு:**

1. ஒரு நல்ல திரைப்படத்தைப் பார்ப்பதில் ஏதும் தவறுண்டா?
2. ஆண்டவருடைய நோக்கத்தை நிறைவேற்ற, ஒரு திருச்சபை எவ்வாறு திரைப்படத்தை பயன்படுத்த முடியும்?
3. ஏன் சிலர் எல்லா சினிமாக்களையும் எதிர்க்கின்றனர்?
4. ஒரு திரைப்படத்தை எது தவறானதாக அடையாளப்படுத்தும்?
5. ஒரு நபர் நல்ல படத்தைப் பார்ப்பாரேயானால், அவர் ஒரு விளையாட்டுப் போட்டியை பார்ப்பதைப் போலதானா அர்த்தம். அதினால் அவர் கெட்டுப் போவாரோ?

# தவறுகளை உணருதல்

## LOSING FACE

**சிந்திக்க வேண்டிய வசனங்கள்:**

1யோவான் 1:7–10 2பேதுரு 2:21,22 யாக். 5:16

2பேதுரு 1:8–11 லூக். 15:11–32

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது:**

ஒருவர் தான் குற்றமோ, தவறோ, பாவமோ செய்து விட்டால் அந்தத் தவறை எளிதில் ஒப்புக் கொள்வதில்லை. ஒருவருடைய பெருமை, எப்பொழுதுமே அவர் செய்த தவறை ஒப்புக் கொள்ளச் செய்யாது. அப்படி ஒப்புக் கொள்வது அவர்கட்கு வெட்கத்தை உண்டுபண்ணும் என்று நினைக்கின்றனர். ஒருவர் எப்பொழுது பாவம் செய்தாலும் அவர் அதிலிருந்து மனந்திரும்பி, குற்றங்களை அறிக்கைசெய்து மற்றும் மன்னிப்பிற்காக தேவனிடம் மன்றாட வேண்டும். இவ்வாறு எல்லா கிறிஸ்தவர்களும் செய்யும்படி அவர்களை உற்சாகப்படுத்த என்ன செய்யலாம்?

**சாத்தியமான தீர்வுகள்:**

1. இந்தப் பாடத்தைப் பற்றி வெளிப்படையாக மக்களிடம் பேசலாம்.
2. அவர்களுடைய இந்நிலைமையைப் பற்றி அவர்களிடம் தனியாக சென்று பேசலாம்.
3. அவர்கள் மீது அன்பும் அக்கறையும் காட்டி, அவர்கள் தேவனுக்குக் கீழ்படியும்படி அடிக்கடி ஜெபிக்கலாம்.
4. ஏற்கனவே சபையில் இப்படிப்பட்டவர்கள் இல்லை என இதைப் புறக்கணிக்கலாம்.

**தொடர் விவாதத்திற்கு:**

1. தவறுகளை உணர்ந்து கொள்ளுதல் என்றால் என்ன?
2. ஒருவர் தன்னுடைய குற்றங்களை உணரும் சில வழிகள் யாவை?
3. ஒருவர் தன்னுடைய குற்றங்களை உணர்ந்து கொள்ளும் சூழ்நிலையில் என்ன நினைப்பார்?
4. இதைக் குறித்து ஒரு கிறிஸ்தவர் என்ன செய்ய வேண்டும்?
5. குற்றத்தை உணரும் / வெட்கப்படும் நபர்களைப் பற்றி நாம் என்ன செய்வோம்?

# கடினமான போதகம்

## HARD PREACHING

**சிந்திக்க வேண்டிய வசனங்கள்:**

| | | |
|---|---|---|
| அப். 20:7 | 2தீமோ. 4:1,2 | 1கொரி. 9:27 |
| மாற்கு 16:15,16 | தீத்து 1:3 | அப். 5:42 |
| 1கொரி. 1:18,21 | ரோமர் 10:10–14 | |

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது:**

உண்மையை சொன்னதினாலேயே இயேசு ஒரு கடினமான போதகர் எனப் பட்டார். இப்படி அவர் பேசும்போது தவறுகளை சுட்டிக் காட்டியதால், அது அவருடைய காலத்து மதப்போதகர்களிடம் வெறுப்பை உண்டாக்கியது. இன்றும் இதில் எந்த மாற்றமும் இல்லை. இன்று அநேக மக்கள், தாங்கள் எதைக் கேட்க விரும்புகிறார்களோ அதையே நாம் போதிக்க வேண்டும் என விரும்புகின்றனர். அதனால் அவர்கள் சத்தியத்தைக் கேட்கவும், தங்கள் தவறுகளை சுட்டிக் காட்டப் படுவதையும் அவர்கள் விரும்பவில்லை. எது எப்படியிருப்பினும், ஆண்டவருக்கு உண்மையாயிருக்க வேண்டுமானால், நாம் சத்தியத்தை பேசித்தான் ஆக வேண்டும். அதற்காக, நாம் மிகவும் மோசமாக, மக்களை திட்ட வேண்டும் என்பதற்காகவே பிரசங்கம் செய்ய வேண்டியதில்லை. அதே நேரத்தில் நாம், சத்தியத்தை அவர்களுடன் ஒத்துப் போகாமல் பிரசங்கிக்க வேண்டும். நம்முடைய செய்தியை அநேகர் ஏற்றுக் கொள்ளும்படி நாம் உற்சாகப்படுத்த நாம் என்ன செய்யலாம்?

**சாத்தியமான தீர்வுகள்:**


1. சத்தியத்தைச் சொல்லலாம். ஆனால் ஒரே காரியத்தை மறுபடியும் மறுபடியும் சொல்லாதபடி ஜாக்கிரதையாக இருக்கலாம்.
2. வேண்டுமென்றே மக்களிடம் உணர்வுகளை பாதிக்கும்படி பேசாமலிருக்கனும்.
3. குழப்பங்களை உருவாக்கும் கேள்விகளுக்கு பதிலளிக்க மறுக்கலாம்.
4. மக்கள் என்ன நினைத்தாலும், சொன்னாலும், செய்தாலும் பரவாயில்லை என்று சத்தியத்தை போதிக்கலாம்.
5. செய்தியை நம்பி கைக்கொள்பவர்களுடைய அடிப்படைத் தேவைகளாகிய வேலை, உணவு மற்றும் ஆடை ஆகியவை சந்திக்கப்படும் என குறிப்பிடலாம்.

**தொடர் விவாதத்திற்கு:**

1. சத்தியத்தை, சரியாக போதிக்கும் வழி ஒன்றும், தவறாகப் போதிக்கும் வழி ஒன்றும் உள்ளதா?
2. ஒருவருடைய போதனைக்கு மக்கள் செவிகொடுப்பது என்பது, அவருடைய மனநிலையை பொறுத்ததா?
3. நம்முடைய பிரசங்கத்தை நாம் மேம்படுத்த முடியுமா?
4. நாம் நம்முடைய செய்தியில் (பிரசங்கிப்பதில்) சரியாகவும், மனோநிலையில் தவறாகவும் இருக்க முடியுமா?
5. சத்தியத்தை ஏற்றுக் கொள்ளும்படி மக்களை வற்புறுத்துவதில் நாம் அவர்களை அந்நியராக்க முடியுமா?



# மூடநம்பிக்கை



## SUPERSTITION

**சிந்திக்க வேண்டிய வசனங்கள்:**

அப். 17:22 அப். 8:9–24 அப்.25:19

**பிரச்சனை விளக்கப்பட்டுள்ளது:**

மூடநம்பிக்கை என்பது "அறியாமை அல்லது தெரியாததைப் பற்றிய பயம் அல்லது அதிசயம் மற்றும் வாய்ப்புகளில் நம்பிக்கை ஆகியவற்றின்மீது நம்பிக்கை அல்ல பயிற்சியினால்" உண்டாவதாகும். நீங்கள் நம்புவீர்களோ இல்லையோ, கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் அநேகர் கூட இந்த தீமையினால் கட்டப்பட்டுள்ளனர். அநேகர் நல்ல ராசி மற்றும் கெட்ட ராசி (Good luck and bad luck) மற்றும் நல்ல நேரத்தைப் பற்றிப் பேசுகின்றனர். மூடநம்பிக்கையால் கட்டப்பட்டவர்களும், சில எண்களை தங்களுக்கு எதிரானது என்று கருதும் சிலர், சில குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட காரியங்களைச் செய்வதில்லை. இது நிச்சயமாக கிறிஸ்தவ பண்பு அல்ல; மாறாக ஒருவர் இப்படிப்பட்ட காரியங்களை விட்டு எவ்வாறு விலக முடியும்?

**சாத்தியமான தீர்வுகள்:**

1. இதைப் பற்றி வேதாகமம் (பைபிள்) என்ன சொல்கிறது என படிக்கலாம்.
2. இப்படிப்பட்ட பயங்களை உடையது எவ்வளவு முட்டாள்தனம் என உணரலாம்.
3. ஒருவருடைய வாழ்வைப் பற்றிய அக்கறைக்காக தேவனை மட்டும் நம்பலாம்.
4. நம் ஒவ்வொருவர் மேலும் இப்படிப்பட்ட சம்பந்தமில்லாத காரியங்கள் எந்த பாதிப்பையும் ஏற்படுத்த முடியாது என உணரலாம்.
5. இது ஒரு முக்கியமான பிரச்சனை அல்ல என ஒதுக்கிவிடலாம்.

**தொடர் விவாதத்திற்கு:**

1. ராசி (Luck) என்றால் என்ன?
2. ஏன் நிறைய கிறிஸ்தவர்கள் கூட ராசி (Luck) என்ற வார்த்தையை உபயோகிக்கின்றனர்? (நல்ல ராசி, கெட்ட ராசி)
3. மூட நம்பிக்கை ஒருவருக்கு என்ன செய்ய முடியும்?
4. மூட நம்பிக்கை மதத்துடன் எவ்வாறு சம்பந்தப்பட்டது?